தீண்டான்காண்பொருளெடுக்க பூபன்றனும் திறமுடனேதப்பிக்க வழியேபார்ப்பான், பூண்டகமாயதிதமென்ற போக்குசொல்லி புனிதமுடன்தப்பிக்க வழியேகாண்பான், காண்டகமாமிந்தவித்தை யாருங்காணார் காசினியில்புத்திமான் காண்பான்பாரு, வேண்டியதோர்கருமமான மின்னமுண்டு விருப்பமுடன்சொல்லுகிறே னின்னங்கேளே. ()

கஸ்தூரி ஜாலம்.

கேளப்பாபுலிப்பாணி மைந்தாபாரு கெடியானகஸ்தூரி ஜாலமப்பா, நாளப்பாபோகாமலிந்தசாலம் நாட்டினிலேசெய்வார்களனந்தம்பேர்க்கு, மாளப்பாபுத்திமான் செய்யுஞ்ஜாலம் மகத்தானஜாலமது விநோதவித்தை, வீளப்பாஜெகஜால சூதுவித்தை விள்ளாரேயாருந்தான் விள்ளார்தானே. (௰௮)

விள்ளாரேகஸ்தூரி ஜாலவித்தை விளம்புகிறேன்மாணுக்கள் பிழைக்கவென்று, புள்ளானதடியொன்று மூன்றேயாகும் புகழானமச்சென்ற மாளிதன்னில், விள்ளவேநடுமையக் தன்னிலப்பா விருப்பமுடன்கோல்நாட்டி முக்கோணந்தான், கொள்ளவேமுக்கோணக் குச்சிக்குள்ளே குறிப்புடனேகரகமென்ற கலசம்வையே. (௰௯)

வைக்கவேகலசமதில் கலசம்வைத்து மகத்தானகலசமதில்வோடுவைத்து, வைக்கவேயோட்டின்மேல் தலைதானப்பா நலமானசெம்மறியின் தலைதானுகும், பொய்க்காமல்தலைமேலே சாணம்வைத்துப் பொங்கமுடன்சாணமதில் கலசம்வைத்து, மெய்க்கவேவகண்டமதில்தீபமேற்றி மேன்மையுடன்மந்திரங்க ளோதுவாயே. (௨௰)

ஓதுவாய்பஞ்சாக்ஷர வக்ஷரத்தை யுத்தமனே நூற்றெட்டு வுருதான்போடு, வாதுபுகழ்செம்மறியின் முகத்திலப்பா வண்மையுடன்வாடையென்ற கஸ்தூரிதானும், தீதறவேகள்ளனைத்தா னறியவேண்டி.

திகழானகஸ்தூரி தன்னையப்பா, சேதுபந்தமாகவல்லோ முகத்தில்பூசி செம்மலுடன்பதனமது செய்குவாயே. (உக)

செய்யவேகஸ்தூரி தன்னைத்தானும் சிறப்புடனேபூசியல்லோமை ந்தாகேளு, வெய்யவேமாளிதனில் கன்னம்போனல் வேகமுடன்திரு டர்களைப் பிடிக்குமார்க்கம், பையவேசந்தேகப் பட்டபேரை பாங்குட னேயாவரையுங் கூட்டிவந்து, கையவேமச்சென்றமாளிதன்னில் நலமு டனேசபைகூட்டி நிற்கச்செய்யே. (உஉ)

நிற்கவேயேகஜனஞ் சூழ்ந்துநிற்க பெழிலானகள்ளனைத்தா னறிய வேண்டி, துற்கையென்றகாளியது மந்திரத்தால் துப்புரவாய்நலகண் ட மோதுமபோது, அற்பமென்றுநினையார்கள் மாண்பரப்பா வப்போ தேயெடுத்தலனு மெங்கிநிற்பான், சொற்பமென்றதந்திரமந் திரத்தினு லே சோர்வடைந்துகள்ளனவன் முழிப்பான்பாரே. (உங)

பார்க்கயிலேகள்ளனவன் லகுவாய்நிற்பான் கருத்தினிலேசதாசிவ முந் திக்கிட்டேங்கி, தீர்க்கமுடன்வொவ்வொருவ ராகவல்லோ தீர முடன்மச்சென்ற மாளிகன்னில், ஏர்க்கவேசோதினைக்கு மாளிக்குள் ளே யென்தாயேயீஸ்வரியே தீண்டவில்லை, ஆர்க்கவேசத்தியத்தை செ ய்துமல்லோ அப்பனேமுகமதனைத் தீண்டிடாயே. (உச)

தீண்டவேவேண்டுமென்று சொல்லியல்லோ சோதினைக்குவுள் ளகற்றித் துலைவாய்நில்லு, ஆண்டகையேமாதாவே யென்றுனைத்து அங்ஙனவேயட்சதையைத் தூவுதூவு, மாண்டதொருசெம்மறியின்மு கத்தைத்தொட்டு மார்க்கமுடன்வொவ்வொருவர் வருங்காலத்தில், வே ண்டியேயவர்கரத்தை நீதானப்பா விருப்பமுடன்றுனைத்து முகத்தி லொத்தே. (உரு)

ஒத்தையிலேகஸ்தூரி மணந்தான்வீசும் ஓகோகோபொருளெடு க்கவில்லையென்று, சத்தியமாய்நீசொல்வாய் மகனேயப்பா சாங்கமுடன் பொருளெடுக்கவில்லையென்று, புத்தியுடன்பொருள்தொட்டேன்கரத்தி ல்வாசம் பொங்கமுடன்றுனிருக்க மாட்டாதப்பா, வெத்தியுடன்நீநினை த்து மாண்பர்தம்மை மேதினியில்சொல்லுவது தருமமாமே. (உசு)

தருமமாம்பொருள்களவு கண்டுதேறி தண்மையுடன்சொல்வது வே மனுதர்மமாகும், கருமமதுயெய்யாதுவுந்தனக்குக் காசினியில்நீயு மொருநீதவானுய், மருமமுடன்வையகத்தில் மாண்பர்க்கெல்லாம்வள மையுடன்குருசம்ப்ர போதவானுய், அருமையாயெல்லவரு முந்தனைத் தான் அப்பனேசதாகாலம் போற்றுவாரே. (உஎ)

போற்றுவார்தந்திரமாஞ் ஜாலவித்தைப் பொங்கமுடன்யாருக்கும் விள்ளவேண்டாம், ஏற்றியேகர்மிகளும் பாபியோரும் யெதாஸ்தான சண்டாளரனேகருண்டு, நாற்றிசையுமிருப்பார்கள் புண்ணியவான்கள் நவிலாதேயொருவருக்கும் நவிலவேண்டாம், மாற்றியேமாந்திரிக மென்றுரைத்து மருத்துவமாய்ஞானிபோ லிருந்திடாயே. (௨௮)

இருக்கையிலேயெல்லவரும் போதங்கொண்டு யென்குருவேயென்சாமி யென்றுமல்லோ, பெருக்கமுடன்பொருள்கொள்ளை யிட்டபேர்கள் பொங்கமுடன்வுனைத்தேடி வருவார்பாரு; தருக்கமதுமிகப்பேசி மகனேயப்பா தருவித்துப்பொருளதனைக் கொடுப்பேனென்று, அருட்கமலம்வீற்றிருக்கு மம்பாள்தானு மப்பாலேகூட்டிவைப்பா ளென்று சொல்லே. (௨௯)

சொல்லையிலேயெதிராளி வந்தபேர்கள் சொக்கியேயுன்வலையில் சிக்கியல்லோ, வல்லதொருகுருசாம்பிர தாயமப்பா வளமையுடனேந்தனது பொருளையப்பா, மெல்லவேதருவித்துத் தந்தாயானால் மேன்மையுடன்வுந்தமக்குப் பாதிபேவன், சல்லியங்கள்நேராது சுவாமியென்று தப்பாமலடிபணிந்து சேவிப்பாரே. (௩௰)

சேவிப்பார்கடவுளென்று வும்மைத்தானும் செகதலத்திலேமாண்பரெல்லா மயங்கியல்லோ, தாவியேசதாகாலம் பக்கலப்பா சட்டமுடன் காத்திருப்பார் கோடிமாண்பர், ஆவிபொருளுடலாதி யனைத்துமப்பா வப்பனேயுந்தமக்கு தத்தமென்பார், பாவியென்றநாமமது படைக்காமற்றான் பாருலகில்சத்தியனாய் வாழ்வாய்தானே. (௩௧)

தானுனைப்புவிப்பாணி மைந்தாகேளு தப்பாமலெந்தனது குருதானப்பா, தேனுனைகாலாங்கி நாயர்தம்மை தேற்றமுடன்சதாகால மனதிலுன்னி, பானுமனேனுன்மணிபாள் பாதம்போற்றிப் பான்மைபெறயெப்போதும் தொழுதுமல்லோ, கோனுனைகுருக்கள்மாரிஷிகள்தம்மை கொற்றவனேதானிணைந்து நடத்துவாயே. (௩௨)

நடத்துகையிலின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் ராஜாதிராஜரெல்லா மெய்ச்சுதற்கு, திடமானதந்திரமாஞ் ஜாலப்போக்கு செப்புகிறேன்மாணுக்கா யுந்தமக்கு, அடலானதந்திரமா மாயதந்திரம் அப்பனேயாருந்தா னறியமாட்டார், கடலானகள்ளனைத்தான் பிடிக்கவல்லோ காசினியிலின்னமொரு மதிசொல்வேனே. (௩௩)

பச்சரிசிஜாலம் கள்ளனைப்பிடிக்க.

மதியான ஜாலமொன்று சொல்வேனப்பா மகத்தானகாலாங்கிநாயர் தம்மை, துதியுடனேயான்வணங்கி துய்யபாலா துப்புரவாயுந்தனுக்குக்

கூறுவேன்யான், நிதிபோனகள்ளனைத்தா னறிவதற்கு நீதியுடன்தந்திரமாஞ் ஜாலவித்தை, பதியானகளவுசென்ற மாளிதன்னில் பட்சமுடன்றனைடுத்து செப்பக்கேளே. (௩௪)

செப்பவென்றால்நிதிபோன மாளிதன்னில் சிறப்புடனேநீசென்று ஜாலஞ்செய்வாய், ஒப்பமுடன்நிதியெடுத்த மாண்பர்தம்மை ஓகோகோ யாவரையுந்தானழைத்து, தப்பிதங்கள்நேராமல் மைந்தாகேளு தண்மையுடன்சந்தேகப் பட்டபேரை, மெய்புடனேயவர்கையில்வரிசியப்பா மேன்மையுடன்றனைடுத்துச் சொல்லக்கேளே. (௩௫)

கேளப்பாவவரவர்கள் கையிலப்பா கெடியானபச்சரிசிநிப்பபழந்தான், ஆளப்பாதனித்தனியே கொடுத்துமைந்தா வப்பனேயவர்களுக்கு வணக்கங்கூறி, மாளப்பாமாண்பர்களை நீங்களெல்லா மயங்காமல் பொருளெடுக்க வில்லையென்று தேளப்பாகொட்டினது போலேயப்பா தேற்றமுடன்யான்கூறு மொழியைக்கேளே. (௩௬)

மொழியானவார்த்தையது யென்னவென்றால் மோசமில்லைநீங்களுந்தா னடுங்கவேண்டாம், வழியுடனேபச்சரிசி வாயிலிட்டு வண்மையுடன்றின்மென்று மைந்தாகேளு, சுழியானவாயில்மென்ற வரிசிதன்னை சூட்சமுடன்பூமிதனில் முழியவேண்டும், பழியானவெலுமிச்சம் பழத்தையப்பா பான்மையுடன்வாய்தனிலே கடிப்பாய்தானே. (௩௭)

கடித்துமேயுபாசத்தை மாணுக்காளே கருத்துடனேபூமிதனில் முழியவேண்டும், துடிப்புடனேபொருளெடுக்க வில்லையென்று தூய்மையுடன்சத்தியங்கள் செய்யவேண்டும், நடித்துமேசோதனைகள்தந்துமல்லோ நலமுடனேசெல்கவென்று விடையுந்தந்து, முடித்துமேமங்கிரங்க ளோதிறைப்போல் முனையானதலைவாசல் முன்னேநில்லே. ( )

நிற்கையிலேமாண்பரெல்லாஞ் சோதினைகள்தந்து நிலையானநிலைதனிலே நிற்கும்போது, அற்பமென்றுநினையாமல் அவரவர்கள்தன்னை அன்புடனேதானினைத்து வப்பாகேளு, சொற்படியேயுமிழ்ந்த வரிசிதன்னை சொந்தமுடன்காட்டவென்று வினையங்கேளு, உற்பனமாயுமிழ்ந்ததொரு வரிசியப்பா ஓகோகோகுழம்பியே யிருக்கும்பாரே. (௩௯)

பாரப்பாபொருளெடுத்தோன் வரிசிதானும பான்மையுடன்பொடிபொடியா யிருக்கும்பாரு, நேரப்பாவெடுக்காத பேர்கட்கெல்லாம் நேர்மையுடன்வரிசியது குழம்பாய்நிற்கும், சீரப்பாபழமதுவுமுமிழ்ந்தபேர்கள் சிறப்பானநாவதனில் ரசமுண்டாகும், ஆரப்பாவெடுக்காதபேர்போடு கெல்லா மப்பனேரசமதுவு மதிகங்காணே.

காணவென்றெடுத்தவர்கள் மாண்பருக்கு கடிதானபழமதுவும் ரசந்தானப்பா, பூணவேரசமதுவுங் குறைந்துகாட்டும் புகழானவெலுமிச்சம் பழந்தானப்பா, தோணவேதிருஷ்டாந்திரங் கண்டுகொள்ளு தோராமல்சபையாற்கு கூறுகூறு, வேணதொருவுபசாரக் கள்ளனைத் தான் வேகமுடன்கண்டறிந்து செப்புவாயே. (௬௧)

செப்பவென்றால்நாவில்லை பாவுமில்லை ஜெகதலத்திலுனைப்போல மருத்துமுண்டோ, ஒப்பவேசபையார்முன் கள்ளனைத்தான் ஓங்காரமிட்டல்லோ யழைப்பாயப்பா, தப்பிதங்கள்நேர்ந்ததென்று மனதிலுன்னி தண்மையுடன்பொருளதனைத் தருவான்பாரு, இப்படியேஜாலதந்திரத்தினாலே யென்மகனேபொருளதனை வாங்குவாயே (௬௨)

மாட்சிமை கூறல்.

வாங்கையிலேபுத்திமானென்றுசொல்லி வார்த்தைசொல்வார் வையகத்திலுன்னையப்பா, தூங்கியேதிரியாதே மைந்தாகேளு துப்புரவாய்நீயுமொரு கெவுனியாவாய், ஏங்கியேயுனைக்கண்டோரெல்லோருந் தான் யெழிலுடனேயுந்தமக்கு வணக்கங்கூறி, பாங்கியர்கள்தன்முதலாய் பரிசுயீவார் பாரினிலேநீயுமொரு சித்தனாமே. (௬௩)

சித்தனென்றுசொல்லியல்லோ யுன்னையப்பா சிதாபாசக்கட்டளையை மனதிலுன்னி, பத்தியாய்திரிகால பூசைசெய்து பலகாலும்சிந்தித்துப் பணிவுகூறி, முத்திபெறநல்வழிக்கு வாளதாகி முயன்றமேயெப்போது முயற்சிவானாய், நத்தியேயுமதிடத்தில் சீஷனாக நாடோறும் பணிவிடைக்கு நிற்பார்பாரே. (௬௪)

பொரிஜாலம்.

பாரப்பாநெற்பொரியின் வித்தைசொல்வேன் பாங்கானநெல்லதுவுங் குறுணிகொண்டு, நேரப்பாசீலைதனில்முடிந்துதானும் நெடிதான சுண்ணாம்புக் காளைதன்னில், சீருடனேகிளிஞ்சிநடு மையந்தானும் சிறப்புடனேவைத்துமல்லோ கிளிஞ்சிமூடி, காருடனேதான்வித்துயெடுத்துக்கொண்டு கவனமுடன்முடிச்சதனை யவிழ்த்திடாயே. (௬௫)

அவிழ்க்கையிலேநெல்லதுவுங் காரமேறி அழகுடனேநெல்லதுவுங் கண்ணிற்றேற்றும் புவிதனிலே வெகுசனங்கள் கூட்டத்தோடு பொங்கமுடன்றானழைத்துக் கும்பல்சேர்த்து, பவிமதிகள்போன்றதொரு மாந்தருக்குப் பண்பானஜாலமொன்று சொல்வாயப்பா, துவிதமுள்ளநெல்லதனை சபையோர்முன்னே துப்புரவாய்பூமிதனில் கொட்தம்மையே. (௬௬)

கொட்டியேபலபேர்கள் பார்க்கவல்லோ கொப்பெனவேஜலமதனை நெல்லின்மேலே, திட்டமுடன்றான்றெளிப்பாய் மைந்தாய்நீயும் தீர்க்கமுடன்னெல்லெல்லாம் பொரியேயாகும், சட்டமுடன்பொரியெடுத்துப் பார்க்கும்போது சார்பானநெற்பொரியும் மெய்யதாச்சு, வட்டமுடன் நெருப்பில்லாய் பொரியுமாச்சு மகத்தானவித்தையது ஜாலமாச்சே. ()

ஜாலமென்றால்நெருப்பில்லாப் பொரியுமாச்சு சாங்கமுடன்கண்டவர்கள் மயங்கலாச்சு, கோலமுடன்பொரியெடுத்துச் சபையோர்முன்னம் பொங்கமுடன்றான்கொடுத்து பரிசுவாங்கி, தாலமுடன்வையகத்தில் சித்தனைப்போல் தாணிதனில்வெகுகால மிருந்துகொண்டு, சீலமுடன்லோகவதிசயமுங்கொண்டுசிற்பரனைப்போலிருந்துபூசிப்பாயே.

பூசித்துத்தானிருக்குங் காலந்தன்னில் பொங்கமுடன்மாந்தரெல்லா முன்னையப்பா, ஆசித்துவணங்கியேதான் வன்புகூர்ந்து வப்பனையெங்நாளும் பராம்புபத்தை. நேசித்துயுந்தமக்கு கருணைகூர்ந்து நெடுங்காலங்கார்த்திருப்பார் மாண்பரெல்லாம், காசிமிகப்பொன்னையெல்லாம் தருவார்பாரு கடாட்சித்தவர்களுக்கு கதிசொல்வாயே. (௪௯)

கசகசா மீன்ஜாலம்.

சொல்லவேபுலிப்பாணி மைந்தாகேளு சொற்பெரியகாலாங்கி தனைநினைந்து, வெல்லவேவசினையுள்ள மச்சந்தன்னை விருப்பமுடன்றானெடுத்துப் புனிதவானே, புல்லவேபனிநீரைத்தாமெடுத்துப் புகழாகசினைதனக்கு நித்தியந்தான், செல்லவேரவிதனிமேல சுறுக்குதாக்கு செம்மலுடன்சூரியனும் வலிப்பான்பாரே. (௫௰)

வலித்துமேசினைதானும பனிநீர்தன்னை வளமுடனேறான்குடித்துநிற்கும்போது, பலிப்புடையசினையெல்லா முதிர்த்துக்கொண்டுபசுதமுடன்கசகசாவில் கலப்பாயப்பா, சலிப்பின்றிபரணிதனி லடைத்துமேதான் சட்டமுடன்பதனமது செய்துகொண்டு, கவிதனிமேலவெகுமாண்பர்கூட்டத்தோடு களிப்புடனேஜாலமது செய்குவாயே. (௫௧)

செய்யவென்றால்ஜாலமது மாற்கந்கேளு செம்மண்ணுதொட்டியொன்று பாண்டமப்பா, துய்யநல்லசலமதுவும்பாண்டந்தன்னில் துப்புரவாய்நிறையவிட்டு புகலக்கேளு, பையவேபரணிதனை திறந்துமைந்தா பாலகனேபூரினிமேல வெகுபேர்காண்க, வையகங்கள்பிரமிக்கக் கசகசாவை வண்மையுடன்றானெடுத்துக் கொட்டுவாயே. (௫௨)

கொட்டையிலேஜனங்களெல்லா மயங்குவார்கள் கோடியிலேபுத்திமானொருவனுண்டு, சட்டமுடன்மற்றோர்கள் காணாரப்பா தாரணியில்காண்பதுவு மரிதேயாகும், திட்டமுடன்பாண்டமதை மூடிப்போடு

தீர்க்கமுடனுன்றனை நாழிகைதானப்பா, வட்டமுள்ளபாண்டமதை திறந்துபார்க்க வளமானசினையதுவு மீனுமாச்சே. (ருங)

ஆச்சப்பாசினையெல்லா மீனுமாச்சு வப்பனேகசகசாநின்றுபோச்சு, நீச்சப்பாசிறுமீன்கள் பொடிகளப்பா நிலையானபாண்டமதில் மேயலாச்சு, மேச்சப்பாபொரித்ததெல்லாஞ் சினைதான்கெட்டி. மேன்மையுள்ளகசகசா சொத்தையென்று, ஆச்சரியமாகவல்லோ வுரைப்பாயப்பா வருண்மைநாதாமெய்யென்று நமபுவாரே. (ருச)

நம்பியேமாண்பரெல்லா மேக்கங்கொண்டு நந்நிந்திப்பிரமித்து சோபித்தேதான, வெம்பியேமுகமவாடி யுளமகிழ்ந்து வேகமுடனுசீர்ம ரிகவுஞ்செய்து, தமபியேயெந்தன்குருநாதாபோகா காரணியிலுனைப்போல சித்தருண்டோ, கும்பியேயனைத்துவிட்டு வளங்களித்துக் கொப்பெனவேயாலதனிலே பணிகுவாரே (ருரு)

பணிகுவார்யெங்கன்குருநாதாவென்பார் பாரினிலேவெகுகோடிசித்தரென்பார், துணிவுடனேஜாலமெல்லாந்தந்த யென்பார் தோய்ந்தபொருளுள்ளதொரு கருவேயென்பார், சணிவுடனேகாயாதிகற்பங்கொண்ட கைலாசநாதமுனி கடவுளென்பார், மணியேபோன்றமேலாககுருவிவாதமினனென்பார் மாசற்றகுருவாமென்பாரப்பரே. (ருசு)

எலுமிச்சம பழவித்தை.

பாரப்பாயின்னமொரு கருமானமகேள் பாரினிலேயெல்லவருமபயந்தோட, ஆரப்பாவாசசரிய மானவித்தை வாரமோக நவுள்ளானறிவான்பாரு, சீரப்பாபிரிதிவா மெழுகினாலே சிறப்புடனேகத்தியொன்றுசெய்வாய்தானும, நேரப்பாசெம்பருக்கும சப்பாத்துப்பூ நெய்தானசெம்பசளைப பழத்தைவாங்கே. (ருஎ)

வாங்கியேசார்பிழிந்து மன்னுகேளு மசக்கானையிரும்பினிட கத்திமேலே, தாங்கியேதிரியாதே புத்திவானே துருப்புடனேசாறதனைப்பூசிப்பூசி, பாங்குபெறரவிதனிலே காயவைத்துப் பானமையுடன்கத்திதனைப் பதனம்பண்ணி, சாஙகமுடன்சபைகூட்டி மைந்தாகேளு சட்டமுடன்ஜாலமவிளை யாடுவாயே. (ருஅ)

ஆடுவாய்சபைபார்முன் செப்பகேளு வப்பனையோர்சிறுவன் புத்திவானாய், தேடியேகொண்டுவந்து கூட்டத்துள்ளே தெளிவுடனேயவன்கழுத்தில் நிம்பத்தன்னை, சாடியேகழுத்திலே நிம்பழத்தைச் சட்டமுடன்முன்றரித்து கயறுபூண்டு, வாடியேதிரியாமல் மயங்கிடாமல் மன்னவனேகத்திகொண்டு யரிகுவாயே. (ருகூ)

அரியையிலேயெழுமிச்சம் பழரசந்தான் வப்பினை ரத்தமது போ
லேசாயும், இறியையிதுமெய்யக்கிரியை சாலவித்தை கீர்த்தியுள்ளவித்
தையிது வெனப்பார்பாரு, சரியானஜெகஜால மிதுவேயென்பார் தாரணி
யில்செய்பவாக ளாருமுண்டோ, குரியானரதகமதுஜாலவித்தைதக கொ
ற்றவனே நமுக்கறியும் வித்தைதானே (௬௰)

தானைவித்தையிது சூட்சாசூட்சம தாரணியிலியாரேனும் காண்
பதுண்டோ, கோனைகாலாங்கி நாதரப்பா கொற்றவனுரைந்தனுக்குவு
பதேசித்த, தேனைவிர்த்தையிது தேசிவிகளை ஜெகதலத்திலகோடி
பேர் மயங்குவாகள், பானைபராபரியாள் கடாட்சத்தாலே பாலகனே
யுந்தமக்கு யோதினேனே (௬௧)

ஒதினேன்ஜாலமென்ற விநோதஜால மகாமயவையகத்தோர
பிழைக்கவென்று, நீதியுடனுந்தமக்குசொன்னேனையா நிஷ்களங்க
மாகவல்லோ வுரைத்தேனப்பா பாதிமதிதாங்கியத்தம ராமனே பாரு
லகில்சித்தனைப்போ லிருந்துகொண்டு, சேரயகோடிரகு சூட்சா
சூட்சம் கொலலுலகிலகண்பதற்கு வழிகொள்வாயே (௬௨)

கொள்ளவென்றெகுநபதத்தில் கொள்கைவேண்டும் கோரறு
தானகற்றி நடக்கவேண்டும், எவ ளவும் பயகுது கடுநத்திரமெய
ன்முகனேமனந்தப் ிலே நண்ணலேட்டப்பா, பாவமையிலே பிவருமப்புனித
வானே கமுடனேமெய்ந்நானும் நினைமேண்டும் விளவே வருமக
கு வுபதேசிப்பார சித்தாகளெல்லாரும் பேறுவாரே (௬௩)

பாஷாண சுபஜீவனமாம் சாந்தசேயம்து.

போற்றுவாரிவ்வண்ணொருக கமலமிசைநிமையலனை வெபாகமுட னுந்தமக
குக்கூறுவேயனையானை, ஆறுதலுட னகாலாங்கி நாதர்பிரானை யுடமேவ
ஞ்சுத்தி வருகும்போது, ... போது
கணமணியெய் ... 
ன்னைப்பார்த்து ட்சியுடன் ... நடந்தாரே (௬௪)

நினைத்து மனமிசக்க கொண்டு வந்து நிறைய ... நாகா
தாமும், புனைமுடனே நிலைத்தலிசிவ கொடுத்து புகழுடனே ... ளாக்
திரமாகவலமேல, சினையுநருவாசிக்கு நாலுகொண்டு சிறப்பானயிட
மதுவு மதிகமவிட்டு, பனைமுடனேதானமு ந்து வாழ்நேருந்தான
பட்சமுடனமணலகனிலே பதிந்திட்டாரே. (௬௫)

பதிந்துமேமுடிச்சியிலேமேல மணலைகொட்டி பாங்குபெறதீபத
னை மேலேமூடி அதிந்துமேயாசாம மெரித்தபோது வயமனேயா

ற்றுநீர் கசிந்துமேதான், துரிந்துமேயரிசியது யூறலாகி துய்யானின்
னிறமபோலே சாதமாச்சு, முதிர்ந்துமேபோகாமல பதத்தெடுத்து முத்
தமனேயெந்தனுக்குக தந்தாய்தானே. (௬௬)

தானுனகாலாங்கி நாதாகாமும தண்மையுடனேநதமக்கு கொடு
த்தஜாலம், கோனுனைகுருகொடுத்த ஜாலமப்பா கொற்றவனேயுந்தனுக்
கு யானும்தந்தேன், பானுனைபராபரியாள கடாட்சத்தாலே பாலித்தே
னுந்தமனுக்கு யிந்தபோகரு தேனுனஜாலமது யிந்திரஜாலம தேற்ற
முடனுலகுதனில செயவாயப்பா. (௬௭)

பாரப்பாவரிசியென்ற சாதமப்பா பண்புடனேயாகனைவர்கள பிரமி
ப்பார்கள், நேரப்பாபாணமில்லா விதகைப்பா நெடிதானதந்திரமா
ஞ்ஜாலவித்தை ஆரப்பாசெய்வாரக ளிந்தபோகரு அப்பனேயாமு
மகருச் சொன்னநீதி, சீரப்பாவுலகுதனில சித்தனேபோல் சிறப்புட
னேதாமிருந்து வாழுவாயே. (௬௮)

ஆடையிலே வைபகத்து மாணப்பரெல்லா மப்பனேயிந்திரமாஞ் ஜா
லமெனபார், கூடையிலேவெகுபேர்கள் மாண்பாதானும் குறிப்புடனே
யிச்சாலஞ் செயதுபாரப்பா, தேடையிலேபாணமில்லா சலமுமில
லா தேசத்தில்வித்தையிது சொகுசுமெத்த, நீடையிலேசபைகூடி செ
ய்துபார்த்து நீதியுடனுந்தனையும் வணங்குவாரே (௬௯)

வணங்கியேயேவலகளு மிகவுஞ்செயது வஞ்சலிகாமிகச்செய்து
வன்பாயப்பா, இணங்கியே சாடசோபசாரஞ்செயது யென்குருநீயே
ன்சாமி யென்பாரப்பா, மணங்கமழுந்தாமரையை வடிபணிந்து வைய
கத்திலெப்போதும் சதாநித்தந்தான், பணங்காசுமிகத்தந்து பலவாயீந்
து பாலகனேயெப்போதும போற்றுவாரே (௭௰)

போற்றுவாருனைநித்தம புண்ணியவானே பொங்கமுடன்சதாகா
லம் பணிவார்பாரு, சாற்றலுடன் திரிகாலம் பூசைகொள்வார சகாயித்
தம்யேவலகளு மிகவேகொளவார, ஆற்றலுடன சித்தனைப்போல் நீயும
ப்பா வயபமேயெப்போது மகிமைபூண்டு, நீறலுடன்சிவயோகம் பூ
ண்டுமல்லோ நீதியுடனிருந்துகொண்டு நிலையங்காணே, (௭௧)

ஆட்டுக்கடா, பண்ணிஜாலம்.

காணவேயின்னமொரு மாறகப்பாரு கருவானஜாலமப்பா வராக
ஜாலம், பூணவேகடாவொன்று வராகமொன்று பொங்கமுடன்கொண்
டல்லோ செப்பக்கேளு, தோணவேசபைகூட்டிவேந்தர்முனனே தோ
ற்றமுடன்டோலியென்ற மேளமப்பா, நாணவேடோலிகருள் வராகந்
தன்னை நாட்டமுடன்வாய்கட்டி யடைத்திடாயே. (௭௨)

அடைத்துமேடோலிக்கு யிருபக்கந்தான் அடவாகவாரிறுக்கிக்கட்டிப்போடு, படைமுகமும்பார்த்திருக்க சீஷனென்று பாலகனைமனதிற்கு வுகந்தமாண்பன், தடைகூடிசீஷனப்பா பாலனாகசற்பனைகள்தெரிந்தவனாய் தேர்ந்தெடுத்து, விடைதனக்குவுகந்தவனாய் ஞானமோதி வித்தகனைகழுத்தினிலே டோலிமாட்டே (எக)

மாட்டியேடோலிதனை யடிக்கச்சொல்லி மன்னவர்கள்பார்த்திருக்க நீயுமப்பா, கூட்டமுடன்வாடதனை சபையோர்முன்னே குறிப்பாககத்திகொண்டு வெட்டுவாய்நீ, தேட்டமுடன்வாடதுதான் வராகமாகும் தெளிவாகவுதிரமது பூமிநிற்கும், நீட்டமுடன்வாடதுவும ரூபமாறி நிலையானவராகமது வாகும்பாரே. (எச)

பாரென்றுசொல்லியல்லோ பாலர்மெய்ச்ச பாரினிலேதிரைகொண்டு மைந்தாநீயும், நேரேதான்டோலிதனை யடித்துக்கொண்டு நிஷ்களங்கமாகவல்லோ சபையார்முன்னே, வேரேதான்வுள்ளிருக்கும்வராகந்தன்னை விட்டல்லோவாடதனை யுள்ளேபோடு, நாரேதான்வாரசலே யிறுக்கிக்கட்டி நலம்பெறவேதிரையதனை யவிழ்த்திடாயே. (எரு)

அவிழ்த்துமேசபையார்முன் வராகந்தன்னை யங்ஙனேவிட்டுவிடு பிரமிப்பார்கள், புவிதனிலேயிந்தவித்தை ஜாலவித்தை புகழானவித்தையிது காணப்போகா, துவிதமுள்ளஜாலமது தந்திரஜாலம் துப்புரவாய்காண்பதுவு மரிதேயாகும், குவிதமுள்ளடோலினது வித்தைதன்னைக் குவலயத்தில்காணார்கள் மட்டிமாடே. (எசு)

மாடானவித்தையிது மகிமையப்பா மகிதலத்திலெவராலுங்கூறப்போமோ, கூடானகூடுவித்தை பாயும்வித்தைக் கூறினேன்வையகத்தில் நீதவித்தை, தாடாண்மைகொண்டதொரு வராகவித்தை தாரணியில்யாரேனுஞ் செய்வாருண்டோ, பாடானதந்திரமாம் ஜாலப்போக்கு பாலித்தேன்மாணாக்கள் பிழைக்கத்தானே. (எஎ)

ஆஞ்சனேயர் ஜாலம்.

தானானயின்னமொரு கருமானங்கேள் தன்மையுள்ளவாஞ்சனேயர் பிடித்துவந்து, கோனானகுருதனையே நினைந்துகொண்டு கொற்றவனே சிற்றுமணக்கு வித்துதானும், தேனானவித்தையதை யெடுத்துக்கொண்டு தேற்றமுடனாசனத்தின் வழியதாக, மானானவயறுநிறை கொள்ளுமட்டு மகத்தானகொட்டைதனை பொதிந்திடாயே. (எஅ)

பொதியவேகுழிவெட்டி வாஞ்சனேயர் பொங்கமுடன்தான்போட்டு மண்ணைமூடி, விதியானமார்க்கமது யோலேயப்பா வித்தகனேநாள்

தோறும் ஜலத்தைவிட்டு, பதியானநாள்கடந்து பார்த்தாயானால் பால கனேசெடியாகும் பண்பாய்க்கேளு, துதியுடனேகாயதுவும் காய்த்த பின்பு தூய்மையுடன்வித்ததனை யெடுத்திடாயே. (எ௯)

எடுத்துமேதயிலமது வாட்டியப்பா யெழிலானதயிலமதை பதன ம்பண்ணு, அடுத்துமேவழிஞ்சியின்றன் றயிலங்கூட்டி வப்பனேபாணி தனி லடைத்துநீதான், விடுத்துமேவிடுதியொன்று மச்சியொன்று வி ரிவானமாளியது வீட்டுக்குள்ளே, தொடுத்ததொருவிளக்கதனில் தீப மேற்ற தோற்றமடாவுன்ருபம் குரங்குமாமே. (அ௦)

ஆமப்பாவெளிநின்ற மாந்தற்கெல்லா மப்பனேதோற்றமடாகுரங் குருபம, போமப்பாவுள்ளின்று பேசும்போது பேரானருபமதுகுரங்கு போலாம், நாமப்பாவெளிநின்று பேசினுக்கால் நாயகனேயுமொரும னிதனப்பா, தாமப்பாயிந்தபடி ஜாலஞ்செய்து தாரணியில்பிழைப்பது வு மதிகமாமே. (அ௧)

அதிதமென்றவித்தையிது யார்தான்காண்பார் அன்பானபுத்தியுள் ளா னறிவான்பாரு, துதிதமுள்ளகருவிதனது ஜாலப்போக்கு தூய்மை யுடன்காணுபவர் சித்தனப்பா, பதிதனிலேயிந்தவித்தை செய்துமல் லோ பாலகனேகீர்த்தியது கொண்டுமேதான், மதிமயங்கயெல்லவருங் கண்டுயேங்க மானிலத்திலெப்போதும் துதிகொள்வாயே. (அ௨)

கொள்ளவேயின்னமொரு மார்க்கம்பாரு கூறுவேன்மெனதையர் காலாங்கிநாதர், உள்ளபடிகண்டதொரு வதிசயங்க ளுத்தமனேயானும து வெகுவாய்ச்சொல்வேன், வள்ளலுறைதென்னிலங்கைப் பதியிலப்பா வளமானவதிசயங்கள் கூறுவேன்யான், தெள்ளுறையாந்துவாபரத்தி லிலங்கையப்பா தெளிவானபதிமகிமை கூறுவேனே (அ௩)

கூறுவேனிலங்கைபதி மார்க்கந்தன்னை கொற்றவனேபுலிப்பாணி மைந்தாகேளு, தேறபுகழ்லங்கைப்பட்டணந் தன்னிலப்பா தேர்வேந்தராசர் களின் கோட்டைதன்னில், வீறுபுகழிராவணனார் கோட்டையப்பா வி ண்ணுழிகோட்டையது விளம்பப்போமோ, மாறுபடக்கோட்டையது வளப்பஞ்சொல்வேன் மகத்தானவதிசயங்கள் மெத்தவுண்டே. (அ௪)

இலங்கை யழிவுகூறல்

உண்டானதேசமது யிலங்கையப்பா வுத்தமனேவெகுகோடிகால முன்னே, கண்டேனே குளிகையது பூண்டுகொண்டு கண்கொள்ளாக் கோட்டையது யானுங்கண்டேன், அண்டர்முனிராக்ஷதர்க ளிருக்குங் கோட்டை வரசனதுராவணனார் கோட்டையப்பா, சண்டமாருதம்போ லக்கோட்டையுண்டு சாங்கமுடன்கற்கோட்டை கூரொண்ணாதே. ()

ஒண்ணுதுதேசமது நூறுகாத முக்கமனேகாடுவன பூமியெல்லாம், அண்ணூர்ந்துபார்க்கவொண்ணு கோட்டையப்பா வழகானகோபுரங்கள் மாபுரங்கள், சுண்ணும்புபூமியது வையகந்தான் சுற்றிலும்சாகரமோ வலைகள்மோதும், தண்மையுடன்யெங்காளும் வாலடைக்காற்று சாங்கமுடனிருப்பதுவுங் கண்டேனே. (௮௬)

கண்டதொருதேசமது யிலங்கைநாடு காசினியிலப்பதிபோ லெங்குமில்லை, உண்டானவதிசயங்கள் மெத்தவுண்டு வுலகத்திலெங்கேனும் கண்டதுண்டோ, திண்டானகோட்டைக்கு வகழிமத்தி திறளானசாளகர வாசலுண்டு. தண்டானவகழிக்குங் கடலுக்குந்தான் தாக்கான வழிதட்டு முண்டேபாரே. (௮௭)

பாரப்பாசலமதுவும் போக்குவுண்டு பாங்கானகோட்டைக்கு மகழிக்குந்தான், நேரப்பாசாகரமும் வழியுமுண்டு நிலைபானயிலங்கைபதி கோட்டைதன்னில், ஆரப்பாவெதுகால மிப்படியேயுண்டு வப்பனே வோடமது போவதுண்டு, கூரப்பாநெடுங்கால மிப்படியேயப்பா கூரானகோட்டையது யிருக்குந்தானே (௮௮)

காணுனகோட்டையது வாசல்தன்னில் தார்வேந்தன்மன்னனது செங்கோல்தன்னில், தேனுனமனோன்மணியாள் ரூபம்போல தேர்வேந்தர்சபைமுன்னே தோற்றலாச்சு, மானுனவசரீரிவாக்குகாணும் மன்னவர்முன்தன்செவிக்கு கேட்கலாச்சு, கோனுனவேந்தனுமே திடுக்கிட்டேங்கி கொற்றவனும்பயந்தல்லோ விழுந்திட்டாரே. (௮௯)

இட்டாரேதேர்வேந்த ராசர்தாமு மெழிலானகோட்டைக்குள் மத்தியானம், பட்டதொருராசர்முன் மாண்பரெல்லாம் பயந்தொடுங்கிகண்கலக்க மிட்டபோது, அட்டதிசைத்தான்கலங்கி சாகரந்தான் வடியோடையலையதுவு மேலேபொங்கி, சட்டமுடன்கோட்டைக்குள் சாகரந்தான் சடுதியிலேபொங்கியது முழுகலாச்சே. (௯௰)

ஆச்சப்பாகோட்டையது முழுகலாச்சு வப்பனேராஜாதிபடைகள்தாமும், போச்சப்பாகோட்டையது மண்மேடாச்சு பொங்கமுடன்மறுயுகத்தில் சாகரந்தான், பாச்சலுடன்பொங்கியல்லோ மண்ணொதுங்கி பாக்குடனேநிலையாழி சாகரத்தில், வீச்சலுடன்கோபுரங்கள் மாபுரங்கள் விண்ணுழிக்குள்ளாக மறைந்துபோச்சே. (௯௧)

மறைந்துமேயிலங்கையது போனபின்பு மகத்தானகோட்டைக்குள்ளிருக்கும்வாசல், திறைந்துமேகதவுகளும் கலசத்தோடு திரையாழிக்கடலதனில் சிகரந்தானும், உறைந்ததொருகோபுரத்தின் கலசமேல்

லாம் வுற்றதொருகறைவழியே காணலாச்சு, இறையோடுராவணனு மிலங்கைதன்னிற் றிட்டமுடனிருப்பரெனப் பேருண்டாச்சே. (௯௨)

பேருண்டாய்வையகத்து மாண்பரெல்லாம் பேருலகில்யெப்போது மிலங்கைதன்னே, சீருடனேபோற்றியது மிகவுஞ்செய்து சிறப்புடனேயெந்நாளுந் துதியேசெய்து, பாருலகம்சீதைபதி யிருக்குதென்று பூரண்மையுடன்வையகத்தோர் துதிப்பார்கண்டீர், தாருலகமழிந்துமல்லோ சேனையெல்லாம் தப்பாமல்கடவுள்பதி சேர்ந்தார்காணே. (௯௩)

## அரிசி ஜாலம்.

காணவேயின்னமொரு மாற்கம்பாரு கருவானஜாலமொன்று வரிசிஜாலம், தோணவேயரிசிதனை யெடுத்துக்கொண்டு தோற்றமுள்ளபடியொன்று பாத்திரந்தான், மாணவேபடிநிறைய வரிசியிட்டு மன்னவனேகூறெழுத் தாணிகொண்டு, நீணவேகிட்டணைகள் செய்துமல்லோ நினைவாகயெழுத்தாணி தன்னைவாங்கே (௯௪)

வாங்கியேசபையோர்முன் னாயிரம்பேர் வளமாகத்தானழைத்து செப்பக்கேளு, எங்கியேயெல்லவரும் பார்த்தொடுங்க யெழிலானகூரெழுத் தாணிதன்னே, ஓங்கியேகுத்தியல்லோ தூக்குவாய்நீ வுத்தமனேபடியதுவு மேலேயேகும், தூங்கியேதிரியாதே மைந்தாகேளு துப்புரவாய்ஜாலமது செய்துகாட்டே. (௯௫)

காட்டையிலேயெழுத்தாணி தானுமப்பா கருவானவரிசிதனைப்பிடித்துக்கொண்டு, வாட்டமுடனிற்குகின்ற வண்மைதன்னே வையகத்திலகண்டவர்கள்மயங்குவார்கள், தேட்டமுடனரிசிதனைக் கொட்டிகாட்டத் திறமுடனேகேட்பார்களாமேயானால், நீட்டமுடன்கொட்டியதைக் காட்டுவாய்நீ நிஜமென்றுஜாலமதை மெய்யென்பாரே. (௯௬)

பாரேதான்லோகமெல்லாம் பிரமித்தேங்கி பாலகனேயுனைக்கண்டு வஞ்சலிப்பார், சீரேதானுந்தமக்கு சிறப்புமுண்டு சிற்பரனைப்போலாக யெண்ணியல்லோ, நேரேதான்திரிகாலபூசையோடு நீதியுடனுபசரணை மெத்தவுண்டு வீரேதான்சதாகால முனைப்பணிந்து விருப்பமுடனெப்போதும் துதிப்பார்தாமே. (௯௭)

## கோழிமுட்டை புட்டிகளிலடைத்தல்.

துதியானயின்னமொரு ஜாலங்கேளு துப்புரவாய்கோழியென்ற முட்டைதானும், பதியானவரணமது மேலேயேற்றிப் பாங்குடனே காரமென்ற காடிதன்னில், விதியானமூன்றுநா ளூறப்போடு விருப்பமுடன்மூன்றுநாள் கழிந்தபின்பு, மதிபோன்றபூனீரங் கிளாசுபாத்திரம் மதிப்புடனேபோட்டடைக்க விதிதான்கேளே. (௯௮)

கேளப்பா சின்னவாய்க் கொண்டபாத்திரம் கெடியானபாத்திரமாம் வாயினுள்ளே, பாளப்பா போகாமல் முட்டைதன்னை பான்மையுடன் கையினாற் றள்ளமுட்டை, வீளப்பா தோலபோல வுள்ளேபோகும் விருப்பமுடன் மறுபடியும் பாண்டத்துள்ளே, நாளப்பா போகாமல் ஜலத்தைவிட்டு நாயகனே யொருநாழி பொறுத்திடாயே. (௯௯)

பொறுத்துமே ஜலமதனை யிறுத்துப்போடு பொன்னவனே யப்போதும் போலேயப்பா, நிறுத்துமே முட்டையது கல்லுபோலாம் நேமகனே பாண்டத்துள் ளிறுக்கக்கட்டு, நிருபமுடன் முட்டையது மகிமைவித்தை நிஜமுடன் யாரேனுங் காணமாட்டார், பொருத்தமுள்ள முட்டையென்ற வித்தைதானும் போக்கமுடன் மானுடர்கள் பிழைக்கத்தானே. (௱)

பசுவு பால்கறக்காதிருக்க ஜாலம்.

தானென்னவொரு ஜாலமாச்சம் கனைமையுடன் கூறுகிறேன் மைந்தர்களே, தேனுமனே ஞான்மணியாள் கிருபையாலே ஜெகதலத்திலனேகவித்தைச் செப்பக்கேளு கோனாகாலாங்கி நாதாகமமால் குவலயத்தில் கோடியுக மிருந்துமேதான், பானவசெய்யக்கா மிகவும் சொல்லிப் பாலித்தாரெங்களுக்கு கோடியாமே (௱க)

கோடியாம் பசுமாடு யிருக்குங் கூட்டம் கொறவனே சென்றுமே நதராபாரு, தேடியே கருமபுலியின் ரோமம் தன்னைத் தீவிரமாய்க் கொண்டல்லோ காற்றுவாடை நாடியேயோரிடமா வைத்துக்கொண்டு நலமுடனே கோனினருகே சென்று, பாடியே பால்கறக்கச் சொல்வாயப்பா பாலனைமாடெல்லா மோதுமபாரே. (௱உ)

ஓடியே பால்கறக்க மாட்டாதப்பா வுத்தமனே சமுசாரி யலைவான் பாரு, தேடியே மாடெல்லாம் பிடிபடான் பாரு நேசத்தில் மாடெல்லா மோட்டங்காட்டி, நீடியே யவனிடத்தில் வாராதப்பா பிச்சாங்காலாங்கி ஜாலமப்பா, கூடியே ஜனங்களெல்லாம் கட்டிப்பிடித்த கொம்பெனவேமயங்கியல்லோ நியங்குவாரே. (௱௩)

தியங்கியேயேமாந்து நிற்கும்போது திறமுடனே கோனினிடம் பக்கல்வந்து, மயங்கியே தோர் கோனைக் கண்டல்லோ தாய் மார்க்கமுடன் தானழைத்து மன்னர்களே, நயமுடனே யவன்றனக்கு குறிகள் சொல்லு நன்மையுடன் செம்பொன்னைக் கேட்பாயப்பா, செயமபெறவே காளியிட சாபத்தாலே ஜெகதலத்தில் மாடெல்லா மோடலாச்சே. (௱௪)

ஆச்சப்பாசாபத்தை நிவர்த்திசெய்து வப்பனேகாளிபூசைசெய்ய வேண்டும், மூச்சடங்கிப்பிரானதொரு மாடெல்லாந்தா னுத்தமனேமங்கைவந்து சேரும்பாரு, பாயச்சலுடன்வேகனைகயிட கொழுப்புதன்னை பாலகனேநீமறைவாய வைத்துவிட்டு கூச்சலுடன்பாஷைபாய் மங்கை மாட்டைக் கொடுபெண்வேதானைமுகக வருகுமபாரே. (௱௫)

பாரப்பா நகைகயலொரு சோதக பின்பு பரிவாககாளிகருப பூசைபோடு, நோபபாபூசையாழு நேருமபாது நெடு தானைசன்னதங்கள மிகவுமகூறி, ஆரப்பாய பார்ந்தவனம் கனிமிருக்கு மப்பனேகோனை சொலலகேளு ர, சீரப்பாயுந்தமக்கு குறைவுமில்லை சிறப்புடனேமாத மொரு பூசைசெயயே. (௱௬)

செயயவேகாளிக்கு காணிகயைப்பா செப்பியதொருத்தாரப் படிதானப்பா, உயயவேபெப்போதும பூசைமாந்த முகத்தமியேயாடுகிறனென்றுகூறி, பையவேகபபணமகா கட்டியதாலும் பாண்மையுடன்காணிக்கை தருவேனென்று, வெய்யவேகர்பூர வாலாத்திகொண்டு விருப்பமுடனேபோ மறியது செயவாயதாமே. (௱௭)

தாயானபூசைகொண்ட காளிதானும தன்மையுடன்சந்தங்கள் வந்தாற்போல, கோமானுமின்னையன்முன் னேகிநின்று கொற்றவனேகுறிசொல்லுஞ் சாலங்கனைளில், சாமானமாயதொரு குறிகளல்லோ தாரணியில்வர்போலுந் திகதுமுண்டே, போமேதான்சகலசித்துங் கடந்தஞானி பொயக்கமுடைகுறிசொல்லுந் திறமகளைபாரே (௱௮)

என்பாரேகருமபுமியின் கொழுப்பின்மார்க்கம பெரிலானவித்தையிது கூறப்போமோ, அன்பாவதொழுமா விருக்கவேணடு மவனுக்கேமர்மங்கள கூறவேண்டுமே, பண்மையாயபலபோகா கூடுவாரகள் பார்க்கையிலேகாமிகருந் தாமிகருமுண்டு, நன்மையுடன்வெகுவார்த்தை பேசியல்லோ நடைபெறவேகருகனையே கேட்பாரதானே (௱௯)

காணவேமர்மத்தைக கூறவேண்டாம காசினியில்மகிமைகள் மெத்தவுண்டு, பூணவேமர்மத்தை வெளிகாட்டாமல் பொங்கமுடன்ஜாலமதை செய்துகொண்டு, நாணவேவையகத்தில் வித்தைசெய்து நன்மையுடன்பிழைப்பதுவே மெத்தநன்று, கோணவேயிப்பாக மைந்தாபாரு தோற்றமுடனுந்தமக்கு வுரைத்ததாமே. (௱௰)

மீன் ஜாலம்.

உரைத்தேனேபுலிப்பாணி மைந்தாபாரு வுத்தமனேயின்னமொரு பாகஞ்சொல்வேன், கரைகின்றமருந்தினிட ஜாலமப்பா கண்கண்ட

வித்தையடா கூறப்போமோ, துரைத்தனத்தாமெய்ச்சுகினை ஜால
ம்பா தப்புரவாய்நானுரைப்பேன் துய்யபாலா, கரையானகுளங்கண்டு
மடிவுகண்டு கட்டழகாஜாலமது செய்யவாயகாமே (௱௰௧)

தானுனைவிதததுதான் பேய்கொட்டையாய தாககானஜாதியது
பெருவித்தாக, மானுனைவிதததுதான கொணடுவநது மகததானவக்கினி
யில வறுததபோல, தேனுனைவிததனே வறுத்தபின்பு தெளிவாகப்
பொடியாகி தனிலனைசத கோனுனைநுபததனை மனதிலெண்ணி
கொறறவேயெறதோநகரவுகனமைகலே. (௱௰௨)

கேளோதான் பாணிநைந்தாகரு கெடயாரமூரக மன்னனத
தேடி, பாளைதான்போடுமல கிளறிபபோக பாகசாசககொதிபிட்டு
வெடிதது்க்கொண்டு, பாலொதானதோயமலமத யாகம நலமாவமடு
வுதனில மாசங்களைந, ஆ நானாமநதைத தீரிக்கக வயபனைக
ரைததுவிடு நைநதயபோ (௱௰௩)

பாரேதான் போனதமெயவாய்நிறைநிலை பாக்கா மசசமெலலாந
தியககங்கொண்டு, செயதானமையாரம வந்துசேரும செயலானம
நுநதிவிட வேதகால, நமதானவததைவிட்டு வெகுபயம
வெகுதாநமசசமெலலாம கூறப்போமோ, விகரமாவிந்தனி மபக
சஙகொணடு விடுபவ்வேகுமலோ மோசநதனே (௱௰௪)

தானுனாஜாலவிரதை யசகிரசத காரணியில்நடசமதயறி
யாமானபா, கோனுனாக வாகுநதோமுசு முலாகாலவியாயாது
மெயவேயாகுப, தேறினாலவிகலை பாதுமலலோ தேசசநிலஞ
ஞைக்கலமோ மானாநநது, பானுனாய பியா ஈனா யாலே பா
விததவிகமைகயது பாரைமையமே (௱௰௫)

பானமையாயவிததைய றிதது நசசா பா காமமாயிடஞ்செ
ன்றுயானால, கேளப்பாஜாலமமிவயாசெயது தேறறமுட
னவாமனதுய கனிமயனடாமல, மெளனமாயமுநதனுக்கு வேணதீ
வாமேவரியிறுனைபபோல சித்தமுணடோ, பணமையுடனசிவரா
ஜயோகஞ்சொனன பாலபாயவெகுவகை விததைதாமே. (௱௰௬)

வித்தையாமிஜெகஜால விதகைகயபபா விநயமுடனுசசனுக்குவு
பதேசித்தேன், சுததமுடனனுமானப தேசவிததைக சூட்சாதிசூட்சமெ
லலாந திறந்துவிட்டேன், சித்தமுதமமெயமுதம நிலையாபூணடு நீணி
லத்திலநீயுமொரு சித்தனைபபோல, கததனையேயென்றுமனதிலுன்
னி கைலாயபதிபோல வாழ்நதிடாயே. (௱௰௭)

உடுக்கையுடைக்க ஜாலம்.

வாழ்வென்றுலின்னமொரு மாற்கம்பாரு வளமானவித்தையது கருதானப்பா, தாழ்வேபுலிப்பாணி மைந்தாகேளு தகமையுள்ளகண்மணியே புகல்வேன்பாரு, வேழமையாய்தேவதைகள் கூட்டத்தோடும் வெகுமாண்பருடுக்கோசைத் தன்னினோடும், சாழலெனும்வோசையது மூறிந்துபோக சட்டமுடன்யாமுரைப்போம் வளமைகாணே. (௱௰௮)

காணவேபேயோட்டு மந்திரவாதி கனமானபத்துபேர் மாண்பர்கூடி, தோணவேசிலம்பங்கள் போடும்போதும் துப்புரவாய்க்கூச்சலுடன் போரேவந்தால், வேணவேமர்மங்கள் மனதிற்கொண்டு வேட்கையுடன்வுடுக்கைதனை வுடைப்பதற்கு, நாணவேகெந்தகத்தின் திராவகத்தால் நலமாகக்குச்சிதன்னைற் கோடுபோடே. (௱௰௯)

போடேதாமெனதிராளி காணுமற்றான் போக்கானதிராவகத்தைத் தீட்டும்போது, நீடவேசவ்வென்ற சர்மந்தானும் நிஷ்களங்கமாகவல்லோ வெந்துமேதான், கூடவேயிருக்குமந்த காலந்தன்னில் கொப்பெனவேயெதிராளி வந்துமல்லோ, சாடவேயுடுக்கைதனை யடிக்கும்போது சட்டமுடனுடுக்கதுவுங் கிழியுந்தானே. (௱௨௰)

தானனவுடுக்கையது கிழியும்போது தாக்கானயெதிராளிமாண்பரெல்லாம், கோனனசற்குருவை மனதிலெண்ணி கொப்பெனவேமகதேவா வனியாயந்தான், தேனனவுடுக்கையது கடிகைமுன்னே தெளிவானவோசையது பாடிற்றல்லோ, மானனமயேஸ்வரியே யென்னபாவம் மங்கையரேயெங்கனுக்குக் கூறென்றாரே. (௱௨௰௧)

பூஜாலியின்பேரில் சன்னதம்வருதல்.

கூறென்றுசொல்லுகையில் பாலன்பேரில் கொப்பெனவேசன்னதங்க ளேகியல்லோ, ஆறென்றுயெண்ணாதே யெந்தன்மீதி லப்பனே சக்கலா தேவியப்பா, ஊரொன்றுயிந்தவூர் பதியுமல்ல வுத்தமனேவடகாசி வயோத்தியல்லோ, தேரென்ற பதிதனிலே வீற்றிருக்கும் தேவியல்லோசக்கலா தேவியாச்சே. (௱௨௰௨)

ஆச்சென்றுசொல்லுகையில் பாலன்றானும் வன்பானதோழரெல்லா மொன்றாய்க்கூடி, பேச்சொன்றும்பேசாமல் பின்னோடாமல் பிரியமுடன்மனதுவந்து தேவியார்க்கு, கூச்சலுடன்குறைநீக்கி யெங்களுக்கு கொம்பனையேசெய்தகுற்றங் கூறுமம்மா, பாச்சலுடன்மலையேறிப் பதியைத்தேடிப் பாங்குடனேபோகவென்றுவரங்கேட்டாரே. (௱௨௰௩)

கேட்டதொருமாண்பருக்குத் தேவியாரும் கிருபையுடன்மனங்களித்துக் கூறும்வார்த்தை, நீட்டமுடன்யெதிராளி மந்திரதந்திரம் நேர்

மையுடனீங்களல்லோ வறியாமற்றான், வாட்டமுடன்பகையாளி செய்தகுற்றம் வண்மையுடனறிவதற்கு மனமிருந்தால், தாட்டிகமாய்ச்செம்பொன்னைத் தட்டில்வைத்து சட்டமுடன்கேட்டாலே விதிசொல்வேனே. (௫௨௪)

விரியானவழிபதுவுங் கூறும்போது விருப்பமுடன்மாண்பரெல்லா மொன்றாய்க்கூடி, மதிமயங்கிச்செம்பொன்னை தட்டில்வைத்து யார்க்கமுடன்காணிக்கை யெர்வையென்ன, பதிகடந்துமாண்பருக்கு கருவின்மார்க்கம் பட்சமுடன்தாமுரைத்துப் பழியுந்தீர்த்து, நிரியனைத்தும்பெற்றல்லோ ஜாலதந்திரம் நீதியுடன்சித்தனைப்போல்செய்வாய்பாரே.

பாரேதான்கருவறிவான் புத்திவான்தான் பாரினிலேமற்றவரோ காணப்போரார், நேரேதான்வுலகமதில் ஜாலதந்திரம் நேர்மையுடனிப்படியே செய்வார்பாரு, சேரேதான்கிட்டிருந்து நிதிகொடுத்து சேர்வையுடன்தேவதைகள் மார்க்கங்கண்டு, கூரேதான்வையகத்தில் ஜாலஞ்செய்து கொப்பெனவேமாண்பரெல்லாம் பிழைப்பார்காணே. (௫௨௬)

இதுவும் வுடுக்கை வுடைக்க.

காணவேயின்னமொரு மார்க்கம்பாரு கருவானபுலிப்பாணி மைந்தாகேளு, தோணவேவுடுக்கைதனை வுடைப்பதற்கு துப்புறவாய்க்கருமான மொன்றுசொல்வேன், நீணவேவீரமென்ற காடிகாரம் நீதியுடன்தானெடுத்து மைந்தாபாரு, வாணமென்றவுடுக்கைதனைக் கையிலேந்தி வளமானகோட்டதுபோல் திந்திடாயே. (௫௨௭)

திந்துமேகாடியென்ற காரந்தன்னால் தீரமுடன்கிறலது வூணும்போது, வேத்துமேசவ்வதுவும் வந்துமேதான் வேதாந்தத்தாயினதுவுடுக்கைதானும், ஆத்துமேவெந்தனைந்து யிருக்கும்பாரு வப்பனைவுடுக்கையது மச்சந்தானும், கீத்தலுடன்கைதட்டியடிக்கும்போது கீர்த்தியுடன்வுடுக்கையது உடையும்பாரே. (௫௨௮)

உடைந்ததொருவுடுக்கையது காணும்போது வுத்தமர்கள்மாண்பரெல்லாம் திடுக்கிட்டேங்கி, படைமுகமுந்தான்கலங்கி பொறிகலங்கிபாங்கானமாண்பரெல்லா மதிகெட்டேங்கி, கடையானமாந்திரீக தந்திரஜாலம் கண்காணுவித்தையென்று கதறுவார்கள், விடையானபாலரெல்லாம் மெய்யென்றெண்ணி விருப்பமுடனதிசயித்து நின்றிட்டாரே.

பூசினிக்காய் ஜாலம்.

நின்றாரேயின்னமொரு மார்க்கம்பாரு நிலையானபுலிப்பாணி மைந்தாகேளு, வென்றிடவேமாணுக்கர் பிழைப்பதற்கு விருப்பமுடன்ஜாலமது சொல்வேன்யானும், குன்றானமலைக்கல்லு போலேயப்பா குழியா

ணமண்பாண்ட மொன்றுசெய்து, நன்றானவாயதுவுங் கலசம்போலே நலமானசிறுவாயாய் செய்திடாயே. (௩௱௰)

செய்யவேபாண்டமது கலசந்தன்னில் செயலானவித்தையது யெல்லோர்காண, பையவேபூசினிபாம் பிஞ்சுதன்னை பாங்குடனேமண்பாண்டந் தன்னிலிட்டு, மெய்யுடனேசின்னவாய்க் கொண்டபாண்டம் மெல்லெனவேபூசினிக்காய் வளர்ந்துமல்லோ, கொய்தபின்புதனையெடுத்துப் பாண்டந்தன்னை கொப்பெனவேரவிதனிலே வைக்கக்கேளே. ( )

கேளேதான்பாண்டமது ரவியில்வைக்க கெடியானகாயதும்பழமேயாகி, நாளேதான்முத்தினதோர் பழமுந்தானும் நலமானபாண்டமதி லுருளும்பாரு, சூளேதான்கலசமென்ற பாண்டந்தன்னை துப்புறவாய்ப்பதனமது செய்துகொண்டு, ஆளேதான்தலைமீதில் குடத்தைவைத்து வன்புடனேஜாலமது செய்வாய்தானே. (௩௱௨)

தானனசபையேறி வேந்தர்முன்னே சட்டமுடன்மானுக்கள்கூடிருக்க, கோனனவேந்தர்களும் திடுக்கிட்டேங்க கொற்றவனேபாண்டமதை முன்னிறக்கி, தேனனபூசினிக்காய் வேறங்கொன்று தேற்றமுடன்சபையோர்முன் கொண்டுவந்து, பானனபராபரியை மனதிலெண்ணி பக்ஷமுடன்ஜாலமது செய்துகாட்டே. (௩௱௩)

காட்டவேதனக்குகந்த சீஷனுக கருவாகயர்மமதை யவனுக்கோதி, நீட்டமுடன்பாண்டமதை யவன்கைதந்து நிறையவேஜலமதனைக் கொடுவாவென்று, வாட்டமுடன்பாண்டமதில் ஜலமும்நிற்க வாகுடனேவலுவேந்தர் பார்த்திருக்க, நீட்டமுடன்டமாமென்ற டோலிதன்னை நினைவாகயவன்கழுத்தில் மாட்டிடாயே. (௩௱௪)

மாட்டியேதிரைவளைத்து மறியம்பூண மார்க்கமுடனெல்லவரும் பார்த்திருக்க, தாட்டிகமாய்ரவிதனி லிருந்துகொண்டு சட்டமுடன்பூசினிக்காய்த் தனையெடுத்து, நீட்டமுடன்டோலியென்ற கச்சைக்குள்ளே நினைவுடனேயாருமதுங் காணமற்றான், பூட்டகமாய்ப்பூசினிக்காய்த் தனையெடுத்து பொங்கமுடன்டோலிக்குள் பொதிவாய்மூடே. (௩௱௫)

மூடியேதிரைநீக்கி மைந்தாபாரு முனையானபூசினிக்காய்க் குடத்துள்ளேகி, ஓடியேகாயதுவும் பாண்டத்துள்ளே வுதமனேயிருக்குகின்ற வயணம்பாரு, சாடியேஜலமதனை யகற்றிப்போட்டு சட்டமுடன்பாண்டமதைத் திறந்துகாட்ட, வாடியேகுடத்துக்குள் காயைக்காட்ட வண்மையுள்ளஜாலமென்று மயங்குவாரே. (௩௱௬)

மயங்குவார்குடத்துக்குள் பூசினிக்காய் மார்க்கமுடன்சென்றதொரு புதுமைகண்டு, தியங்கியேஜெகஜால மயேந்திரஜாலம தீர்க்கமுடன் மாந்திரீக மித்றகீடுண்டோ, நயம்படவேதாமுரைத்து மாணபரெல்லாம நாதாந்தசித்தனென்று நடுங்குவார்கள், செயம்பெறவேவித்தையிலு மித்தவித்தை செய்கிறதோரவனமைகண்டு பிரமிப்பாரே (௱௬௭)

பாரேதானிவ்வண்ண தந்திரஜாலம பாரினிலேகருவாரியறிவான் பாரு, நேரேதான்ஜாலமதை செய்துமலலோ நெடிதானபிரமமலபிக்கடந்தோன்போலே, சேரேதானமாணுக்கா கோடிமுன்னே செய்துமேதந்திரமாம ஜாலபபோகவில, நீரேதானபனை பந்தா மிக்கவெவாங்கி நீதியுடன்பிழைப்பதுவுந் தருமமாமே (௱௬௮)

தருமமாநுஜெகஜால தந்திரஜாலம தாரணியிலபிழைப்பதுவே நீதியாகும, கருமமாமறனெருநகை கொழிலிஞல காசினியிலவெகுபாவ மெய்துமபாரு, மருமமதுயாருக்கும வெளிவிடாமல மார்க்கமுடன் ஜீவனத்தைச செய்துகொண்டு, சொருபமெனறுநானுப தேசந்தனனை சுத்தமுடனபெறுபவனே சித்தனாம (௱௬௯)

சித்தனையபிறந்தாலும தீமைவேணடும சிறந்தலகிலபலபோகமதிபபேவேணடும, கத்தனுங்காலாங்கி போலேநாத்தி காசினியிலவர்போலேபெறவேவேணடும நித்தமுமேமனோன்மணியா ளருளேவேண்டும நீங்காதத்வகத்துறுதி கொளளவேணடும, பதியுடன்சித்துமன முறுதிவேணடும பாரினிலேநீயுமொரு நீதிவானே. (௱௭௰)

கறபூரவித்தை.

நீதியாமயிலனமொரு மாநகமபாரு நிலையானகருமான மொனறுசொல்லுவேன், சோதியேசுடரான மணிவிளக்கே தோறறமுடன்யாமுனக்கு வுரைபபேனபாராய, ஆகியாமகாபபூரமணிவிளக்கை யபபனேஜாலமென்ற மணிதான்சொலவேன், ஜாதியினிலுபாநகதொரு பூரமப்பா தணமையுளளபூரமது ஆலாத்தியாமே (௱௭௧)

ஆமேகானாலாத்தி காபபூரத்தை யடைவுடனேதானெறிக்க வண்மைசொலலுவேன், நாமேதானசொனனபடி மசசுமாளி நலமானமாளிகையில நடுமையத்தில, போமேதான்குடவிளக்கு தனனையப்பா பொங்கமுடன்பத்தடியாந தூரந்தன்னில, வேமேதான்விண்போகா வண்ணமபபா விருப்பமுடன்பத்தினையே வைக்கநகேள. (௱௭௨)

கேளபபாபுலிப்பாணி மைந்தாகேளு கிருபையுள்ளயெந்தனிரு கண்ணேயப்பா, யாளப்பாபோகாமல் புத்திமானே பாங்கானஜாலமொனறு செயவாயப்பா, நீளப்பாபதிமுகத்தி லிருந்துகொண்டு நீதியுடன்

சாந்தியது பூசைமார்க்கம், வேளப்பாநோயாளி முன்னதாக வேள்வியு டன்வோமமது செய்திடாயே. (௩௪௩)

செய்யவே நோயாளிப படிநிதானம் சேர்த்தியுடன்யாககுண்டம் வளர்த்தும்போது, பையவே பூசைமுகம கற்பூரகதி பாங்குடனேஜாலம து செய்யக்கேளு, துப்பநல்லதிமுறுகல பாஷாணத்தை துப்புறவாய்ஜலமதனில வைத்துக்கொண்டு, மெய்யுடனேஜலமதனைக கையிற்றேய்த்து மேன்மையுடனபாஷாணம பதனமகொளளே (௩௪௪)

கொள்ளவேதிமுறுகல் பாஷாணததை கொப்பெனவேவெண்ணீறில் தாங்கலந்து, விள்ளவேஓமமெசி யென்றுஓதி மிககவேகற்பூரம மேலிற்போடு, துளளவேசீஷனுககு கூறுமவார்த்தை துடியானகற்பூரம் விளக்கில்லாமல், அள்ளவேகுடிகொண்டு தீபமபோலே வாத்தாளேயெறியவென்று வடியந்தசொலலே. (௩௪௫)

சொல்லவேகற்பூரம விளககில்லாமல துப்புறவாய்ஜோதியுடனெரியுமபாரு வெல்லவேதீபமது நூறேநிறக வேதாநதததாயினது கடாட்சத்தாலே, மெல்லவேயறிநதவண்ணம தனனைபபாாகது மேதினியிலமாநதரெலலா மெபநகுங, கொலலவேவநததொரு பூதநதானுங கொப்பெனவேகற்பூர மெறியலாசசே. (௩௪௬)

ஆச்சப்பாஜாலமெனற தநதிரவேதை வதரணஙகள்கண்ணுலேயெறியலாச்சு, மூசசொடுங்கிபபோயிருந்தபூந்தானும முனேயானகொழுந்துவிட்டு யெறியுமவண்ணம டாச்சலுடனேமாணபாகளுங கணடுமலலோ பாங்குடனேயிதுபுதுமை ஜாலமெனபாா, ஆசசரியமானதொரு வித்தைதானு மவனியிலேபாரறிவாா புத்திவானே. (௩௪௭)

{ திருவெண்ணீரில்லாமல் கேணியில ஸ்நானஞ்செய்து சூரியனில் நிறக மேனியில வெண்ணீறகண்டது. }

புக்தியுள்ளபுலிப்பாணி மைநதாகேளு புனிதமுடனுநதமககு யினனஞ்சொலவேன், சத்தியமாயகருமான பின்னமொன்று சட்டமுடன்யாமுரைப்பேன் மைந்தாகேளு, வெத்திபெறமாணபாகளினாயிரம பேர் வேடிககைசிமிடடுவிததை விநோதம்பாரு, தத்துவமாய்சபையோர்கள் முன்னதாக சாபுடனேகரஙகுவித்து நிற்பாயபாரே. (௩௪௮)

பாரேதான்சபையோாகள் பாாத்திருகக பணபாககேணிதனிலிறஙகுமுனனே, நேரேதான்எரிகாலன பாலையபபா நேர்மையுடன்கரந்தனிலே குழப்பிககொண்டு, சீரேதான்மறவடமாய் நின்றுகொண்டு சிறப்புடனேவெண்ணீறபோல் குழைத்துபபோடு, நீரானபாலதுவுமாணபருக்கு திறமானவெண்ணீர்போல் தோற்றுதன்றே. (௩௪௯)

அன்றானவெண்ணீரைப் பூசிக்கொண்டு வன்பானகேணிதனில் வந்துநின்று, குன்றானபருவதம்போல் கோடிமாண்பர் கொற்றவர்கள் திருமுகத்தைத் தானும்பார்த்து, வென்றிடவேயேகாந்த நிஷ்களம்போல் விருப்பமுடன்ஜலமதனில் முழுக்கியேதான், சென்றுமேஜலத்தைவிட்டுக் கேணியேறி சிறப்புடனேசூரியனில் நிற்பாய்தானே. ( )

தானானஜலமதுவுங் காய்ந்தபின்பு சட்டமுடன்திருவெண்ணீர் காணலாகும், கோனானகுருபரனார் பூசைசெய்து கொற்றவனேதேவதாஸ்தலத்தைவிட்டு, தேனானமேனான்மணியாள் பாதங்கண்ட தேவிதனைப்பூசைசெய்த புனிதனென்பார், பானானபாஞ்சுடரால் மேனியெல்லாம் பாங்கானபட்டையது காணலாமே. (௱௫௧)

காணலாம்சிவயோக மாண்பன்போல கைலாயசித்துமுனி ரிஷிதானென்பார், பூணவேபிரம்மலபி கடந்தசித்து புகழானகேணிதனி லிறக்குஞ்சித்து, தோணவேயெரிகாலன் தம்பிரஜாலம் தோற்றமுடன்காண்பதற்குப் பிரம்மையாகும், நீணவேஜாலமாந் தந்திரபோக்கு நீதியுடன்செய்துமல்லோ பரிசுவாங்கே. (௱௫௨)

வாங்கப்பாராஜரிடம் பரிசுவாங்கி வளமுடனேவையகத்தில் சித்தனைப்போல், தூங்கியேதிரியாதே துய்யபாலா துரைராஜசுந்தரன்போல் யோகஞ்செய்து, ஏங்கியேமாண்பரெல்லாந் திகைக்கவேதங்க வெழிலானமாயவித்தை வெண்ணீர்வித்தை சாங்கமுடன்செய்துமல்லோதாணிமீதில் சட்டமுடன்காலாங்கி தன்னைப்போற்றே. (௱௫௩)

சங்கிலி ஜாலம்.

போற்றியேயின்னமொரு கருமானக்கேள் புகழானகாலாங்கி நாதர்தம்மால், தேற்றமுடன்பெந்தனுக்கு வுபதேசிக்க தெளிவானஜாலவித்தை மரக்காணந்தான், ஆற்றலுடன்மணத்தவனே கொம்பையாங்கி வப்பனேவுடம்பினுட னெய்யுங்கூட்டி, சாற்றலுடன்விலாங்கினது யிணைமுஞ்சேர்த்து சட்டமுடன்குழித்தயிலம் வாங்கிடாயே. (௱௬௪)

வாங்கியேதயிலமதை யிறக்கிக்கொண்டு வண்மையுடன்சீசாவிற் பதனம்பண்ணு, பாங்குடனேசிக்குமுகம் பாண்டஞ்செய்து பதனமுடன்மேல்வாயாங்களவாய் போல, தேங்கவேபாண்டமதில் கரியைக்கொட்டி தேற்றமுடன்தீயதனைப் போட்டுமல்லோ, ஓங்கவேசிறுகழியாம் விறகுதன்னை ஒப்பமுடன்போட்டுமல்லோ யெறித்திடாயே. (௱௫௫)

எரிக்கையிலேகொழுந்ததுபோ லெறியும்போது, யெழிலானசங்கிலியாம்வீரமப்பா, முரிக்கியதோர்சங்கிலியைத் தீயிற்போட்டு முனை

யானதியதனிற் காய்ச்சிக்கொண்டு, பரிக்கியேபலபேர்கள் மாண்பர்பார்க்க பட்சமுடன்நெய்யதனைக் கையிற்றேய்த்து, நெருக்கியேசங்கிலியை வுருவும்போது நெடிதானதீயதுவும் பற்றாதன்றே (எருசு)

அன்றானசங்கிலியைய பார்க்கும்போது அடலானதீயமது சுடர்போல்தோற்றும், குன்றானமலைகல்லு கரிகல்லப்பா கொப்பெனவேயிதுபோல வெடிக்கலாகும், சென்றுமேராஜரிடம ஜாலஞ்செய்து சிறப்பாயபரிசுமுகல யாவும்பெற்று, வென்றிடவேஜாலமது தந்திரஜாலம விதைமுடனசெய்துமல்லோ பரிசுகொள்ளே. (எருஎ)

கொள்ளவேவெகுபேர்கள் மெச்சும்பாலா குவலயத்தில்நீயுமொரு சித்தனைப்போல், எள்ளளவுங்குறையதுவும நேராமற்றான வெழிலான வித்தையது செய்துமல்லோ, வுள்ளபடிசிவயோகம ராஜயோகம வுத்தமனேசமாதியிலே நின்றுகொண்டு, கள்ளமில்லாதேவரிஷி தம்மைப்போல காசினியிலவெகுகாலம வாழ்குவீரே. (எருஅ)

வாழ்கையிலேயுமைக்கண்ட மாணப்ரெல்லாம வையகத்திலிவர்போலுஞ் சித்துமுண்டோ, தாழ்மையுடனயுமைப்பணிவார கோடிமாண்பர் தாரணியிலுனைக்கிடு வொருவநுண்டோ, ஆழ்மையுள்ளமாண்பாலா புத்திவானே வவனிதனிலஜாலவித்தை செய்துகொண்டு, மேழ்மையுடன்பூலோக வாழ்க்கைதனனில மேதினியில்யெப்போதும் வாழ்குவீரே. (எருகூ)

பேயாட.

வாழ்வேயின்னமொருகருமானங்களை வண்மையுள்ளபுலிப்பாணிமைந்தபாரு, தாழ்வேரெண்டகமாஞ் ஜாதிப்பபா தாகதானபூசாவிசெய்யுமாற்கம, ஆழ்வேபேயகொண்ட மாண்பாதம்மை வன்புடனேதாமழைத்து சபையோர்முன்னே, சாழலுடன்பேயாட்டங் கொள்ளுமாற்கம சட்டமுடனதேவதைகள வரவுதானே. (எசுய)

தானானபேய்கொண்ட மாணபருக்கு தாககானகருவொன்று சொல்வேன்பாரு, தேனானதேவிமனோன மணியாள்பூசை தேறமுடன்தானமைத்துக் கும்பமவைத்து, கோனானகுருபரனைத் தியானஞ்செய்து கொப்பெனவேவுடுக்கோசைக தனையடித்து, மானானமந்திரத்தை யுச்சரித்து மார்க்கமுடனபேயாட வழிசொல்வேனே. (எசுக)

வழியானதேவதையைத் தானழைத்து வளமையுடன்ஜெபதபங்கள் மிகவேயோதி, பழியானமுப்பலியுந் தான்கொடுத்து பான்மையுடன்வோமமது செய்யும்போது, சுழிமாரிமயக்கமது வதிகக்கொண்டு

சுடரொளியாந்தீபமுகம் பார்க்கும்போது, குழிபோன்றகண்ணிரண்டு மிருளுந்தோன்றி குப்புறவாய்லாடகவி பேசுவாரே. (௱௬௨)

பேசியேகூந்தலது வதிகமாகி பேரானமராட்டகமுமமிகவுங்கூறி, ஆசித்துப்பூசித்துக் கரங்குவிகது வப்பனேதேகமது நடுங்கலாகி, நாசி தனில்சுவாசமது மிகவேயோங்கி நக்ககமுடன்குறட்டையது வதிகமாகி, தூசிபடமேனியது பிரண்டுமல்லோ துள்ளியேபற்கடித்து யெழும்புவாரே. (௱௬௩)

எழும்பியேவேதாள மாககரித்து யெழிலானபிடாரிபலி கொண்டபேய்போல, தழும்புபடாமேனியது தழுமபுமாகி தற்பரனுஞ்சொரூபமதைக் கண்டாறபோல தொழுமபடவேதலைவிரித்து ஆட்டங்கொண்டு தோற்றமுடன்வெகுபினதத லதிகமாகி, அழுதுமேயாயாசத் தியககமாகி வப்பனேகரங்குவித்து வாடும்பாரே. (௱௬௪)

பாரேதானசினமயத்தைக் கண்டாறபோலே பட்சமுடன்வுதிரமதை வாயாற்நககி, நேரேதான்பூஜைமுகந தன்னைக்கண்டு நேர்மையுடன்யோர்வையது பெனகவொவ்வாது, சீரேதான்பிதுர்வனத்தை சுத்துமாண்டி சிறப்பானஓங்காரப் பேயதானலவோ, கூரேதான்பூஜையது மயானபூஜை கொபமெனவேயெநதனுக்குத் கருவீதாமே. (௱௬௫)

தாமானபேயாட்டங் கொண்டமாண்பர் கண்மையுடன்பூஜைமுகம யோர்மையிலலே, நாமானமாகவல்லோ வேதமோதி நடுச்சாமப்பூஜையது செய்வேனென்றும, வேமானலாடகவி முனிதானென்றும் விட்ட குறையிருநததினு லிங்கேவந்தேன், சாமானியமானதொரு முனிதானலல தத்துவததிறபேர்கடநத முனிதான்பாரே (௱௬௬)

முனியானமுனியல்லோ பிரமமராட்சி முதுலகைக்கடநதொரு ஞானசித்து, சனியானராடசதனு மெனத்தொடாநது தாரணியில்கேணிதனில விழுநதபூகம, பணிபோன்றமலைவளத்தை சுற்றுமபூகம்பட்சமுடன்பிடாரிகளை வணஙகுமபூகம, தனியானதததுவஙக ளதிகங்கொணட தயாபரியைமறவாத பூதமாமே. (௱௬௭)

பூதமாமபேயாட்ட முபபததிரெண்டு பூதலத்திலமிககூறும் மதிதவித்தை, நீதமுடன்சற்பனேயோ டோபசாரம் நீதியுடன்நடபபதுவுஞ்சிலதுபூதம், நீதமுடன்தலைவிரித்த லாட்டங்கொண்டு திகழானவார்த்தைகளும் மிகவேகூறும், தோதகமாய்மலையரிப் போரேவனென்றும் தோற்றமுடன்சிலபூதங் கூறுங்காணே. (௱௬௮)

காணவேயிந்திராதி ஜாலமப்பா கருவானகருவிகளும் மையினாலும், தோணவேயட்சரத்தின் பூட்டகத்தான் சொல்லாலும் வில்லாலுங் கரணத்தாலும், பூணவேகாஞ்சேரிப் பொடியினாலும் புகழானதிருவெண்ணீர் கலப்பினாலும, ஆணவங்கள்தானொடுங்கிப் பேய்கள்தானும் வன்புடனேவாய்திறந்து கூறுந்தானே. (௱௬௯)

தானானபிரணவத்தை யுச்சரித்து தன்மையுடனகஸ்தியனார் காண்டந்தனனில், கோனானவென்பாட்டன குமபயோனி குருசொன்ன காவியம்பன்னீராயிரந்தான், தேனானகாண்டமது பன்னிரண்டுக்குள்ளே திறமானமுதற்காண்டந் தன்னிலப்பா, மானானஇலங்கைபதி வேந்தனுக்கு மகத்தானமைமொன்று கூறினாரே. (௱௭௰)

கூறியதோர்மையதனை லனைசித்து குவலயத்திலாடலாம பேய்தனக்கும், மீறியதோர்மையினை லஷ்டசித்து மேதினியிலவெகுகோடி மாணபரப்பா, சீறியதோர்வேதாளம பேயாட்டமெல்லாஞ் சிறப்புடனேகருவென்ற மையினாலே வீறியதோர்கருமானந் தன்னைகொண்டு விட்டகுறைதனையகற்றி செய்வாய்பாரே. (௱௭௧)

செய்யவேமையினுட பெருமைதானும சிறப்பானபூதலத்திலெவராலாகும், வெய்யவேவிட்டகுறை யிருந்தவர்க்கு மேதினியிலம்மைதான் பலிக்குமபாரு, துய்யநல்லமையாதுவுஞ்செய்வாரானால் துரைராஜசுந்தரனைக்காணலாகும, மெய்யானமையினிட போகருதன்னை மேதினியிலகாணபவமனை சித்தனாமே (௱௭௨)

சித்தனமப்பூ புலகில நிஷ்தானென்பார் சிறப்பானகருவிகர னறியுமோனோன், முத்தனுமமுதுலகைக் கட்டகருநானி முனையானபிரமமலுகடந்தோனென்பார், சத்தியத்தைக்கவருக வேள்வியோனும தாணிபதியுலகாளும ராஜனென்பார், நித்தியபூமபிராணநிலை கலையில்நின்று நிஷ்களங்கமானசுட ரென்பாரதாமே. (௱௭௩)

சுடரானவையகத்து சித்தனென்பார சூட்சாதிசூட்சமதைக் கட்டந்தஞானி, அடலானமாணபரெல்லாம் வணங்குஞானி வவனிதனில் விட்டகுறை யிருந்துதானால, திடமானஞானியென்று போவகுப்பான் தீர்க்கமுள்ளஜெகஜால மந்திரவாதி, மடலானதத்துவங்கள் தொணணூற்றாறும் மார்க்கமுடன்தானறிந்த மதியவானே. (௱௭௪)

மதியானமையினுட மார்க்கத்தாலே மகத்தானலோகமெல்லாம் வசியமாகும், கதியானமோட்சமென்ற மாளிதானும் காணிக்கையெப்போதுங் கழரொண்ணாது, விதியானவிதியிருந்தால் மையின்போக்கு வி

ணிலேபோகாது சதாகாலந்தான், துரியானயிலங்கைமன்னன் மையி ஞலே தொல்லுலகோர்யெப்போதுந் துதிப்பார்காணே. (௱௭௫)

இல்லரத்துப்பெண்கள் தேவதாயொய் மசக்கல்.

காணவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கருவானபொய்மச க்கல் தலையாட்டந்தான், பூணவேகும்பமது சலசம்வைத்து பொங்கமு டன்பேயாட்டங் கொள்ளும்போது, தோணவேலாகிரிகள் வஸ்துவா லும் தொல்லுலகில்மாதர்மேல் சன்னதங்கள், வேணபடிதன்மீதில் வந் தாற்போலும் வெகுபிரட்டல்தலைசுழட்ட லதிகந்தானே. (௱௭௬)

தானதெய்வமது வினைகங்கொண்டு தாக்கானசன்னதங்களதிக மாகி, கோனதன்புருஷன் றன்னைநோக்கி கொற்றவாயெந்தனுக்கு யேர்வையில்லை, மானமைத்துவங்க ளதிகங்கொண்டு மன்னவர்க்கு தெய்வமது கூறினாற்போல், பானைகரங்குவித்து தலைமேற்கொண்டு பாலகனேபூஜையில்லை யென்பார்பாரே. (௱௭௭)

மாதுதெய்வத்தால் சமுசாரிமயங்கல்.

பாரேதான்கன்னியர்மேல் சன்னதங்கள் மாலாயவடிவேலர் தன் னைப்போல, நேரேதான் நிற்கிறவ ராரோநீர்தான் நீதியுள்ளவாண்பிள் ளை நினைவாய்க்கேளீர், சீரேதானுந்தனிட மாளிதன்னில் சிறப்பானபூ வாடைக் காரியப்பா, வேரேதான்கட்டுதற்கு வாடையில்லை வித்தகனே மனங்கலங்கி நிற்கின்றாயோ. (௱௭௮)

நிற்கவேபூவாடைக் காரிதானும் நிஷ்களங்கமாகவல்லோ வெகு காலந்தான், துற்கையென்றபெரியது தானுமல்லோ துரியானகாட் டேரி சின்னானப்பா, சொற்பழுதுவாராத கழுப்பன்றானும் சுடரொளி யாஞ்சத்தகன்னி மாதுதானும், கற்பமலைதஆவிகொள்ளும் ரத்தமுண் டி. கருவழிக்குமடனது நானுந்தானே. (௱௭௯)

நானதெய்வமடா பூவாடையப்பா நன்மையுடன்சித்தடிமேல் மையல்கொண்டு, கோனதேவதைகள் வாடைகட்டி கொப்பெனவே சன்னதங்களதிகங்கொண்டு, தேனைநடுவீட்டுசெல்லியாத்தாள் தெளி வானவங்காள பூடிதானப்பா, மானையீஸ்வரியா ளெல்லைக்காத்தாள் மகத்தானதெய்வமது வந்திட்டோமே. (௱௮௰)

வந்திட்டோமென்றல்லோ மையலாகி மகத்தானசன்னதங்க ளதி கங்கொண்டு, குன்றானபுருஷனையும் மிகவேநோக்கி குடிதனக்குவனர் த்தங்கள் நேர்ந்ததென்று, இன்றுமேயெந்தனுக்கு யிந்தபூஜை யெழி லானபூஜையது யேர்வையில்லை, கன்றதுதான்பூஜையது பரியேகொ ண்டு காணிக்கைவைத்தாலே யேர்வையாமே. (௱௮௧)

ஏர்வையாம்வையகத்துப் பெண்களெல்லாம் எழிலானபுருஷனை யுந் தூஷணிப்பார், சோவையாமசினபதிப் பெண்களெல்லாம் சிறப்புடனேபுருஷனையும் போற்றுவார்கள், பார்வையாங்குளிகையது கொண்டுமல்லோ பாருலகமெழுநாடலுஞ் சுத்திவந்தேன், நேர்மையாஞ் சீனபதிப் பெண்களுக்கு நெறிமுறைகள்தத்துவங்கள் மிகவுண்டாமே.

உண்டானதெய்வமது யாதுமில்லை வுத்தமனேகடவுளன்றி வேறொன்றில்லை, பண்டானபொய்கொலைகள் களவுமில்லை பாங்கானகாமமது வொன்றேயுண்டு, திண்டானவிசுவாச மருளுமுண்டு திறளானபாவமது மில்லையப்பா, கண்டேனே சீனபதி மார்க்கத்தோரை காசினியிலகாலாங்கி கடாட்சந்தானே. (௩௮௩)

தானென்ற காலாங்கி கடாட்சத்தாலும் தாக்கான மனோன்மணியாள் கிருபையாலும், மானென்ற நாலுயுகங் கடந்துவந்தேன் மகத்தானவையகத்தி லெல்லாருந்தான், கோனென்ற சீனபதிப் பெண்களநீக்கி குவலயத்திலெல்லோரு மிந்தமார்க்கம், வேணென்ற வெட்டவெளி மயக்கத்தாலே விருதாவாய்மாண்பரெல்லா மயங்கினாரே. (௩௮௪)

பிரதமை நடக்க

மயங்கவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் மகத்தானபுலிப்பாணி மைந்தா கேளு தயங்கவே தந்தி மாறு ஜாலஞ்சொல்வேன் தாக்கானமானிடர்கள் பிழைக்கவென்று, புயங்கமுடன் நோயாளி சாந்தியப்பா புகழானபிணிகொண்ட மாண்பருக்கு ஜெபம்பெறவேசாந்தியதுசொல்வேனப்பா செய்கின்றமார்க்கமது பண்பாய்க்கேளே (௩௮௫)

பண்பானநோய்கொண்ட பிணியாளர்க்குப் பாகமதுசொல்லுகிறேன் பான்மையாக விண்ணமுடன் மச்சென்ற மாளியப்பா திறமுடனேகிழக்குமுக மாகவல்லோ, நன்மையுடன் கொலுக்கூட மொன்றமைத்து நாதாந்தக்கூடமது யேகவட்டம் வண்மையுடன் சோட சமாந் தூணிறுத்தி வாகுபெறசிம்மபத்தின் பூசைசெய்யே (௩௮௬)

செய்யவேமயானத்தின் பூசையப்பா செப்புகிறேன்வருணமைந்தா கேளு கேளு உய்யவேகும்பமென்ற கலசமப்பா வுத்தமனே நடுமையம் தன்னில்வைத்து, பையவேநவகோண வாசல்விட்டு பாகமுடன்கலசமென்ற பாண்டமப்பா, மெய்யுடனே தானியமா மென்பதாகும் மேன்மையுடன்கலசமதில் கீழ்வையே. (௩௮௭)

கீழானகலசமது தன்னிலப்பா கிருமையுடன் தானியங்கள் வைத்த பின்பு, தாழானகுடுவைக்கு நூல்சுற்றி தகைமைபெறக்குச்சதுதான்

நாலதாகும், நீதானசாணமது வொன்றேயாகும் நீதியுடன்நடுமையும் த
ன்னில்வைத்து, சாழான தேங்காயை வதின்மேலப்பா சட்டமுடன்வை
த்தல்லோ மஞ்சள்பூசே. (௱௮௮)

பூசியேகுங்குமமுந் தானணிந்து புகழானமாயிலையும் புஷ்பஞ்சா
த்தி, ஆசியேஅவலுடனே கடலையப்பா வனபாகமுககனியும் கொண்டு
போறறு, வாசியென்றபிரணவத்தை மனதிலமாறி மகதேவாயெந்தனே
யுங காருமென்று, தேசியென்னு மழமதுவே கீறியப்பா திக்கெட்டும
போட்டுமல்லோ செப்பகேளே (௱௮௯)

செபமவென்றுல்வஸதுமுதல மதுபானங்கள செமமலுடன்பல
கார வாககமெலலாம, ஒபபமுடனறனமைதது புணணியவானே ஓ
கோகோநாதாககள செயயுமவணணம, தபதிகங்களநேராமல மன்னு
கேளு தணமையுடன்சோடசமாம பூசைமாறகம நெபபமுடன்றன
மைதது நீநிவானே நிஷ்களங்கமாகவலலோ நேமியபாயே (௱௯௰)

நேமமுடன்செமமறியின தலைதானபபா ரோமையுடன்கொணடு
வந்து மைநதாகேளு, தாமமுடன்கலசதநிற கெதிரேவைததுச சட்ட
முடன்வகணடமது மேலேவைதது, ஓமமுடனயாகமதுசெயவாயபபா
வுதகமனேயாயிரநதா னுருதானபோடு, சாமமதுநடுச்சாம வேளையப்
பா சாநதிபதுசெயயுமவகை தணமைபாரே. (௱௯௧)

பாரபபாசாநதியது செயயுமபோது பட்சமுடனபிரமையது போ
வதறகு, நேரபபாநோயாளி தனனிலபபா நோமையுடனகிரகமது போ
வதற்கு, சிரபபாசடையதுவால பொயமையொன்று சிறபபுடனேதான
மைதது வுபாயங்கேளு, ஆரபபாதானறிவா வுபாயமாறக மபபனே
சொலலுகிறே னுபாயததானே. (௱௯௨)

தானனபிரதமைககுவாடைபூண சேட்டமுடன்வாபரணமெலலா
மபூணடு, கோனனகாலாங்கி சொனனவாககு கொறறவனேபிசகாம
லாமைதனனே, பானனயாமையது கொணடுவநது பாலகனேபிரதமை
யின் பாதத்தினகீழ, தேனனவுளுநதினிட மாவையபபா தினஙமபெற
யாமையது ஓட்டிறபூசே. (௱௯௩)

பூசியேபிரதமையின பாதநதினகீழ் புசழாகயாமைதனே பொதிந்
துபோடு, காசியென்றபடடினல பாதநதொடடு பாங்குபெறவுடுப்பது
வு மணிநதுமலலோ, தூசிபடாபாதமது தெரியாமற்றன் துப்புரவாய
பிரதமையைச் சாய்த்துவைத்து, கூசிடாவண்ணமது யோமசாந்தி
யாற்றவனேசெய்துமல்லோ சொல்லகேளே. (௱௯௪)

சொல்லவென்றால் பிரதமையை நோயாளிமுன்னே சுத்தமுடன் றுணிறுத்தி வைக்கும்போது, வெல்லவே பிரதமைதான் சுதநியல்லோ விருப்பமுடன்றான்வருகும போதிலப்பா, கொல்லவேவந்ததொரு கிரகமப்பா கொற்றவனேபிரதமையின் மேலேயப்பா, புல்லவேமையலது பலியேகொண்டு கோபாலாபோகுதடா வென்றுசெப்பே. (௯௯௫)

செப்பிடவேகிட்டிருந்த மாண்பரெல்லாம் செமனலுடன்பிரதமையைக்கண்டபோது. ஒப்பிடவேசாந்தியினால் கிரகமநீங்கி ஓங்காரபலியதுவுங் கொண்டுதானும, மெப்பிடவேகிரகமது போகுதென்று மேதினியில்யெல்லவரு மயஙகுவார்கள், தப்பிதங்களில்லாமல் பிணியாளன்றான் சட்டமுடன்சுகமாவான் பாரீபாரே. (௯௯௬)

பாரப்பாபிணியாளன்சுகமுமாகி பான்மையுடன்பிர மையது நீங்கியல்லோ, சீரபடாபிரதமையின் ஜாலத்தாலே சிறப்புடனேயோநாளும் பிணிகளநீங்கி, வேரப்பாசாநதியது மகிமையாலும வேதாநததாயினது கிருபையாலும, ஆரபபாபிரமமையது நீஙகியல்லோ வவனிதனில்சுகமாக வாழ்வாரதானே (௯௯௭)

தானானஉடநதனக்கு நோயாவநதால தகமையுடனமாண்பரெலலாஞ் செயபுமாககய, கோனானதனதெயவ குலதெயவநதான கொப்பனவேவமமனென்றும பிடாரியென்றும, பானானபலதெயவ குறறமென்றும பாஙகு பறசப்பணஙகள் கட்டுவாருமம, மானானமுனிதேவாமுடஙகளென்றும மசத்தானபலவிதமாம வணணமாமே. (௯௯௮)

வண்ணமாமிபபடியே லோகமெல்லாம வகுபபுடனேயுக்தியதுமாறலாகி எண்ணமுடன்சனனறிவு நிலையுஙகெட்டு யெழிலானபதாமபுயத்தை நினையாமற்றான், திண்ணமுடன்கடவுளதனை மனதிலுன்னி தீர்கமுடன்யோகாநத வாநதையைவிட்டு, பண்ணியதோாகோலமதை யென்னசொல்வேன பாருலகிலமாண்பருட தனமைதாமே. (௯௯௯)

போகர்புலிப்பாணிக்கு சாயாபுருஷதரிசனங் காண்பிப்பது.

தன்மையாமின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தன்மையுள்ளபுலிப்பாணி மைந்தாகேளு, பன்மையாமயெந்தனது பாட்டனப்பா பாஙகாணகாலாங்கிநாதனய்யா, வன்மையாமவருடைய சீஷனையா வளமானகாலாங்கி நாதர்தாமும், மின்மையாமெந்தனது குருதானேபா மேன்மையுடனெந்தனுக்கு வுரைத்தார்பாரே. (௲)

பாரேதான்யெந்தனுக்குச் சொன்னமார்க்கம் பாருலகில்யாவருக்குஞ் சொன்னதில்லை, நேரேதான்வெகுகால கோடியப்பா நேர்மையுடன்காலாங்கி நாதர்தாமும், தீரேதான்குருபாதங் காத்திருந்து தீரமுடன்வாங்கினதோர் வித்தையப்பா, சீரேதானுந்தனுக்கு யானுமல்லோ சிறப்புடனேயோதிவைக்கும் வண்மைகேளே (உ௱௧)

கேளப்பா வையகத்தில் நன்மைதன்மை கீர்த்தியுடன்தானிருக்கும் வளமைதாமும், ஞானப்பா தேக்கமது வழியாவண்ணம் சுந்தரனே வெகுகாலமிருப்பதற்கு, நாளப்பா போகாமல் சுருபஞ்சொல்வேன் நவினமுடன்கற்பமது பின்னாலென்றால், ஆளப்பா வாகாய கற்பமாகும் வப்பமினைச்சொல்லுகிறேன் வரிசைபாரே (உ௱௨)

வரிசையாய்ப்புல்லிப்பாணி கண்ணின்கருவாகுபெறவாகாய தெரிசனந்தான், துரியமுடன்வையகத்திலிருப்பதற்கு துப்புறவாயச்சாதனங்கள் ஞரையபேனமெளி, சரிபானபூமிதனில் நேர்மையாகம் சட்டமுடனாயந்து சரிகைகாண, பிரியமுடன் சகத்திரனா கிழக்குதிக்க பிசகாமலேமறந்துமுகந் தனைக்காணே (உ௱௩)

ஆகாயத்தில் ரூபங்காணல்

காணவேஜாமமது ரெண்டுக்குள்ளே கருவாகாயாக்கற்பங்கொண்டு தோணவேபாசனத்தை ஒருநாழிகையோதான் மேற்றலப்பூமிதனில் நின்றுகொண்டு, பேணவே முச்சந்தியானைச் சக்கரமற்ற நன்மையுடனிருகாமும் தொங்கவிட்டு, பூணவே தனிநிழலைக் கண்ணுற்றுக் கண்டு பொங்கமுடன்நன்மைதன்மை யறிந்திடாயே. (உ௱௪)

அறியவே ரூபமது யென்னசொல்வேன் ஞானாகாரர் கண்டதில்லை, முறியவே மந்திரங்கள் நிமைகொட்டாமல் முனைபார்த்தந்திரசைத் தானும்பார்த்து, குறியுடனேவாகாயந் தன்னைநோக்கி கொற்றவனேபார்க்குமந்த சமயந்தன்னில் நெறியுடனேயுன்மைபோல ரூபங்காணும் நேர்மையுடன்ரூபமதில் வினையங்கேளே. (உ௱௫)

வினையமதுயென்னவென்றால் செப்பக்கேளீர் வேதாந்தத்தாயினது சொரூபம்போல நினைவதுவுந்தவராமப் மைந்தாகேள் நீடியுடனாகாயந் தனிற்றானும், கனவுகண்டக்கதைபோலே சடராணந்தன் கண்ணிற்குத்தோற்றுமப்பா கடினமேவதை, பனியளவுமுயரமப்பா வுந்தன்ரூபம் பாரினிலேதானிருந்து காணலாமே (உ௱௬)

காணவென்றால்சொரூபமது முறைமைசொல்வேன் கண்ணிறகு வாகாயந் தன்னிலப்பா, தோணவேசுடரொளியே லுந்தன்ரூபந் தோ

ற்றமப்பாகண்ணிற்கு கூச்சங்காணும், சாணளவுருபமது கொண்டுமல்லோ சட்டமுடன்பனையளவாய்த் தோற்றும்பாரு, நீணவேமாயாதிருபந்தானும் நிஷ்களங்கமாகவல்லோ தோற்றும்பாரே. (௨௱௭)

பார்க்கையிலேசிரசதுவுந் தோன்றாவிட்டால் பாலகனேயொருதிங்கள் சாவான்பாரு, தீர்க்கமுடனிருகரமுங்காணாவிட்டால் தினமதாவும்மூன்றுதிங்கள் மறிப்பான்பாரு சேர்க்கவேமார்பதனில் துவாரங்கண்டு செங்கதிரோன்கண்ணிற்குத் தோற்றமாகில் ஆறவேயறுதிங்கள் மரணமாவா னப்பனேசாயாவின் புருஷன்தானே. (௨௱௮)

தாணுனதரிசனங்கள் காணும்போது தகமையுள்ளசொருபமது துறைவுகண்டால், கோணுனகாலாக்கி வாக்குபோலே கொற்றவனைமுடிவதற்குப் பிசகொன்றில்லை, தேனுமனேனுமணியான் சொரூபம்போலே தெளிவாகவுனரூபங் கண்டாயானால், பானுனபாருலதில் வெகுகாலந்தான் பாலகனேயிருப்பதுவும் உறுதியாமே. (௨௱௯)

உறுதியாம்பனிரெண்டு வாண்டுதானும வுத்தமனேதரிசனைகள் காண்பாயானால், நிறுதியாய்வுனரூபங் கண்டரூபம நிஷ்களங்கமாகவல்லோ பின்றொடர்ந்து, சுருதியுடனகருவிகரனுறியோடு சுத்தமுடனவுடலாவி கொண்டுமல்லோ, பரிதிவிட்டுயுந்தனிழல் கூடேநிற்கும பாலகனேசாயாவின் வண்மையாமே. (௨௱௰)

வண்மையாஞ்சொருபமிலேய பின்றொடர்ந்து வாகுடனேயுந்தனிட மூலாவும்பாரு, திண்மையாய்சயனங்கள செய்யும்போதும தீர்க்கமுடன்பூமிதனில் நடக்கும்போதும், தண்மையாயுனுக்காரந் திருக்கும்போதும் தகமையுடனொருவருடன பேசும்போதும், உண்மையாயுந்தனுக்கு வருங்காலத்தை வுத்தமனேயுந்தமக்குக் கூறும்பாரே. (௨௱௰௧)

பாரப்பாபுலிப்பாணிமைந்தாகேளு பான்மையுடனறிந்தவாசொல்வேன்யானும், சீரப்பாவையகத்தில் விருட்சந்தானும் சிறப்பானகோடியுண்டு லக்கோயில்லே, நேரப்பாகனிவகைகள்கோடியுண்டு நேர்மையுடன்கண்டறிந்து பார்த்ததுண்டு, ஆரப்பாகர்ப்பகமாம் விருட்சந்தானும் அவனிதனில்மாண்பர்களுக் குகந்ததாச்சே. (௯௱௧)

ஆச்சப்பாவிருட்சவகை கோடியுண்டு வப்பனேகர்ப்பகத்தின் விருட்சந்தன்னே, மாச்சலுடன்யெதுகேட்டால் தருமேயென்று மகத்தானவிருட்சமது கூறும்வண்ணம், ஏச்சலதுவாராமலிருக்கும்விருட்சம் யெழிலானவையகத்தோர்க் கானஜாதி, காச்சலுடன்பூமிதனில் வாழுஞ்சாதி கனமானவிருட்சமென்ற மாமுமாச்சே. (௯௱௨)

மனிதர்க்கு அறிவுஐந்து மிருகங்களுக்கு அறிவுநான்கு பட்சிக்கு
அறிவுமூன்று மாரால்நகரும்பிராணிக்கு அறிவு இரண்டு
விருட்சத்துக்கு அறிவொன்று கூறுதலாம்.

ஆச்சப்பாமாந்தருக்குப் பஞ்சபூதம் வப்பனேவாத்துமமா மென்னலாகும், மூச்சொடுங்கும்மிருகமதுக் கறிவுநாலு முனையானசிவனென்றே செப்பலாகும், பாச்சலுடன்பறக்குகின்ற பட்சியப்பா பாங்கானவறிவதுவும் மூன்றேயாகும், மேச்சலுடன்மார்பதனுல் நகருஞ்சென்துமேன்மையுடன்அறிவதுதான் ரெண்டதாமே. (௯௱௩)

இரண்டானவிருட்சத்துக் கறிவொன்று யெழிலானசாத்திரத்தொகுப்பின்கூறு, இரண்டதொருகவிவாணர் சொன்னவாக்கு திக்கெட்டும்சித்தர்முனி கண்டாராய்ந்து, மிரண்டதொருமானிடர்க்கு வையகத்தில் மிக்கானதொகுப்புவகை யாவுங்கூறி, கரண்டகம்போல்போகரேழாயிரந்தான் காசினியில்பாடிவைத்த பண்பதாமே. (௯௱௪)

### சக்கரவர்த்திகள் செங்கோற்பெருமைகூறல்.

பண்பானயின்னமொரு மார்க்கங்கேளு பாங்கானபுலிப்பாணி மைந்தாயாரு, நண்பானவையகத்தில் கோடிமன்னர் நாடாண்டுகாடுறைந்தார் லக்கோயில்லே, பெண்பாலசெங்கோலின்பெருமைமார்க்கம் பேரானவைமைப்புகிலர் கண்டாரங்கே, சண்டாளவேந்தருக்கு யாதொன்றில்லே சட்டமுடன்போகரிஷி கூறுவேனே. (௯௱௫)

கூறுவேன்சக்கரவர்த்தி யென்றுமேதான் குவலயத்தில்பேர்கொண்டு லாபமென்ன, மாறுடையவேந்தர்களா யவதரித்து மானிலத்தில் மன்னவாயிருந்துமென்ன, வேறுபடமாண்பர்களை வறுத்தல்செய்து

வேண்டியதோர்விதியினைத்துங் கொள்ளைகொள்வோர், ஆறுதலங்கட்ட
றியார் மன்னர்தாமும் அதநிபாதேசியரைத் தேடார்தானே. (௯௱௬)

தானுமன்னவர்க்கு முறையேதென்றால் தாக்கானவங்கமதுபத்
திமுண்டாய், கோனுனை அந்தசெல்வம் தானுங்கொண்டு கொற்றவனார்
போர்தனையே வகிக்கவேண்டும், தேனுனை வெற்றியது பெற்றுமெற்று
இரானைபொருளதுவும நான்குங்கொண்டு, மானுவாதியனைத்துங் கொ
ண்டுமல்லோ மகத்தானமங்களமு பெற்றதாமே. (௯௱௭)

எட்டானமங்களமு மிருக்கவேண்டும் பெறுநிலானபேறுபதி னாறு
வேண்டும், மட்டானதுவமெட்டு மிருக்கவேண்டும் மகத்தானவினையா
ட்டு மெட்டும்வேண்டும், இட்டமாகச் சேனைகை பத்துமவேண்டும்திக
ழானபுக்கதித்து மெட்டும்வேண்டும், வட்டமுடன் சோமகமது பெட்டும்
வேண்டும் வளமானராஜர்களுக் குகந்தவாறே. (௯௱௮)

வானவெசுக்குயிரு காக்கதாகும் வண்மையுள்ளசெங்கோலு
மெழுதாகும், கூறுமகலியதுவும் ஆயமேண்டும் குறிப்பாகமம
ணைகமூன்றும்வேண்டும், தாரு [illegible] யாக்கைத்
குணங்கள் பத்துவேண்டும், [illegible] மணியும்பெற்று
நிறைபானமணிமுதல் கொண்டுடாக்க. (௯௱௯)

கொண்டமக்கு வேந்தருக்கு மிருக்கவேண்டும் [illegible]
பொருள் மிகுந்திமென்ன, அண்டவங்கம [illegible] தேசியர்க்கு [illegible]
னைகணனைப் பாலியவேண்டும், வண்டைனீ [illegible] தன்
னைத்தானும் வளமையுடன் [illegible] போ
லே செங்கோலோட்டி சதுருடனேயாளவேயமன்னனாமே. (௯௱௰)

மன்னனுப்பதிகளத்தி லுயிரைத்தாலும் பார்த்துமுடனவிதிவதற்கு
அஞ்சல்லாய், தென்னவன்போலதிக்கெட்டும் புகழுமல்லாய் தேசமெ
ங்கும்மாண்பர்களுக் ததிக்கவல்லாய், இவ்விலவதித்து மகுடம்
பூண்டு பெறுநிலானராஜாதி ராஜனென்றும, நன்னயமாய்பராபரத்தில்
ரூபங்கொண்டு நயமுடனேயவதரித்தோன் வேந்தனாமே. (௯௱௰௧)

வேந்தனுஞ்சதுரியத்தில் வாக்குபெற்றோன் வேதாந்தமனோன்ம
ணியாளருளும்பெற்றோன், போக்கமுடன்மசமேரு வில்லும்பெற்
றோன் புகழானவிஜயனென்று பேருங்கொண்டோன், சாந்தமுடன்வே
தவழி தன்னிற்சென்றோன் தவத்தனிலேதான்மிகுந்த யோகவானாய்,
காந்தமதிகொண்டதொருவிலாசனுக காசினியில்ருப்பவரேயரசனாமே.

அரசனுமிப்படியே காலாங்கிநாதர் வன்புடனேகுளிகையதுபூண்டுகொண்டு, முரசுடனேமுன்சொன்ன வகைமைப்போல முப்பத்திரண்டரசர் தம்மைக்கண்டார், திறமுடனேகாலாங்கி தான்பணிந்து திர்க்கமுடனடியேனுங் குளிகைபூண்டு, உறமானபதினாறு அரசர்தம்மை வுத்தமனுமடியேனுங் கண்டோமே. (௯௱௰௩)

கண்டேனேராஜரிஷி சக்கரவர்த்தி காலினியில்தானிருந்த நாட்கள் மட்டும், உண்டானசக்கரவர்த்தி பதினாறுகண்டேன் ஏகோகோநாதாக்கள் சொல்லவில்லை, அண்டபுவனங்களெல்லாம் கண்டராஜர் அவனி தனிலேபோயிருந்து சித்தரென்பேர், கண்டவனிதிகளெல்லாஞ் சித்தரும் தாரணியில்மறைந்தாரே சொல்லயாமே. (௯௱௰௪)

சுப்பிரமணியர் தியானம்.

சொல்லுகின்றேனின்னமொருமார்க்கஞ்சேர்ந்து குறிப்பானபுலிப்பாணியிமைத்தாயார், நாமமேபகுமேவர்தியானம் காட்டுகிறேன்புக்தமக்கு நன்மையாகும், சேனபுகழ்தாறு மென் நலமாம் குவலயத்தில்கதிபெறவே வந்தாங்கொண்டு சேதுபயாந்தடை நன்னாவேண்டி தேசத்திலறிவாய் கொண்டாடாயே. (௯௱௰௫)

கொண்டுடனே மைந்தா தக்கேயப்பா கூறுகிறேன்வியமென்றுமார்க்கஞ்சொல்வேன், கண்டுநியே மன்றல் கைலாசர்தம்மை கருத்தினிலேதானுமே சிக்கநிசெய்து, பண்டுதிசமானதொரு பழமைக்கங்கள் மணமேசர்க்கமாய மருதுகாலம் கொண்டுதொருவறு கோணம் சிந்தை செப்ப விருப்பமுடன்சொன்னதை மாறுவாயே. ()

மாறுதல் சக்கரம்.

மாறுமென்றால் சொன்மூலங் கிறலொன்று மைத்தான அடிமூலங் கிறலொன்று, அறவுடன்மேற்றிசையாங் கீறலொன்று வப்பனேமேற்றிசையாங் கீறலொன்று, மிறவுடன்தென்றிசையாங் கீறலொன்று மேன்மையுடன்வடதிசையாங் கீறலொன்று, வாறவுடன்குணதிசையாங் கீறலொன்று வகுப்பானமேலது அறுகோணமாமே. (௯௱௰௭)

கோணமாம்மூலமதை குளம்போல் குறிப்பானவகையாறும் மூலமாஞ்சூலம், வேணபடிநடுமையம் காணம்போல் வேகமுடன்குறிமையம் பிரணவந்தான், சிணமதுவாராமல் பிரணவத்தை செப்புகிறேன்வுன் மூலங் கொண்டுமாறு, காண்டியபரஞ்சுடராம் வடிவேலர்தாமும் கர்த்தனைப்போல்வந்திருப்பார் பாருபாரே. (௯௱௰௮)

பாரப்பாமேல்மூலம் ஹரிவோம்போடு பாய்கானகீழ்மூலம் ஐயுங்கிலியும், நேரப்பாகீழ்மூலம் சௌவும்-ஸ்ரீயும் நேர்மையுடன்ஹரியுடனே-இம்மென்றோது, சீரப்பா அங்குடனே லிங் வங் ஓங் சிறப்பானசிங்குடனே ஆங்கென்றோது, ஆரப்பா மங் யங் நங் கென்றேசொல்லுவப்பனேசிவசுப்பிர மணியென்பாயே. (௯௱௰௯)

என்னவேஅம்பிகைப் பாலாவாவா யெழிலானசரவண பவனேவாவா, துன்னவே வசி வசி வருக வருக துப்புரவாய்சுவாஹாயா சிரோமணியேவாவா, பன்னவேபிரணவத்தை யோதும்போது பாலகனேசுப்பிரமணியர் கிர்த்தஞ்செய்வார், மின்னவேமயில்வாகன ரூடராக மீட்சியுடன்தரிசனைக்கு வள்ளாவாரே. (௯௱௨௰)

உள்ளதொருவஜூகோணம் கமலமத்தில் லுத்தமனேயாயிருந்து கிர்த்தஞ்செய்தால், கள்ளமதுவாராமல் சுப்பிரமண்யர் காட்சியுடனுந்தனுக்கு வரமேயீவார், என்னளவுகுறையாமல் பிரணவந்தான் யெழிலானவட்சரத்தைலட்சம்போடு, மென்றுமணிபாலகனுர் முன்னேநிற்பார் சிவசுப்பிரமணியனெனச் செப்பலாமே (௯௱௨௰௧)

செப்பலாஞ்சுப்பிரமண்ய னென்பாராரு சிறப்பானமணிதனைல்லால் வேறொன்றில்லை, ஒப்பமுடன்நினைத்த சுப்பிரமண்யன் ஏகோகோநாதாந்தக் கடவுளாச்சு, எப்படியுமநாதாந்தக் கடவுளுக்கு யெழிலானவைகார புருஷனென்றும், இப்படியேசொடான கோடி நாமம் யெழிலான சாத்திரங்கள் சொல்லலாச்சே. (௯௱௨௰௨)

சொல்லவேபரவர்கள் தக்கநேர்மை சுந்தரனேகல்பனெறி லயிக்கியங்கொண்டு, வெல்லவேபலயிதமாம் தெய்வம்போலே விசாரணைகளில்லாமல் பேதைகளைந்தாய் புல்லவேகவியாணர் கட்டுவாக்கியம் புகழாகப்பலபலவாம் நாமந்தன்னை, செல்லவேதற்கடவு ளொன்றுகூறி செம்மலுடன்மதிகெட்டுத் திரிப்பார்பாரே. (௯௱௨௰௩)

பாரப்பாபூலோக கர்த்தனுக்கு பாங்கானமூன்றுபேர் வகுக்கலாச்சு, நேரப்பாஹரியனும் பிரமாவென்றும் நேர்தானசாத்திரங்கள் கூறலாச்சு, சீரப்பாநாமமது மூன்றுமல்லோ சிறப்பானகடவுளுக்குப் பேருமாச்சு, தேரப்பாதேசாதி தேசமெல்லாஞ் செப்பினார்பலநூலுஞ் சொன்னார்தாமே. (௯௱௨௰௪)

கடவுளுண்டென்பதற்கு திருஷ்டாந்திரம்.

சொன்னாரேகடவுளல்லால் வேறொன்றில்லை சுந்தரனேகடவுள்தனைக் காணமாட்டார், மன்னவனேதெய்வத்தைக் காணுதற்கு மகத்தானதிருஷ்டாந்திர மேதென்றக்கால், தென்னவனேதேவதா ஸ்தானந்த

ன்னில் திகழான மணியோசை கேட்குமல்லோ, முன்னவனே மணியோ
சைக் கேட்கும்போது முனையான மணியொன்று மிருக்கலாச்சே. ( )

இருக்கவென்றால் மணியென்ற கருவொன்றுண்டு யெழிலான கரு
வதனைக் கண்டறிவில்லை, திருத்தமுடன் மணியோசைக் கேட்டபோது
திகழான மணியொன்று மிருக்கும்பாரு, பொருத்தமுடன் வையகத்தி
லதிசயங்கள் பொங்கமுடன் கோடான கோடியுண்டு, வருத்தமுடன் பிற
ப்பதுவும் மிறப்போர்தம்மை வளப்பமுடன் மறைதனையே கண்டிட்
டோமே. (௬௨௬)

கண்டோமே லோகபதி யதிசயங்கள் காசினியில் வெகுவென்று கா
ண்பதேனோ, அண்டமுடன் புலகுபதிக் கடவுள்தானும் வன்புடனேயி
ருப்பதற்கு ஐயமுண்டோ, உண்டான சாத்திரங்கள் பேதாபேதம் வுத்
தமனே பாடிவைத்தா ரனேகமுண்டு, செண்டான முறைமை கெட்டு சா
த்திரங்கள் செப்பினார் பலபேரை மாண்பர்தாமே. (௬௨௭)

மாடன் மந்திரம்.

மாண்பரா யின்னமொரு மார்க்கங்கேளு மகத்தான புலிப்பாணி
மைந்தாபாரு, ஆண்மையுள்ள மாடனவன் வசியமப்பா வவனிதனில் யா
ரறிவார் சித்துமாண்பர், காண்மையுள்ள கருவாளி யறிவான்பாரு காசி
னியில் கண்டாளன் சத்துருவேதை பாண்மையுள்ள கருமிக்கும் மா
யிகட்கு உகருவான மாடன் மந்திரமுமாமே. (௬௨௮)

மந்திரமாம் மாடனது வசியத்தாலே மகத்தான மாண்பரெல்லாம்
வசியமாவார், எந்திரமாம் மாடனது பிரணவத்தால் யெழிலான தேவ
தைகளெல்லாஞ் சித்தி, தந்திரமாம் மாடனது மந்திரத்தை தண்மையு
டன் சொல்லுகிறேன் தயவாய்பாலா, சுந்தரமாய்க் கருவறிந்த மாண்பரப்
பா சூட்சமுடன் செய்வான்பார் மர்மமிதானே. (௬௨௯)

தானென்ற ரணவங்க ளொன்றென்றுக்கால் தண்மையுள்ள ஹரி ஓம்
கேளென்றேயாது. கோனென அகோரமாடா கெம்பிராயா குறிப்பான
அகோரதர்க்க வாழ்முனீசா, தேனென ஸ்ரீங்கார பகவதிபுத்திரா தெளி
வான வீராதி வீரமாடா, வானென மசானமென்ற சுடலைமாடா மகத்தா
னயென்வார்த்தை கேட்டிடாயே. (௬௩௰)

கேட்கவென்று வுக்கிரவின் மாடாகேளு கெடியானயென்வார்த்
தை கைவிடாதே, தாட்கமலம் வீற்றிருக்கும் மனோன்மணியாள் பாதம்
தயங்காமல் முன்னின்று காக்கவென்று, வேட்கையுடன் கிருபையருள்
விநோதமாடா வீறுள ரீங் சௌவுங் கிலி யென்றோது, சூட்சமுடன்
மம் ஐயுங் கிலியென்றோது சுடலை ரீங்குடனே வாவாவென்றோதே.

ஓதையிலேலட்சமதாவுருவுபோடு ஓங்காரமிட்டல்லோ வசியமோது, நீகமுடன்றீங்கார சப்தஓசை நிலையான அஷ்டசித்துக் கிதுவேமூலம், போதமுடன்மாடனது பிரணவத்தால் பொங்கமுடன்முப்பத்தி ரெண்டுயூகம், தோதமுடன்மாண்பருக்குள் வசியமாச்சு தொல்லுலகிலிப்படியே நிறைப்பார்காணே. (௬௱௨)

காணநீவிஜெபகந்தரித்து சித்திகொண்டு கருவானபிரணவத்தையுச்சரித்தால், பூணவே பலவகையுந் ஜெகங்கள் பொல்லாதகமப்பண்ணன் யேவல்ஜனங்கள், தானசேவையாவதை ராயங்கரத்தன் தோருத பிரணவத்தாலெல்லாஞ்சித்தி, ஏணைதொழுமாடனது வசியத்தாலே வெட்டவெளிதேவதைகள் வைக்குள்ளாக்கே. (௬௱௩)

ஆச்சப்பாமந்திரமாம் மூலமந்திரம் வைப்பிணைகண்டவர்க்கு யெல்லாஞ்சித்தி, மூச்சடங்கிப்போய் தோரு பிரசாதத்தோடும் முனையானபிரணவத்தால் போகலாகும், கூச்சமுடன்தலைமுறையாதிப்பேய்கள் கொப்பெனவேபிரணவத்தைக் கண்டாலோடும், ஆச்சரியமானதொருமாடன்மந்திரம் வைப்பினையோதிற் வசனித்தீரே. (௬௱௪)

வசனித்தேன்லோகத்திலிமக்கக்கேள் வாழுடனேகண்டதிந்த ஞானவான்கள், நிசமென்றும்பாக்கும் பாகாரக்கம் நிலையானஜெபத்தினால் தவத்தினாலும், தாமதுக்கப்பமாசமுது வாதையுங்காணதாரணியிலகாலமென்ற மானைத்தாக்கி, வசமுடனேயமர்ந்ததொரு வாமந்தானும் வளமானமெய்யதாகத் தவக்காளமே. (௬௱௫)

அடக்கமாஞ்சூனியம்ச செய்வினைமாயம் வல்வினைகருவதனால் வெல்லலாகும் திடமுடனேசகத்தி வெல்லாந்தித்தி நிக்கமுடன்ஜெபத்தினால் வசியமாகும் மடமானமாடனது மந்திரத்தால் மகந்தானமுடிமன்னர் வசியமாவார், சடல்போன்ற மந்திரமெல்லாமப்பா கருவானமாடனுக்கு நிகராகுமே. (௬௱௬)

மலையான தாமகேத்திரம்.

ஈடானமார்க்கமது நிக்கமத்தொகையில் மெய்யினாயப்பாகவிமைந்தாகேளு காடானதேசமது கிரசக்தகோணத்தில் இருபையாலே, தாடான்மலைக்கடல் கோடுகிழைக்குக்குந்தி தங்கமையுடன் சீனபதி விட்டுயானும் காடானமலைகுகைகள் வழுகிரங்கள் கருவானவழியதுவுங் கடந்தேன்பாரே. (௬௱௭)

பாரேதான்மலையான தேசங்கண்டேன் பாங்கானபெண்கள்மலையாளமப்பா, நேரேதான்குளிகைவிட்டு கீழிறங்கி நேர்மையுடன்பகவதி

யாள் தேவஸ்தானம், சேரேதான் றுமாதேவி கோயிலப்பா சிறப்பான தோப்புகளும் மடுவுங்கண்டேன், திரேதான்மடுவதனி லிறங்கியானும் தீர்க்கமுடன்ஸ்தானமது செய்தேன்பாரே. (கூ௰அ)

பாரப்பா றுமாதேவி தேவஸ்தானம் பாங்குடனேதோப்பறுகிலிருக்கக்கண்டேன், நேரப்பாகன்னிகளோ வாயிரம்பேர் நேர்மையுடன்பச்சைப்பல் லாக்குகொண்டு, சீரப்பா றுமாதேவி தன்னைத்தானும் சிறப்புடனேயபல்லாக்கு சாரிகொண்டு, ஊரப்பாவனத்தை சுற்றியல்லோ வெத்தமனேகன்னி [illegible] (கூ௰கூ)

வெறுத்துவதுங்கே [illegible] துமதா தேவிகன்னி, [illegible] குரலுடன்கன் [illegible] யதுமேயன்றுனும் திற முடனே [illegible] மங்கிருந் தார் [illegible] (கூசாய)

கண் [illegible] ருவானசித்தொளிவு மெ [illegible] பிறங்கிவைத்த வப்பனே [illegible] முடனங்கி தேற் [illegible] போலே குருசித்து தாமும் [illegible] டாரே. (கூசாக)

[illegible] த்திகூறல்.

[illegible] ருபாரு [illegible] சித்தின்பசிறுபாலா கேளு [illegible] முடனேகாலாங்கி யடியேன்றுனும் [illegible] குளிகைபூண்டு பாருலகஞ்சுற் [illegible] சமாதிமலை பருவதத்தில் சட்டமுடன்வு [illegible] (கூசாஉ)

கண்டோமே [illegible] குன்ற சித்தர்தம்மை கைலாசநாதரு மெங்களுக்கு, [illegible] சொன்னாக்கே திக்கமுடன்குளிகை யது பூண்டுகொண்டு, [illegible] காலாங்கி நாதர்தாமும் வளமுடனேசிவபதிக் [illegible] யடியேனுங் குளிகைபூண்டு வெத்தமனேமலையாள [illegible] (கூசா௩)

வங்கேசுமெபெத்தனது [illegible] கைபாலா வருப்பானமலையாள தேசந்தன்னை, சங்கேதாஷமாகவிக் காலமட்டும் சதுரானகாவணத்தி லடியேன்றுனும், நிந்தனைகளில்லாமல் மாண்பர்முன்னே நிஷ்களங்கமாகியல்லோ சமாதிகொண்டேன், சிந்தனையைவிட்டல்லோ வையகத்தில் சிறபரனைநண்ணியல்லோயிருக்கின்றேனே. (கூசாச)

இருக்கிறேன் துவாபர யுகந்தொடங்கி யெழிலாகயிந்நாளும் வுறுதியாக, திருக்கமலம்வீற்றிருக்கும் தூமாதேவி திகழானசன்னதியைப் பாதுகார்த்து, உருக்கமுடன்பத்மாசனத்திருந்து வுத்தமனேகாலமதை கழித்துகொண்டு, பெருக்கமுடன்கன்னிமார் பூஜையோடும் பேரின்ப நிலைதனிலே நிற்கின்றேனே. (௯௨௫)

நிற்கின்றேன் தூமதா பதியிலப்பா நிலையானக்ஷேத்திரத்தில் வெகுகாலந்தான், தற்கையெனும்மலையாள சன்னிதானம் தப்புரவாய்சமாதிமுக மிருந்துகொண்டு, அற்பமென்றலோகபதி வதிசயத்தை யருள்கடந்துகடல்கடந்து வன்பனாலும், சற்பமென்றசடாபாரந் தலையிலே ந்தி சாங்கமுடன்மலையாள மமர்ந்திட்டேனே. (௯௨௬)

இட்டேனேகாலாங்கி நாதரிஷி யெழிலாகயெந்தனைநீ கண்டதாலே, சட்டமுடன்மனதுவந்து யுந்தமக்கு சாங்கமுடன்தூமதா தேவிமந்திரம், திட்டமுடன்வுந்தமக்கு வுபதேசங்கள் சிறப்பானதேவதா பிரணவத்தை, வட்டமுடனுந்தனுக்கு வுபதேசிக்கும் வளமையுடன்யெந்தனது பாரந்தானே. (௯௨௭)

தூமாதேவிபிரணவமந்திரத்தை போகருக்கு சித்துகூறல்.

பாரமாய்காலாங்கி நாதரிஷி பட்சமுடன்பிரணவத்தை சொல்லக்கேளீர், தீரமுடன்ஓமென்ற வட்சரத்தை திர்க்கமுடயோந்தனுக்கு வுபதேசித்தார், வீரமுடன் தூம் தூம் மென்றேசொல்லி விருப்பமுடன் பிரணவத்தை யுச்சாடித்து, கோரமுடன் ஙிலி ஙிலி யென்றேசொல்லி கொற்றவனேஸ்த்தம்பய வென்றிட்டாரே. (௯௨௮)

என்றுரேஅண்டமதைத் தாண்டியேங்கி யெழிலானவாகாயந் தனிலெறிந்து, குன்றுனநாற்கடலும் தத்தளிக்க குறிப்புடனேயென்முன்னே ஓடிவாவா, சென்றுமே ஐயும் கிலியும் சௌவுமென்று செப்பினார் பிரணவத்தை என்முன்னிற்க, வென்றிடவேலட்சமுரு வோதுவோது வுத்தமனே வசி வசி சுவாஹாயென்னே. (௯௨௯)

என்னவேமண்டலத்தில் வசியமாச்சு யெழிலானதூமதா தேவிமந்திரம், சொன்னதொருமந்திரத்தா லஷ்டசித்தி சுந்தரனேயுந்தமக்குப் பலிக்கும்பாரு, பன்னவேகுளிகையது பூண்டுகொண்டு பாருலகஞ்சுற்றிவரும் காலந்தன்னில், முன்னமேசித்துமுனி ரிஷிகள்தாமும் மூர்க்கமுடன்சபித்திடவே வருவார்பாரே. (௯௩௦)

பாரேதானுந்தனையுஞ் சபிக்கவந்தால் பாலகனேதுமதா பிரணவ
த்தை, நீரேதானுச்சாடஞ் செய்யும்போது நிஷ்களங்கமாகியல்லோ
வணங்கியுன்னை, சேரேதானருகழைத்து யுந்தனுக்கு செப்புவார்வே
ணவுப தேசமெல்லாம், வேரேதான்வுபதேச முந்தனுக்கு வேண்டு
மோதுமதா மந்திரந்தானே. (௬௫௧)

தானானதுமதா மந்திரத்தால் சட்டமுடன்தரணிதனை ஜெயிக்க
லாகும், கோனானவிடையூறு வந்தபோது சொற்றனை மந்திரவுச் சாட
னத்தை, தேனனமேனன்மணியைத் தாளிணைந்து செப்பிடவேயுந்த
னுக்கு யெல்லாஞ்சித்தி, பானனதேவதா மந்திரத்தை பட்சமுடனா
ருக்குஞ் சொல்லொண்ணாதே. (௬௫௨)

ஒன்றான நருமந்திரம் தேவதாமந்திரம் வுந்தமனைபுலிப்பாணி
யுந்தனுக்கு, நின்னமுடனுபதேசஞ் செய்தேனப்பா தீர்க்கமுடனெ
ன்றனும் மனதிலுன்னி, வண்ணமுடன்வுந்தமக்கு யிடையூர்காலம்
வந்திட்டால் பிரணவத்தை யுச்சாடித்து, தன்னமுடனன்மயாத்தி லி
ருந்துகொண்டு சதாசித்தந்தேவிதனைப் போற்றுவாயே. (௬௫௩)

மலையாளகறுப்பண்ணன் வசியம்.

போற்றுகிறேன்யின்னமொரு வசியங்கேளு புகழானபுலிப்பாணி
மைந்தாபாரு, ஆற்றலுடன்கறுப்பண்ணன் வசியந்தன்னை வப்பனேமா
னுக்கள் பிழைக்கவென்று, மாற்றவேகுளிகையது பூண்டுகொண்டுமக
த்தானசீனபதி விட்டுமல்லோ, ஏற்கவேமலையாள பதியிலப்பா யெழி
லாகவாறுண்டு யிருந்திட்டேனே. (௬௫௪)

இருந்தேனேதுமதா தேவஸ்தானம் யெழிலானசன்னிதிக்கு வட
பாகத்தில், பொருந்தவேசமாதியது யானுங்கண்டேன் பொகமுடன்
கறுப்பண்ணன் விருட்சமுண்டு, திருந்தவேகுளிகையது யானும்விட்
டு திராடகமாதிபுறம் பத்தும்போது, அருந்தவசியங்கொருவ ரிருந்
தாரப்பா வப்போ யெந்தனையுங் கண்டிட்டாரே. (௬௫௫)

கண்டாரேசித்துமகா ரிஷியார்தாமும் கருத்தாகயெந்தனைத்தான்
கண்டபோது, திண்மையுடனாரென்று யென்னைக்கேட்க தீர்க்கமுடன்
காலாங்கி சீஷனென்றேன், வண்ணமுடன்தாள்பணிந்து யடியேன்று
னும் வளமாகசிறங்குனித்து தெண்டனிட்டேன், கண்ணபிரான்றன்னை
ப்போல் ரூபங்கொண்ட கர்த்தாவுமெந்தனையுமதித்திட்டாரே. (௬௫௬)

மதித்துமேயெந்தனையு மாசீர்மித்து மகிட்சியுடன்ஞானோபதேசஞ்செ
ய்வேனென்றார், துதித்துமேயடியேனு மனதுவந்து துப்புரவாய்தமது

டுச

டைய பாதாரங்கான், வதித்துமேவையகத்தி லடியேன்றனும் வளமையுடன்சதானிக்தங் குருவென்றெண்ணி, கதிப்புடனேகாலாங்கி யென்றுசொல்லி கர்த்தாவேயென்னாளும் மறவேன்றானே. (௬௫௭)

மறவேனென்றுசொல்லி மனங்களித்து மார்க்கமுடனடியேனுங் கூறும்போது திறமானசமாதியிது கருப்பன்சமாதி தீரமுடன் விருட்சாதி விருட்சத்தினகீழ், உறமுடனே வெகுகோடி காலமாக வுக்தமனேசமாதியிட தவசியானும், குறைவதுவும் நேராமல் கோடிகாலம கொற்றவனேயானுமல்லோ யிருந்திட்டேனே. (௬௫௮)

இட்டேனேவெகுகோடி காலமப்பா பெழிலானகருப்பண்ணன்சமாதிபக்கல், வட்டமுடன்பெக்கனேயோ கோடாகோடி வண்மையுள்ள தவசிகளும் வருவார்போவார், சட்டமுடன்கருப்பனுக்கு யெதிரானோர்கள் சாங்கமுடனிதுவரையிற் கண்டதில்லை, திட்டமுடன்கருப்பண்ணன் வசியந்தன்னை தீர்கமுடனனேகம்பேர் கேட்டிட்டாரே. (௬௫௯)

கேட்டாரேவெகுமாண்பர் கேட்டாரப்பா கெடியானகருப்பண்ணன் வசியந்தன்னை, வாட்டமுடனொருவருக்குஞ்சொன்னதில்லை வளமையுடனெந்தனுக்கு வுபதேசித்தார், தாட்டிகமாய்க்குளிகைபதா பூண்டுகொண்டு தன்மையுடன்போகுகின்ற வுனக்குமந்த, நீட்டமுடன் பிரணவத்தை யுபதேசித்தேன் நிஷ்களமகமாகவல்லோ கேளுகேளே.

கேளேநீயென்றுசொல்லி பிரணவத்தை கெணிதமுடனெந்தனுக்கு வுபதேசித்தார், பாலேதான்போகாமல் பிரணவத்தை பட்சமுடனுந் தமக்கு வுபதேசித்தேன், ஆளேதான்மந்திரமோ பிரணவந்தான் வப்பனே ஓம் சங்கரி சங்கரியென்னை, வீளேதான்வுச்சாட மந்திரத்தை விருப்பமுடன்சங்கரியே வாவாவென்னே. (௬௬௧)

என்னவேதேவதா கருப்பண்ணன்பகவா யெழிலானவுக்கிரகருப்பண்ணுவாவா, துன்னவேஆகாகா காளியெடுகருப்பா துடியானவாங்கார முளளதீபா, பன்னவே அம் அம் அம மென்றேயோது பட்சமுடன்கடுகெனவே வந்துநிற்பாய், சொன்னபடிஆஞ்சநேயர் முகனேவாடா சுந்தரனேகொஞ்சியென்ற சடையோன்றானே. (௬௬௨)

தானேஅந்திசந்தி தன்னில்நின்று தலையுருட்டுக்கருப்பண்ணு தயாளபாலா, கோனேமாலைதனில் மயங்குங்கருப்பா கொற்றவனே அடி அடி பிடி யென்றோது, வேனே அங் ஆங் கென்றேயோது விருப்பமுடன்ஆவேஸ ஆவேஸயென்றும், பானேஅகோரகருப்பண்ணு வாவா பாலகனேசீக்கிரம் வாவாவென்னே. (௬௬௩)

சீக்கிரமாஞ்சிவாயநம யென்றேயோது சிறப்புடனேபிரணவத்தை யுச்சரித்து, சாக்கிரதையாகவல்லோ கறுப்பன்றன்னை தகமையுடன்வு ச்சாடித் தடுமையாக, வாக்குதப்பாமலேயுருவுபோடு வளமுடனேமண் டலந்தான் லட்சம்போடு, நாக்கதுவும்பிசகாமல் நளினமாலா நயமுட னேவுச்சாடஞ் செய்வீர்காணே. (கூகூச)

காணவென்றாலுச்சாட வசியத்தாலே கருவானகறுப்பண்ணன்மு ன்னேநிற்பான், தோணவேபிரணவத்தாலஷ்டசித்தி தோறுமலுந்தனு க்கு பலிக்கும்பாரு, பூணவேயஷ்டமா சித்தியோடும் புகழானதேவதை களெல்லாஞ்சித்தி, நீணவேசின்மயத்தி லிருந்துகொண்டு நிஷ்களங்க மாகவல்லோ வோதுவீரே. (கூகூரு)

சத்துருமாரணம்.

ஓதவென்றால்புலிப்பாணி மைந்தாகேளு வுத்தமனேசத்துருமார ணந்தான்சொல்லுவன், நீதமுடன்சத்துருவின் பிரணவத்தை நிகட்சி யுடன்யாரறிவார் வுலகில்மாணர், தோதமுடன்கருவாளி காண்பான் பாரு தொல்லுலகில்மற்றவருக் காணமாட்டார், நாதமென்றமனோன்ம ணியாள் கிருபையாலே நாதாந்தசித்தொளிவுங் காண்பான்பாரே. ()

பாரேதான்யெதிராளி சத்துருதன்னை பாங்குடனேமாரணந்தாற் கொல்வதற்கு, நேரேதான்பிரதமைபோல் பாவுசெய்து நிசகாணமண் பாத்திரந் தனிலமைத்து, சீரேதானநிமையம் வுந்திதன்னில் சிறப்பான வராகமென்ற முள்ளைப்பப்பா, வீரேதான்நிமையந்தனிலமைத்து விரு ப்பமுடன்வசிதன்னையே நாட்டிடாயே. (கூகூஎ)

நாட்டிவாய்காந்தமென்ற வூசிதன்னை நலம்பெறவேமுப்பத்திரெண் டுவூசி நீட்டமுடன்காலபத்து காக்கன்பத்து நெடுதானவசிதன்னையே நா ட்டிடாய்நீ, வட்டமுடன்விருவிலா நெஞ்சுதன்னில் வளமானகீலெட்டு ம் வசிகன்னாட்டி, கட்டமுடன்பஞ்சகருகனைபெயித்து தெளிவுடனே பாவுதனில் தூவிடாயே. (கூகூஅ)

தூவிடவேகருவினது மார்க்கக்கேளாய் துகளற்றசாலியனூர் மண் ணுங்கூட்டு, ஆவியெனும்மாளிடத்தின் மசானச்சாம்பல் வப்பனேயெதி ராளி பாதநாளும், காவிதனூர்கைபழுக்கும் மலத்திலுப்பும் நலம்பெற வேதானெடுக்கப் பஞ்சகோசம், பாவியெனுஞ்சண்டாளப் பதுமைக்கப் பா பாங்குடனேஐங்காயந் தானுஞ்சேரே. (கூகூகூ)

சேர்த்துமேலலாடமதி லிட்டுமைந்தா செம்மலுடன் அம்மென்று கும்பித்தல்லோ, ஆர்த்துமேபிரணவத்தை யுச்சாடித்து 'வன்புடனே லட்சமது வுருவுபோடு, கோர்த்துமேவுருவதனு லெல்லாஞ்சித்தி கொ

த்தவனேசின்மயத்தி லிருந்துகொண்டு, பார்த்துமேகவகோண பீடந்
தன்னில் பக்குவமாய்சொரூபநிலை நின்றிடாயே. (௬௭௰)

திரிசூலி மந்திரோச்சாடணம்

என்னவேதிரிசூலிபிரணவத்தை யெழிலானசத்துருவின் பாவுக்
கல்லோ, சொன்னபடிமந்திரமாம் வட்சரத்தை தோறுமல்தானுரைத்
து வுருவுபோடு, நன்னயமாய்வுருவதுவும் மேயதென்றுக்கால் நலமாக
ஹரிஹரி யென்றேயோது, குன்றுனஅரசனொளி சக்கரத்தை கொற்றவ
னேசொரூபமதில் நின்றுவோதே. (௬௭௧)

ஓதவே திரு திரு யென்றேயோது ஒளிவானசக்கரத்தைப் பின்
னுமோது, நீதமுடன் நிருபுரையின் புவனைவாலை நிலையான ஓம் பத்தி
ர காளிவாவா, தோதமுடன்சத்துருசம் ஹாரிவாவா தோறுமல் ஓம் ஓ
ம் யென்றேயோது, ஆதமுடன்வுன்கையில்கபாலமேந்தி வப்பனேகண்
டகோடாலியென்னே. (௬௭௨)

கோடாலியென்றதொரு பீஜமோது கொற்றவனே யகோரமென்ற
கோரவாவா, தாடாண்மைகொண்டதொ ... தண்ணை ... ள்ள
புகைபுகை தனியேவாவா, பாடா ... பெற்றஜல ஜலமே ... ங்
கான கும்பய கும்பய மென்றோது, ... ஹண ... யே
வாவா நிகட்சியுடன் தக தக யென்றேயோதே. (௬௭௩)

என்றவுடன் பாஷய பாஷய வென்றேயோது யெழிலான அம் இ
ம் குரோம் யென்றேயோது, வென்றிடவே லலி லலி லாங்கென்றோது
வேதாந்தாந்தாயினது இருளையாலே, சென்றிடவே லிலி லிலி கிலி
கிலி யென்றோது செயலான லுலு லுலு லூம்யென்றோது, தென்றி
சையாற்பரிபாஷைதுறையாமற்றுன்செயலானவட்சரத்தையோதுவீரே

ஓதுவீர்வுயிரென்ற பிரணவந்தான் ஓகோகோநாதாக்கள் சொல்
லமாட்டார், தீதுபுகவட்சரங்கள்கூறென்றனைந்து நிரமுடன் மம மம வ
சங்கென்றோது, வாதுகூறி சிவ சிவயாமென்றேயோது மகத்தான குரு
குரு வாவென்றோது, சூதுபுகழ் ஓம் கிலிம கிலியும்வாவா சுந்தரியே
பகவதியே சுடரென்றோதே. (௬௭௫)

சுடரான ஓங் குடனே பாஷாங்குசத்திரி சுத்தமுள்ள சூலி சூலி
வாவா வாவா, தடமான சொரூபமதில் நக நக வென்றோது தாக்கான
கலைவகுத்து தக தக வென்றோது, திடமுடனே எகுட எகுட வட்சர
த்தை தீர்க்கமுடன்தலைசுழற்றி மாறுமாறு, சடமுடனே கும்பக கும்
பக மென்றோது சாங்கமுடன்சுவாலாமென் றோதல்கூறே. (௬௭௬)

கூறவே சுசீசுவாலாம் யென்றேயோது குறிப்பானபிரணவத்தை தலைகீழாய்மாறு, மாறவேபிரதிசுவால மென்றேயோது மகத்தானதுக் கினிச் சுவாலாவென்று, ஆறவே நரதிர யென்றேயோது வப்பனே கருவான பீஜமாகும் மீறவே கோமாங்கிஷ பக்ஷணிமேயவாவா மிக்கான பாஜிபந்து பந்தென்றே. (சூஎஎ)

பந்தானபந்ததுவுங் குருபீஜமாகும் பாங்கான ... கார வட்சரந்தான், சிந்தனையில்தானிணைந்து மாறு மா... டாட்டே டாட்டே யென்றேயோது, தொந்தமுடன் ஐயுங் ... திறக்கொவ்வாது சூதானவட்சரந்தான் அதர்வணமேயாகும், ...வட்சரங்க ளொவ்வொன்றுதாமும் பாலகனையொன்றுக்கொன்றுயிருமாமே. ()

உயிரானவெழுத்துக்கு வொவ்வொன்றுக்கும் வுத்தமனேபஞ்சபூத ஆவியுண்டு, மயிலானவட்சரந்தான் மாமாமாகி மகத்தான ராம் ராம் ரீம் மென்றேறுது, பயிலானவட்சரந்தான் ரூம் ரூம் மாகும் பாங்கான ஆக்குருஷா ஆக்குருஷா யாகும், ஓயிலான கிலீம் சௌவும் ஐயும் மாகும் வுத்தமனேபகவதி ஓம் மென்றேயோதே. (சூஎகூ)

ஓம் யென்றவட்சரந்தான் சத்துருசங்காரம் ஓகோகோநாதாக்கள் மறைத்துவைத்தார், ஆம் மென்ற சத்துருவை மடி மடி யென்றேறுது வப்பனே மசி மசி நசி நசி யென்றேறுது, ஏம் யென்றவட்சரந்தான் படுபடு சுவாஹா யெழிலானமித்துருவுக் கிதுபோலுண்டு, தீம் யென்ற சுடரானவட்சரந்தான் தீர்க்கமுடன்மித்துருவுக் குண்டேபாரே. ()

உண்டானவட்சரத்தால்பகையாளிதம்மை வுத்தமனேரோகமதை விளைக்கலாகும், கண்டாலும்விதிகார்கள் புத்திமான்கள் காசினியிலோர் றிவா ரிந்தப்போக்கு, திண்டானசாத்திரங்கள் ரிஷிகள்தேவர் தீர்க்கமுடனிந்நூல்போல் சொன்னதில்லை, பண்டானபிரணவத்தால் பாரிலமாண்பர் பார்தனிலேமானுவது திண்ணந்தானே. (சூஅக)

மாரணவித்தையால் மடிந்தவரை எழுப்புதல்.

தானானயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் தன்மையுள்ளபுலிப்பாணி மைந்தாபாரு, சோனானமாரணத்தால் மடிந்தோர்தம்மை கொற்றவனேயெழுப்புதற்கு மார்க்கஞ்சொல்வேன், தேனானமனோன்மணியாள் பாதம்போற்றி செப்புவேன்மானுக்கள் பிழைக்கவென்று, பானானசாத்திரத்தின் வுயிரெழுத்தை பாருலகில்பாடுகிறேன் பண்பாய்த்தானே. (சூஅ௨)

பண்பான அகாவணத்தால் மடிந்தார்தம்மை பாலகனை விதிப்படியே கொண்டுவந்து, நண்பான மசாணமென்ற கனை போயா நாயகனே சடங்குபோல் சவத்தைத்தானும், திண்மையுடன் காளிறுத்தி காவலோடும் தீரமுடன் காளிபீடமதில் வசியத்தாலே, உண்மையாய பிரணவத்தை யுச்சாடிக்க வுத்தமனே வுயிர்தானும் வருகும்பாரே. (௯௮௩)

பாரென்றால் பிரணவங்க ளொன்றுக்கால் பாங்கான ஹரீம் ஓம் கிலியும் சௌவும், நேரேதான் அம மம் இமமென்றேயோது நெசிதா னருபத்தி னட்சரந்தான், சிரேதான் றிய லிய வய வென்றேயோது சிறப்பான ரீங் ரீங் ரீங ராவென்றோது நேரேதான் யௌவும் சௌவும் கிரீம் மென்றோது தீரமுடன் பிரணவத்தை யோதுவாயே (௯௮௪)

ஓதவே ருமரும ஹுமமென்றோது வுத்தமனே லௌவுடனே வௌவென்றோது, தீமுடனே ஔவுடனே பௌவென்றோது நிலையான வட்டகவி பிரணவந்தான். சாதகமாய்க் கூடலகாதுதான் மசாணகாத தானை சாங்கமுடன் ருத்ராவிருதாவீரி ஆதமுடனே மசாணத்தினையேல லிலகாரி அதிகாரி வரிசந்திர பகவானே தாமேனா. (௯௮௫)

காணவே வாபக்கரிசிக் குடையதேவா சந்தவாணுத்தரமாக காளிவிபா, பூணவே செப்பூசி நாட்டுமபாலா புரமாணாவுக்குமென்ற வுசிகீதா வேணவே விருட்சமென்ற வடமூலந்தான் மிகநாளேவா பிரிங்கி வசியதேவா, ஆணைக்கேயமிருக்குந்தொரு அமீகாரதீரா வப்புயேனசோடசங்க ளுடையோன் றானே. (௯௮௬)

சோடசமாமபதிறை சரமுடபெறது சூலமுடனைகே பந்துமடா கினிவாவா, பாடமுடன் மசாணத்துறை வாவாவாவா பாரமீதுசிமபகதிளா பகவதிவாவாவா ஆடலுடன் சந்திரவாத்தியமேட குமணைடாலா அதிகாரவீரகாளிவாவா, கூடலுடன் தெங்கட்ட பதியமாந்து கோடாலிபுரபலி கொள்ளுந்தேவே (௯௮௭)

கொள்ளவே துலதிருதகிமாறி ஜந்சம காரதொருமயதி ராளி சத்துருமாரி, துளரவே பதர்வணத்தை கலைசிறாக்கி துயபுர வாய்முதயோடு மாலைபூணடு, விள்ளவே வுயகரிசி துளாரிவிழ விஷக்குதத்தவாயாலே பமுர்தங்கொள்ளு, உள்ளபடியாமூதரசங் கொள வாயப்பா வுத்தமனே பானவுயிர வாவென்றோதே. (௯௮௮)

ஓதவேதலைமாடு காலமாடாக்கி யுத்தமனைசபந்தனையே யிரட்டு வாய்நீ, சாதகமாய்சடாட்சர பவனைவாவா சட்டமுடன்போனவுயிர் திரும்பிவாவா, வேதனைகள்நீங்கியல்லோ விருட்டிப்பார்த்து வேகமுட னதர்வணந்தா னில்லையில்லை, தூதனையுங்காலனையுஞ் ஜெயித்தேனெ ன்று துப்புரவாய்லட்சமுரு போடுபோடே. (௬௮௯)

போடப்பாகாதாந்த வுள்ளெழுத்தை பொங்கமுடன்லட்சமுரு போடுபோடு, ஆடப்பாமசானகரை நின்றுகொண்டு வப்பனைவாசல்வ ழி தடைகள்கட்டி, நீடப்பாவரிச்சந்திரன் காவல்முன்னே நிட்சயமாய் அதர்வணத்தால் சிக்கினேனை, பாடப்பாமசானகரை விட்டுவிட்டு பார் மீதுஓடிவிடு ஓடென்றேகே. (௬௯௰)

ஓடென்றவுச்சாடம் கூறும்போது வுத்தமனையதர்வணமும் நீங் கியல்லோ, நீடென்றுவஸ்துசுத்தி பாணஞ்செய்து நிலையுடனேபாலமிர் தம் வாயிலிட்டு, கூடென்றுவசிமூலிவாயிற்கொண்டு கொற்றவனேசெ விதனிலே யூதும்போது, மேடென்றுவையகத்தில் கண்திறந்து மே தினியிலுயிரதுவும் வருகும்பாரே. (௬௯௧)

பாரேதான்சித்துமுனி ரிஷிகள்தாமும் பாருலகிலதர்வணத்தை ம றைத்துவைத்தார், ஆரோதான்சொன்னவர்க ளாருமில்லை வப்பனே யாமுமக்குச் சொன்னேனும்பாரு, நேரோதான்காலாங்கி நாதர்தாமும் நே ர்மையுடனெந்தனுக்கு வுரைத்தநீதி, பேரோதான்சொல்வதற்கு யாரு மில்லை போனபோகரிஷி யுரைததேன்பாரே. (௬௯௨)

உரைத்தேனேயேழாயிர சத்தகாண்டம் வுற்பனமும்விற்பனமு மெத்தவுண்டு, நிரைத்தேனேயாறுவது காண்டத்துள்ளே நேர்மையுட னதர்வணத்தைக் கூறினேன்யான், விரைத்ததொருபொருளெல்லா மி திலடக்கம் விருப்பமுடன்பாடிவைத்தார் சத்தகாண்டம், குரைத்ததொ ருபொருளெல்லா மெந்தனுயர் குருமுனியாமகஸ்தியரிற் காணலாமே.

காணலாமகஸ்தியனார் காவியத்தில் கருவானபன்னீரா யிரத்திலப் பா, பூணலாம்பனிரெண்டுகாண்டத்துள்ளே புகட்டினோர்கோடிவகை க் களஞ்சியங்கள், கோணவேயண்டசரா சரங்களெல்லாந் திறட்டியெ ன்றகுறடதுபோல் கூறினோர்காண், வேணபடி குருநூலாம் பன்னீராயி ரம் விருப்பமுடன்பாடிவைத்தார் முனிவர்தாமே. (௬௯௪)

மூலியானயென்பாட்டன் அகஸ்தியர்தாமும் முனையானகாலாங்கிநாதர்தாமும், சுனைபோலேசாத்திரங்களெனக்குரைத்தார் தோற்றமுடன்பிரகாச மானசித்து, மனைதோறும்சாத்திர வேதாகமங்கள் மார்க்கமுடன்பாடிவைத்தார் பலநூல்சித்தர், வினையாலேமாண்டதொருமாண்பருக்கு விரிவான அதர்வணங்கள் சொல்லார்காணே. (௬௯௫)

பதினெண்சித்தர்கள் ஜாதியும் தலைமுறைமையும் கூறல்.

தானானபுலிப்பாணி மைந்தாகேளு தன்மையுள்ளகாலாங்கி சொன்னநீதி, கோனானபதினெண்பேர் சித்தர்தாமும் கொற்றவனேநவகோடி சித்தர்தாமும், பானானாற்பத்தெண் பேர்களப்பா பலபலவாஞ்சாத்திரங்கள் பாடிவைத்தார், மானானதலைமுறைகள் ஜாதிமார்க்கம் மன்னவனேசாத்திரத்திற் சொல்லாரன்றே. (௬௯௬)

சொல்லவில்லைசிலபேர்கள் சொன்னாரப்பா சுந்தரனேசிலபேர்கள் மறைத்துவைத்தார், வெல்லவேகாலாங்கி நாதர்தாமும் வேகமுடன்குளிகையது கொண்டுமேல்லோ, கல்லானமலைகளிலுங் குகைகள்தன்னில் கண்டுமேஆராய்ந்து சித்துதம்மை, புல்லவேஜாதிபே தங்கள்ரெண்டு புகழானசாத்திரத்தில் வசனித்தாரே. (௬௯௭)

வசனித்தாரெந்தமக்குக்காலாங்கிநாதர்வளமுடனேசொன்னதொரு ஜாதிமார்க்கம், நிசமுடனேயானுரைப்பேன் நீதவானே நிஷ்களங்கமானதொரு பேதஞ்சொல்வேன், தசமானகாலாங்கி நாதர்தாமும் தாக்கானமயன்ஜாதி யென்னலாகும், கசடன்றுதலைமுறைகள் பத்தேயாகும் காசினியில்கண்டவரை யுரைத்திட்டோமே. (௬௯௮)

உரைத்தோமேயெந்தனிட ஜாதிமார்க்கம் வுத்தமனேவிஸ்வகர்மனென்னலாகும், நிரைத்ததொருரோமரிஷி ஜாதிபேதம் நிலையானவலைவீசுஞ் ஜாதியப்பா, திரைத்ததொருஎந்தனது தலைமுறைதானப்பா திரளானபதினெட்டுத் தலைமுறையேயாகும், வரைத்ததொருரோமரிஷி தலைமுறைதானப்பா வரகானபணிரெண்டு தலைமுறைதானுமே. (௬௯௯)

தலைமுறையாமச்சமுனி ஜாதிபேதம் தண்மையுள்ளகல்லானையென்னலாகும், கலையானகோத்திரங்கள்யிருபத்திரெண்டு காசினியில்கண்டவரை சொல்லலாச்சு, மலையானசட்டமுனி ஜாதிபேதம் மகத்தானசிங்களவனென்னலாகும், சிலையானகோத்திரங்கள் பதினாலாகும் சிற்பரனேகண்டநூலறிந்தமட்டே. (௭௱)

மட்டாயிடைக்காடர் ஜாதிபேதம் மகத்தானகோனே யென்னலாகும், இட்டமுள்ளகோத்திரங்கள் பதினெட்டாகும் இசமானநூலதனிற் கண்டமட்டும், சட்டமுடன்தன்வந்திரி ஜாதிபேதம் தகமையுள்ள மகாவிஷ்ணு வென்னலாகும், வட்டமுள்ளதலைமுறைகள் முப்பத்திரெண்டிவனை முன்னே கண்டறிந்த நூலிதாமே. (எ௱௧)

காமனாம்பிரபாவரி மைந்தனாம்கேளு தகமையுள்ளமூலத்தி யீசனப்பா, சாமானியமானமெத்தொரு ஜாதிபேதம் சாங்கமுடன்வேளாள னென்னலாகும், கோமானுந்தலைமுறைகள் இருபத்தேழாம் கொற்றவனேநாற்படியே சொல்லலாச்சு, பூமான்களித்தாரைக்க நூல்கள்தன்னில் புகட்டவில்லைஜாதிபேதம் புகலார்தாமே. (எ௱௨)

தானானசிலநூலில் சொன்னாரப்பா தன்மையுள்ளசிலநூலிற் சொல்லவில்லை, கோனானஅகத்திசர் ஜாதிபேதம் கொற்றவனேவேளாள னென்னலாகும். பானானதலைமுறைகள் சொல்லுகின்றேன் பதமுடனே நாற்பத்தி யெட்டேயாகும், மானானநூல்தனிலே கண்டாற்போல மகத்தானபோகரிஷி வகுத்திட்டாரே. (எ௱௩)

வகுத்திதனையவாக்கியர் ஜாதிபேதம் வளமானசங்கரகுல மென்னலாகும், தொகுப்புடனேதலைமுறைகள் இருபதாகும் தொகுமல்சாத்திரங்கள் புகன்றவாறும், மிகுத்திடவேராமதேவர் ஜாதிபேதம் மிக்கானவிஷ்ணுகுல மென்னலாகும், பகுத்திடவேதலைமுறைகளாறதாகும் பாங்கானவர்நூலிற் கண்டீடாயாமே. (எ௱௪)

கண்டீடாமேபுஜண்டரிட ஜாதிபேதம் கருவானவக்கினிகுல மென்னலாகும், விண்டதொருதலைமுறைகள் நாற்பத்தைந்து வீரானசாத்திரத்தில் கண்டதன்றி, பண்டிதபாம்பன்னியரின் புராணக்கூறு பலபல வாய்ப்பாடினைத்தார் கனியாணர்தாமும், தண்டகம்போல்சாத்திரங்கள் மிகவுங்கூறி தாமறைத்தார்சித்தமுனி ரிஷிகள்தாமே. (எ௱௫)

தானானகருவூரார் ஜாதிபேதம் தாக்கானபஞ்சணத்தில் குலத்திலொன்று, கோனானகன்னார ஜாதியாகும் கொற்றவனேநூல்தனிலே கண்டவாறு, தேனானதலைமுறைகள் நாற்பத்திரெண்டு தெளிவுடனே நூல்தனிலே சொன்னார்பாரு, மானானமார்க்கமது சமயபேதம் மார்க்கமுடனேசவர்நூ லறியலாமே. (எ௱௬)

ஆதிபதிவபுண்ணாக்கீசர்தாமும் அவருடையஜாதிபே தங்களைச் சொல்வேன், நெறியானகன்னடிய ஜாதியாகும் நேர்பானதலைமுறைக

ளிரு

ளேதென்றக்கால், குறியானபதினெட்டுத் தலைமுறைதானாகும் குறிப் பானசாத்திரத்திற் சொன்னவாறு, முறியானசித்தர்மகா ரிஷிகள்நூலி ல் முறைபாடுசிலபேர்கள் சொல்லாரன்றே. (௭௱௭)

சொல்லாரேபுலிப்பாணி மைந்தாகேளு சுத்தமுள்ளகண்மணியே புகல்வேன்பாரு, வல்லானபுலிப்பாணி மரபேதந்தான் மார்க்கமுடன் வேடனது ஜாதியல்லோ, புல்லானதலைமுறைக ளொன்பதாகும் புகழா னநூல்தனிலே புகலுமவாறு, நல்லானரிஷிதேவர் முனிவர்தானும் நல முடனேசிலருரைத்து சிலர்மறைத்தாரே. (௭௱௮)

மறைவானசங்கீசர் மறைபேதென்றால் மார்க்கமுடன்மிருதமகா ரிஷியார்கோத்திரம், குறையானதலைமுறைக ளேதென்றக்கால் கொற் றவனேமூன்றுதலை முறைதானாகும்; நிறையானசாத்திரத்திற் சொன்ன வாறு நிஷ்களங்கமாகவல்லோ கண்டறிந்தோம், முறையானமுனிதே வர் ரிஷிகள்நூலில் முற்றிலுஞ்சொல்லார்கள் மறைத்தார்காணே. ()

காணவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் கருவானபுலஸ்திய ரின் மரபேதென்றால், தோணவேசிங்களவ ஜாதியாகும் தோறுமல் தலைமுறைக ளெட்டதாகும், பூணவேபுலஸ்தியரின் நூல்கள்தன்னில் புகலாமல்மறைத்துவைத்தார் முன்னோர்தாமும், வேணபடியான்கண்ட வரைதானப்பா வித்தகனேவெளியிட்டேன் பண்பாய்ப்பாரே (௭௱௰)

பாரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பாலகனேபுலிப் பாணி மைந்தாகேளு, நேரேதான்வியாசருட மரபேதென்றால் நேர் பானசந்திரகுலஜாதியாகும், சீரேதான்தலைமுறைக ளொன்பதாகும் சிற ப்பானபுராணவகை கூறும்வாறு, ஆரேதான்சாத்திரங்க ளறியாமற் றான் வப்பனைகட்டிவைத்தார் கோடியாமே. (௭௱௰௧)

கோடியாங்கேதறையர் மரபேதென்றால் கொற்றவனேயானுரைப் பேன் கண்டமட்டும், நீடியேபிரம்மகுல மென்னலாகும் நெடிதானகாப் பியங்கள் கூறும்வண்ணம், ஆடியதோர்தலைமுறைக ளேதென்றக்கால் வப்பனைவதசமு மென்னலாகும், பாடியதோர்ரிஷிதேவர் முனிவர்தா மும் பண்பாகத்தாமுரைத்தார் பான்மைதானே. (௭௱௰௨)

பான்மையாம்பாக்கோடு மரபேதென்றால் பாங்கானகுலம்விட்டு குலம்புகுந்தோர், மேன்மையாம்முன்சொன்ன ராமதேவர் மெய்யா னகுலமென்றேசெப்பலாகும், தென்மாரிபொழிகின்ற மக்கதேசம் சென் றல்லோபெயர்மாறி வுருவுகொண்டோர், வான்மீதுவழுந்துதிபோ லுதிக்குந்திரன் மகத்தானராமதேவ ரென்னலாமே. (௭௱௰௩)

என்னவே ராமதேவரென்னலாகும் யெழிலான தலைமுறைகள் பதி னாறாகும், மின்னவே னாமமது ரெண்டேயாகும் மிக்கான சாத்திரங்கள் சொன்னவாறு, உன்னிதமாய்ப்பலமுனிவர் சித்துதாமும் வுத்தமனே தாமுரைத்தார் மறைப்போமெத்த, நன்னயமாய்ப்பல நூலுங் கண்டா ராய்ந்து நலமுடனே ஜாதிபேதம் வுரைத்தேன்பாரே. (௭௱௪)

பாரப்பா கொங்கணரின் மரபேதென்றால் பாங்கானயாதவ குல மேயாகும், ஆரப்பா தலைமுறைக ளென்னசொல்வேன் வப்பனையி ரெட்டிப் பதினாறாகும், நேரப்பா வவர்சொன்ன காண்டந்தன்னில் நேர்மையு டன்மரபதுவுஞ் சொல்லவில்லை, ஊரப்பா பலபேருங் கூடியல்லோ வுத்தமனே யாமுரைத்தார் ஜாதிதானே. (௭௱௫)

ஜாதியாமின்னமொரு மார்க்கங்கேளு தயவானபுலிப்பாணி மைந் தாபாரு, ஆதியாம்தட்சணா மூர்த்தியப்பா வப்பனேயவர்மரபு யேதெ ன்றுக்கால், நீதியாங்கவுண்டனென்ற மரபேயாகும் நிஷ்களங்கமான தொரு மூர்த்தியென்பார், சோதிடமாம்பல நூல்க ளாராய்ந்தேதான் சொல்லனதொருமொழியதுவு மெய்யதாமே. (௭௱௬)

மெய்யான தலைமுறைகள் பதிமூன்றாகும் மிக்கானசாத்திரத்தி லு ரைத்தவாறு, துய்யவே கோரக்கர் மரபேதென்றால் துப்புரவாய்மார ட்டியனென்னலாகும், மையவே தலைமுறைகள் பதினொன்றாகும் பா ங்கானசாத்திரத்திற் சொன்னவாறு, மெய்யவே வேதமுனி சித்தாமு ம் வெகுநூல்களாராய்ந்து பார்த்தார்தானே. (௭௱௭)

தானென்னமொரு மார்க்கங்கேளு தயவானபுலிப்பாணி கண் ணேயப்பா, கோனனெனபால ராஜரிகர்ஷி கொற்றவனேபாடி வைத்தாருண்மையாக, பானுவவர்மரபு யேதென்றுக்கால் பாங்கான பப்பரவர் மறையேயாகும், மானனதலைமுறைக ளெட்டேயாகும் மக த்தானபெருநூலில் சொன்னார்பாரே. (௭௱௮)

சொன்னாரே சோதிமா முனிவரப்பா துப்புரவாய்ஞானியென்ற கோர்வைசெய்தோர், தென்னனாதட்சணை பதியிலப்பா தேற்றமுடன்ம லைதனிலே யிருக்குஞ்சித்து, பன்னவேமரபதுவு மேதென்றுக்கால் பாங்கானபள்ளனென்றே செப்பலாகும், உன்னிதமாய்த்தலைமுறைக ளா றேயாகும் வுற்பனமாய்வோதிவைத்தார் நூலில்தாமே. (௭௱௯)

நூலான நூல்தனிலே சொன்னமார்க்கம் நுணுக்கமுடன்வெகுகோ டி சொன்னாரப்பா, பாலானடமரகர் மரபேதென்றால் பாங்கானமறவ

ரென்றே செப்பலாகும், காணைதலைமுறைகள் காலேயாகும் தாக்கான வர்நூலிற சொன்னவாறு, பாலானமொழிப்போலே முனிவர்தாமும பாடிவைத்தாப்பசமுடன் பாரிலதானே (௭௨௰)

பாரினிலேயின்னமொரு மாகதந்தேஞ் பாலானபுலிப்பாணி மைந்தாகேளு, சிலகுஞ்சுரதாைைமைந்தாம் ப்ரம பிரான ரதுபவு மே தென்றுபகால், ஆரியனார்தாமுறை ந ந கைக றமம வட்ட அகமு டையரென்னலாகும, சூரியன் போர் ம ரு ம ம சொ ல்லுதற்குரவில்லைய பாவிலலேதானே. (௭௨௧)

பாவிலலேபுலிப்பாணி மின் யை கரு ாந்த டுனோ ரிஷியாஞ் சா திபேதம, ஆவியுடனபூமிதனி ல் நந்தசித்து வைாகதிறைல் பிற நதசித்து, காவிலயமகொண்டதொரு களாரைஜா க ந ணைஜாதியென் றே செப்பலாகும, ாவிலெசாலவாற்ற யார ்லாகும ாலமானதலை முறைகள நாறபத்தெட்டே. (௭௨௨)

எட்டானவாலமீசா மாபேதென்றால பெழிலானவேடருடஜாதி யாகும, திட்டானதலைமுறைகள சொலமிலைபாரீர் திரகக முன்முபப தது ரெண்டேயாகும, சட்டமுடனவாலமீகா காவியத்தில சாதகமுட னெழுதிவைத்த படிசாவைம, மட்ட முடனவாலமீகா நூலறிந்து வள முடனேகணடறிந்து சொன்னாதாமே. (௭௨௩)

சொன்னேனேயின்னுமொருமாயகமபாரு தாய்கானபுலிப்பாணி மைந்தாகேளு நன்னயமாயவூவசியாள் சாதத்திரததில நலமாகத்தானு ரைதத ஜாதிபேதம, உன்னிதமாய்த்தோதா மடந்தையென்று வுத்தமா கன்சித்தாமுனி சுழுமவனை ம பன்னியதலைமுறைகள பருகசொ ன்னது பாலகனே அடிமையென ஜாதியாமே. (௭௨௪)

ஜாதியாமின்னமொரு மா ககவிேக ா மாகமுடனயானுவைப்பே ன மைந்தாபாரு, ஆதியாங்கால முனி யெனறோதது வப்பானகுறவரிட ஜாதியாகும, நீதியாக்தலைமுறைக ளாமெறபடாகும நிஷ்களங்கமாகவல லோ சாததிரத்தில், பாதிமதிசடையணிந்த தபசிராஜும பாடிவைதத நூல்தனிலே காணலாமே (௭௨௫)

காணவேமகாசித்து அறிவானந்தா கைலாசநாதரென்றே செப்ப லாகும, தோணவேவளருவரு ஜாதியாகும் ஸ்ரீகோருமலவர்செய்த நூ ல்றகாணபீர, வேணவேதலைமுறைக ளொன்பதாகும வெகுநாளாய்ம லைதனிலே யிருந்தசித்து, ஆணவங்கள்தானொங்கி யிருந்தசித்து வப் பனே அறிவானந்த சித்துதாமே (௭௨௬)

சித்தானசித்தமுனி சொல்வேன்கேளீர் சிறப்பானதுகப்பேயர் சித்தேயாகும். முத்தானஜாதியது யேதென்றாக்கால் மூனையானநாயனூர் ஜாதியாகும, சத்தமுள்ளதலைமுறைகள் மிரெட்டாகும் சார்பாகவவர் நூலிற் காணலாகும் சித்தமுமேவாணிபங்கள் விர்த்திசெய்து நிலையாகபூமிதனி லிருந்தசித்தே. (எ௨எ)

சித்தென்றால்சித்துமிதுயென்னசொல்வேன் சீர்பாலாபுலிப்பாணி மைந்தாகேளு, புத்தியுள்ளபூபாலர் புனிதவானே பூவுலகிலிருந்ததொரு குதம்பைசித்து, பத்தியுடன்பெண்ருபங் கொண்டசித்து பாருலகில்வெகுநாளா யிருந்தார்தாமும், சுத்தியுடன்தேவதா பூஜையாமெ சுந்தரனேவெகுகால மிருந்தார்தானே. (எ௨அ)

தானனவவர்மரபு யேதென்றாக்கால் தாக்கானகோனாரின் ஜாதியாகும், கோனானையிடையரென்றே சொல்லலாகும் கொற்றவனேயவர் நூலிற் சொன்னநீதி, மானனதலைமுறைக ளேதென்றாக்கால் மகத்தானபத்தொன் டொன்றுமூன்று, தேனானமனோன்மணியாள் கடாட்சத்தாலே தெளிவாகக்கண்டறிந்தேன் பலநூல்தானே. (எ௨௯)

நூலானபலநூலும் கண்டாராய்ந்து நுட்பமுடன்தானுரைத்த வண்மைநீதி, பாலானபாம்பாட்டி மரபேதென்றால் பாலகனேஜோகியென்ற ஜாதியாகும், கோலானமாதவத்தார் குலத்தினாலே கொற்றவனேசமாதியது பிரவேசமாகி, சேலானவையகத்தில் சிலதுகாலம் சிறப்புடனேசமாதிவிட்டு வந்தசித்தே. (எ௩0)

வந்தகொருசித்துக்கு முறைமைசொல்வேன் வளமுடனேசோடசமா மொன்றுமூன்று, சிந்தனையாயவர் நூலிற் கண்டாராய்ந்து சிறுடனேயாமுரைத்தேன் மொழிதப்பாது, சுந்தரனேகாலகண்டர் முனிவர்தாமும் சுத்தமுடனவர்மரபு யேதென்றாக்கால், தந்திரமாங்கள்ளருட ஜாதியாகும் தாரணியிலவர் நூலிற் கண்டவாறே. (எ௩௧)

வாறானதலைமுறைக ளொன்றுபத்து வளமையுடனவர் நூலிற்சொல்லலாகும், நாறுண்டுவெகுகால மிருந்தசித்து நுட்பமுடன்சீஷவர்க்கங் கொண்டசித்து, காறுனையின்னமொருமார்க்கங்கேளு கருவானபுலிப்பாணி மைந்தாகேளு, ஆறுனசுப்பிரமணியர் மரபேதென்றால் வப்பனைசைவமென்ற பேடமாமே. (எ௩௨)

பிடமாக்கலைமுறைக ளேதென்றக்கால் போனதூற்றிரண்டுபத் தமூன்று, கீடாதிநூல்களிலே கண்டவாறு கிருபையுடன்நானறிந்த மட்டுஞ்சொன்னோம் கீடனையூகிமுனி மாபேதென்றால் நிசமானகுறும்பருட ஜாதியாகும், தாடானதலைமுறைக ளெல்லாஞ்சொல்வேன் தாக்கானபதினெட்டு வொன்றுமூன்றே. (௭௯௧)

ஒன்றானஜாதியப்பா யின்னஞ்சொல்வேன் வுத்தமனெபுலிப்பாணி வுகந்துகேளு, நன்றானஜெமதக்கினி ஜாதிபேதம் நலமானவைசனமென்ற ஜாதியாகும் குன்றானதலைமேதி கிரணங்கண்டே கிருபையுடன்கண்டல்லோ சாதமுன்பேர், வெல்லிடவே தலைமுறைகள் பத்து வேகமுடனவர்தூலே (௭௯௪)

பாரேதானி பிரணக்கியமுனிவர்தானும், ஜாதி நும் கோனபிரபுலிங்கனிலே நூலார், கோ திம்பதம் சேர்மையுடன்கண்டறிந்த ஜாதிமார்க்கம், தலைமுறைகளிரெட்டொன்று மித்தகனை நூல்தனிலே கண டாம்பாரே. (௭௯௫)

பாரேதான்சண்டசர் ஜாதிமார்க்கம் பாங்கானவன்றவனு ரென்றேயாகும், நேரேதான்தலைமுறைக ளொன் த்து சேர்மையுடனவர் நூலிற் சொன்னோதி, சீரதான்த்ர்மு ரிஷிகள் தேயர் சிறப்புடனேபா வைத்த நூலேக்கண்டு வர்பிரித்து வகுத்தயானும் பேரின்பமிலேநின்று பாடினேனே (௭௯௬)

பாடினேனின் புலிப்பாணி மைந்தபாரு, நாடியே தாமே தென்றால், கேடி ஜாதியாம் மெத்தவுண்டு சொல்லொணா தலைமுறைக கென்றக்கால் வப்பனேரெண்பத்து (௭௯௭)

ஒன்றானசாத்திர யங் னபலநூலுங்கண்டுதேர்ந்து, சென்று நோடு சிறப்பானசாத்திரகுறி தொகுப்பைகண்டு தாள்பணிந்து, வேகமுடன்குளிகையது பூண்டு, குன்றனமலைகுகைகள் யானுங்கண்டு கொற்றவனே காலாங்கி தான் கூறினேனே. (௭௯௮)

கூறினேன்காவியந்தா னேழாயிரமாகும் கூறானசத்தகாண்டம் போலேநூல்கள், மீறியதோர்நூலுண்டோ வையகத்தில் மிக்கானநூலிதுபோ லார்தான்சொன்னார், மாறுபாடாகவல்லோ சாத்திரநூல்கள் மகத்தானசித்துமுனி சொன்னாரப்பா. ஆறுதலம்போலாக யிந்தநூல்தான் வப்பனேயுந்தனுக்கு வறைந்திட்டேனே. (௭௩௧)

போகர் சித்தர்கள்வயதும் சமாதிமார்க்கமுங் கூறல்.

அறைந்ததொருபின்னையொரு மார்க்கங்கேளு வப்பனேபுலிப்பாணி மைந்தபாரு, நிறைந்ததொருசித்தர்முனி ரிஷிகளானோர் நீடாழியுலகுபதி யிருந்தவாறும். குறைந்ததொருவவரவர்கள் யதுமார்க்கம் கூறுகிறேன்வையகத்தில் கண்டாராய்ந்து. மறைந்ததொருசமாதியின்றன்மார்க்கமெல்லாம் மன்னவனேயுந்தனுக்கு நிகழ்த்துவேனே. ()

நிகழ்த்துவேன்காலாங்கி நாதர்தம்மை நெடுங்காலசெய்தியெல்லாம் நிகழ்த்துவேன்பாரு, புகழானகாலாங்கி நாதர்தாமும் புண்ணியனார் வெகுகால மிருந்தசித்து, அகந்தனிலேமூன்றுயுகஞ் சமாதிசென்று வப்பனேமுயற்சியுடன் வந்துசித்து, புசெகந்தனிலேசீனபதி தேசந்தனில் சிறப்புடனேகுளிகைகொண்டு போனசித்தே, (௭௪௧)

சித்தானகாலாங்கி முனிவர்தாமும் சிறப்புடனேசீனபதி தன்னிற்சென்று, முத்தானகாலநாத னருளும்பெற்று முனையானசமாதிதனிலிறங்கியல்லோ, சத்தமுடனசரீரி வாக்கினாலும் தாரணியில்சமாதிமுக மிருந்துகொண்டு, பத்தியுடன்சீனபதி மாண்பருக்கு பலகாலுந்தரிசனைகள் புரிகுவாரே, (௭௪௨)

புரிகுவார்வயதினுட மார்க்கந்தன்னை புகலுவேன்காலாங்கி நாதருக்கு, சரியுடனேமூவாயிரஞ் சொச்சமப்பா சாங்கமுடன்வயததுதானென்னலாகும், குரியானவருஷ மூவாயிரந்தான் குறிப்புடனேயவர்நூலிற் சொன்னநீதி, நெறியுடனேவையகத்தி லிருந்துமல்லோ நேர்மையுடன்சமாதிமுகஞ் சென்றார்தானே. (௭௪௩)

தானானபோகரிஷி மார்க்கஞ்சொல்வேன் தயவானபுலிப்பாணிமைந்தாகேளு, கோனானவெனதையர் காலாங்கிநாதர் குறிப்புடனேயெந்தனுக்குச் சொன்னநீதி, பானானவயததுவும் முன்னூறொன்று பான்மையுடனெந்தனுக்கு வுபதேசித்தார், தேனானகுளிகையதுபூண்டுகொண்டு தேசமெல்லாஞ்சுற்றிவந்தேன் காலந்தானே. (௭௪௪)

காலமாம்வெகுகால மடியேன்றனும் காலாங்கிநாதருட கிருபையாலும், கோலமுடன்திருக்கமலம்வீற்றிருக்கும் கொம்பனையாள்மனோன்மணியாள் கிருபையாலே, ஆலகாலமுண்டதொரு அரன்பாகத்தால் வப்பனேவையகத்தில் யானுமல்லோ, தாலமெலாஞ்சுற்றிவந்து யடியேன்றனும் தாரணியில்சித்துமுனி ரிஷிகண்டேனே. (௭௪௫)

கண்டேனேவெகுகோடி சித்துதம்மை காலாங்கிநாதருட கிருபையாலே, கொண்டதொருவையகத்து வதிசயங்கள் கொற்றவனேயடியேனுந் தானறிந்து, உண்டானவுளவுபதி மார்க்கமெல்லாம் வுத்தமனே கண்டல்லோ மிகவாராய்ந்து, பண்டிதங்கள்மிகப்பார்த்து பலநூல்சேதி பாங்குடனேசீனபதிக் குரைத்திட்டேனே. (௭௪௬)

உரைத்தேனேசீனபதிமாண்பருக்கு வுத்தமனேலோகவதிசயங்களெல்லாம், வரைந்திட்டேனேசீனபதிப் பெண்களுக்கு வகுப்பானசித்துமுனி ரிஷிகள்மார்க்கம், திரைகடல்சூழஷ்டாங்க லோகமெல்லாம் திறட்டினேன்போகரேழாயிரந்தான், புரையொன்றும்நேராமல் புகழ்ந்தநூலாய் புகட்டினேன்சீனபதி மாண்பருக்கே. (௭௪௭)

மாண்பானபுலிப்பாணி மைந்தாகேளு மகத்தானவையகத்தில் முன்னூராண்டு, ஆண்மையுடனிருந்தே னதிசயங்கள் வப்பனேயான் கண்டவாறுமட்டும், வின்போகக்காலமது சாத்திரத்தின் வீரானவுளவுவிதானங்கள்கண்டு, தாண்மையுடன்யானுரைப்பேன் யிதிகாசங்கள் சட்டமுடன்சொல்லுகிறேன் பண்பாய்க்கேளே. (௭௪௮)

கேளேதான்ரோமரிஷி வயதுமார்க்கம் செவ்வமுடன்சொல்லுகுறேன் பண்பாய்க்கேளு, நாளேதான்போகாமல்ரோமர்தானும் நலமுடனேசமாதிமுகஞ் சென்றுமல்லோ, ஆளேதான்வருஷமது வையகத்தில் வப்பனேதானிருந்து வெளியுமாகி, பாளேதான்போகாமல் வருஷமறுநூறு பாங்குடனேவீற்றிருந்த சித்துமாமே. (௭௪௯)

சித்தானமச்சமுனி வாறேதென்றால் சிறப்பான வையகத்தி லிருந்தசேதி, பத்தியுடன்முன்னூறு வாண்டுமட்டும் பகவானைத்துதிசெய்து காயங்கொண்டு, முத்தியுடன்சமாதிக்குச் சென்றுமல்லோ மூர்க்கமுடன்மூவாண்டு சமாதிபூண்டு, கத்தனையேதானினைந்து கைலைதன்னில் காசினியைவிட்டுமல்லோ யேகினாரே. (௭௫௰)

ஏகவேசட்டமுனிவரேதென்றால்யெழிலாகயெண்ணூறு வாண்
டுமட்டும், போகவேசமாதிமுகம் மூன்றுமுறைதானும் பொங்கமுடன்
பூமிதனி லிருந்துமல்லோ, சாகமுடன்வெகுகால மிருந்தசித்து சாங்க
முடன்சிஷவர்க்க முபதேசங்கள், ஆகமங்களோதியல்லோயிருந்தசித்து
வப்பனேயோகமகாசித்துமாமே. (௭௱௧)

ஆமேதான்பின்னமொரு மார்க்கங்கேளு வப்பனேயிடைக்காடார்
வாறுசொல்லேன், போமேதான்வெகுகால மிருந்தசித்து பொங்கமு
டன்காயாதி கற்பங்கொண்டு, நேமமுடன்நிஷ்டையது பூண்டுகொண்
டு நெடுங்காலம்நூறாண்டு மிருந்தசித்து, வாமமுடன்தேவதா சாபத்
தாலே வையகத்திலிறந்தவொரு சித்துவாச்சே. (௭௱௨)

ஆச்சப்பாதன்வந்திரி வயதுமார்க்கம் வப்பனேசொல்லுகிறேன்
மன்னுகேளு பாச்சலுடன்வயததுதான் யெண்ணூறாண்டு பாங்குட
னேசமாதிமுகங் கொண்டசித்து, மூச்சடங்கிதன்வந்திரிபகவான்றானு
ம் மூன்றுமுறைசமாதிதனி லிருந்தசித்து, ஆச்சரியமாகவல்லோ வை
யகத்தில் யமர்ந்தசித்துதன்வந்திரி யென்னலாமே. (௭௱௩)

என்னலாம்வெகுகோடி மாண்பர்பேச்சும் யெழிலானதன்வந்திரி
பகவான்றானும், பன்னவேமூலத்தி னீசாப்பா பாங்கானவயததுதா
னேதென்றக்கால் துன்னவேயிருநூறு வாண்டுமாகும் துப்புரவாய்
பூமிதனி லிருந்தசித்து, பின்னவேகாலாங்கி நாதர்தம்மின் விருப்பமு
டனுபதேசங் கொண்டசித்தே. (௭௱௪)

சித்தானசித்துமுனி மூலத்தீசர் சிறப்பானமலைதனிலே யிருநூ
றாண்டு, சத்தியுடன்பூசையது செய்துமல்லோ சாங்கமுடன்மலைதனி
லே அமிர்க்கியமாகி, வித்தகனார்சிஷவர்க்க மாண்பரோடும் விருப்பமு
டன்கனேதனிலே யிறங்கினார்பார், சத்தபரிசங்களற்று தாணிமீதில்
சாங்கமுடன்தானிருந்தார் சிலநாள்தானே. (௭௱௫)

தானேயின்னமொரு மார்க்கங்கேளு தயவானபுலிப்பாணி மைந்
தாபாரு, கோனேயெனதையர் காலாங்கிநாதர் கொற்றவனாரெந்தனுக்
குச் சொன்னநீதி, தேனனமனோன்மணியாள் கடாட்சத்தாலே தே
ஜோமயம்பெற்றுக்கொண்ட கும்பயோனி, பானுபராபரத்துக் கொப்ப
தான பாருலகிலகஸ்தியரைப் பகருவேனே. (௭௱௬)

பகருவேன்அகஸ்தியர்க்கு வயதேதென்றால் பட்சமுடன்தொகை
கணக்குக் கூறொண்ணாது, நிகரமுடன்சொல்வதற்கு யாராலாகும் நீதி

யுடன்நூல்களிலே யுரைத்தமார்க்கம், அகரமென்றவட்சரமுமவராலா ச்சு வப்பனேநாலுயுகங் கடந்தசித்து, சகரமெலாந்தான்துதிக்குங் கும் பயோனி சதுரானவகத்தியரென் றறையலாமே. (௭௬௭)

அறையலாம்வெகுகோடி காலமப்பா வபபனேசமாதிமுக மிருபத் தொன்று, நிறையவேசமாதிமுகம் வையகத்தில் நேர்மையுடன்தானிரு ந்த சித்துமாகும், குறையவேவயததுதான் சொல்வதற்கு குவலயத்தில் முடியாது ஒருவராலும், மறையவேநூல்தனிலே காண்பதற்கு மகத் தானவயததுவு மில்லைதானே. (௭௬௮)

இல்லையேயின்னமொரு மார்க்கங்கேளு யெழிலானபுலிப்பாணி மைந்தாபாரு, தொல்லுலகம்புகழுஞ்சிவ வாக்கியர்தாமும் தோறுத வையகத்தில் வெகுநாளப்பா, புல்லவேசமுசார வாழ்க்கைவேண்டா புகழானவண்பத்தோ ராண்டுமட்டும், வெல்லவேசமுசாரவாழ்க்கையற் று வெகுநாளாயிருந்ததொரு சித்துமாச்சே. (௭௬௯)

ஆச்சப்பாவெகுகால வருஷமாக வப்பனேசமுசார வாழ்க்கையற் று, மூச்சடங்கிமடந்தனிலே யிருந்தசித்து மூர்க்கமுடன்சமுசாரம் வேண்டியல்லலா, பாச்சலுடன்தாய்தந்தை சீர்பாதத்தை பணிந்துமே மனதுவந்து கேட்டார்தாமும், மாச்சலுடன்தாய்தந்தை மனங்கரைத் து மார்க்கமுடன்மகன்றனையே கேட்டார்தாமே. (௭௭௰)

சிவவாக்கியர் தாய்தந்தைமாரை இல்வாழ்க்கைகேழ்க்குதல்.

தானனபிரகாச மானசோதி தண்மையுள்ளசிவவாக்கிய புனிதவா னே, கோனனகுருநாதர் கடாட்சத்தாலே கொற்றவனேசமுசார வாழ் க்கைவேண்டி, தேனனமனோன்மணியாள் கடாட்சத்தாலே தேற்றமு டனில்வாழ்க்கை கேட்டீரப்பா, மானனயில்வாழ்க்கை கேட்டதாலே மன்னவனேயிப்போது செய்யலாமே. (௭௭௧)

செய்யவேசந்தோஷங் கொண்டுமல்லோ சிறப்புடனேமனதுவந்து மனம்நொடித்தார், துய்யவேசிவவாக்கியர் பெயருண்டாக துப்புரவாய் சிவானந்தர் பிறந்தார்தானும், வெய்யவேயெண்பத்தோ ருண்டுமட்டும் விருப்பமுடன்சிவவாக்கியர் தாமிருந்து, வையகங்கள்தான்புகழ சமாதி மார்க்கம் வளமுடனேயிறங்கினதோர் வளமைபாரே. (௭௭௨)

பாரேதானின்னமொருமார்க்கங்கேளு பாங்கானபுலிப்பாணி மன் னுபாரு, நேரேதான்ராமரென்னுந் தேவரப்பா நேர்மையுடன்வெகுகா ல மிருந்தசித்து, சேரேதான்வயததுவு மிருநூறாண்டு செம்மலுடன்

சமாதிமுகஞ் சென்றசித்து, கூரேதான்மூன்றுமுறை வையகத்திற்குறிப்புடனேசமாதிமுகம் போனார்காணே. (௭௯௩)

காணவேயின்னமொரு மார்க்கங்கேளு கருவானபுஜண்டருடவயதுமார்க்கம், தோணவேமுந்நூற்று அறுபதாண்டு தோருமல்குகைதனிலே யிருந்தசித்து, பூணவேசமாதிமுக மேறவில்லை பொங்கமுடன்முன்னூற்று அறுபதாண்டு வேணபடிவையகத்து வதிசயங்கள் விருப்பமுடன்யாங்கண்டேன் வனோகந்தானே. (௭௯௪)

தானேதான்சித்துமுனி புஜண்டர்தாமும் தண்மையுற்றசீஷவர்க்கந்தனையழைத்து, சோனையிலேபெந்தனுக்குச் சமாதிபூண சுத்தமுடன்சுரங்கமது செய்யவென்ன, ஆனையளவாகவல்லோ சுரங்கஞ்செய்துவன்புடனேமனதுவந்து கூறலுற்றார், மானையர்கைபிடித்து சுரங்கந்தன்னில் மார்க்கமுடன்சாரவிடஞ் சென்றிட்டாரே. (௭௯௫)

சென்றாரேபுஜண்டரெனுஞ் சித்துதாமும் சிறப்புடனேசமாதிமுகஞ் சென்றபோது, குன்றனைமேலேமீதிற் கூடிருந்த குறிப்பானமானதுவும் மனதுவந்து, வென்றிடவேரிஷியாரின் சித்துபாதம் வெகுநாளாய்த்தான்வளர்த்த பாசத்தாலே அன்றுமேகூடிருந்த மான்தானப்பா வப்பனேசமாதிமுகஞ் செல்லலாச்சே. (௭௯௬)

ஆச்சப்பாசமாதிமுகஞ் செல்றபோது வப்பனேசீஷவர்க்க மாண்பர்தானும், மூச்சடங்கிப்போனதொரு புஜண்டரப்பா முனையானவையகத்தில் வருவதில்லை, பாச்சலுடன்சமாதிமுகம் மூடியல்லோ பண்பானபாறைகொண்டு யேகியல்லோ, வீச்சலுடன்மாண்பரெல்லாம் வெளியேயேகி விட்டாரேகோடிதளங் காணலாச்சே. (௭௯௭)

காணவேயின்னமொரு கருமானங்கேள் காசினியிற்கருவூரா ரென்றசித்து, தோணவேநடேசரென்னுங் கருவுண்டாக்கி துப்புரவாய்ப்பாண்டியனுக் கருளுந்தந்தார், பூணவேபாண்டியன் தேவாலயத்தில் பொங்கமுடன்நடேசரைத்தான் செய்துவைத்தோன், தோணவேகாயதி கற்பங்கொண்டு தொல்லுலகில்வெகுகால மிருந்தசித்து. (௭௯௮)

சித்தானகருவூரா ரென்றசித்து சின்மயத்திற்பேரின்பங் கொண்டசித்து, முத்தானவயததுவும் முன்னூறாண்டு மூதுலகிற்பாண்டியனுக் குகந்தசித்து, பத்தியுடன்சிதம்பரமாந் தேவஸ்தானம் பட்சமுடன்நிர்மித்த ஞானசித்து, சத்தியெனும்மடாலயங்க ளுண்டுபண்ணி சாங்கமுடன்சமாதிமுகஞ்சென்றசித்தே. (௭௯௯)

சென்றதொருசித்துமுனி மார்க்கங்கேளு செயலானபுண்ணுக்கு யீசரப்பா, வென்றிடவேவயததுதான் நூற்றிரண்டுபத்து விருப்பமுடன்மரப்பொந்தி லிருந்தசித்து, குன்றுமலேகுளிகையது யளியாசித்து கோபாலாகோபாலா வென்னுஞ்சித்து, தென்றிசையில்வடகோடி கானகத்தில் திருவாத்தின்மரத்தின்மே லிருந்தசித்தே. (எஎ௦)

சித்தானசித்துமுனி நாதநுக்கு சிறப்பானவாசானும் பாம்பாட்டியாகும், சத்தானவையகத்தில் சிலதுகாலம் சாங்கமுடனறியாதவாலிபத்தில், சுத்தமுடனறிபூசை சிவனார்பூசை சுந்தரனாரென்னோரந் செய்துகொண்டு, கத்தனேகோபாலா கோபாலாவென்று காசினியில்வாய்வினத்தி திரிவார்பாரே. (எஎக)

பாரேதான்மாண்பர்களைக் கண்டபோது பாலகனார்வாய்திறந்து யாருங்கேளார், நேரேதான்பசிவந்து வுற்றபோது நேர்மையுடன்கோபாலா வென்றசத்தம், வீரேதான்வீரிட்டு சப்தமிட்டு விண்ணுலகைக்கண்திறந்து பார்க்கும்போது, ஆரோதான்தேவாதி வரத்தினாலே வப்பனேபால்பழமுங் தருவார்தானே. (எஎஉ)

தானானபால்பழமு முண்டபின்பு தாக்கானவழிதடங்கள் காணமாட்டார், கோனானபாம்பாட்டி தனைநினைந்து கொற்றவனார்நடுவீதி பள்ளிகொள்வார், தேனானமின்னாள்மணியாள் கடாட்சத்தாலே தேசமெலாந்தான்திரண்டு வந்திப்பார்கள், மானானபுண்ணுக்கர் கண்திறந்து மகத்தானகோபாலா யென்பார்தானே. (எஎங)

என்னவேபுண்ணுக்கு யீசர்தாமும் யெழிலானமண்ணதனைத் தானெடுத்து. உன்னிதமாய்மாண்பருக்குத் தான்கொடுப்பார் வுத்தமனேமண்ணதுவுந் தித்திப்பாகும், பன்னவேநோயாளி யார்வந்தாலும் பட்சமுடன்மண்கிள்ளித் தான்கொடுப்பார். சொன்னபடிநோயாளி ரோகந்தீர்ந்து சுத்தமுடன்போவார்கள் மெத்தவுண்டே. (எஎச)

உண்டானமாண்பருக்குப் புண்ணுக்கீசர் வுத்தமனேபிரதிவென்ற மண்ணைத்தானும், வண்மையுடன்தான்கொடுத்து வியாதிரோகம் வளமையுடன்தான்தீர்ப்பா ரதீதமெத்த, திண்மையுடன்சிலகாலஞ் சென்றபின்பு தீர்க்கமுடன்வயததுவும் நூறுண்டாச்சு, தண்மையுடன்வையகத்திலிருக்கலாகா தற்பரனைக்காணவெண்ணிநினைத்திட்டாரே. (எஎரு)

இட்டதொருபுண்ணுக்கு யீசர்தாமு மெழிலானதிருவாத்தி மரத்தின்கீழே, சட்டமுடன்திருப்பொந்தி லிருந்துகொண்டு சாங்கமுடன் சிவயோகஞ் செய்துமல்லோ, இட்டமுடன்சிலநாட்கள் கழிந்தபின்பு

தீர்க்கமுடன்மரப்பொந்தி லயிக்கியமாகி, பட்டமரந்துளுக்தல்லோவை யகத்தில் பட்சமுடன்மாண்பருக்கு குருவுமாச்சே. (௭௭௬)

குருவானதிருவாத்தி மரத்தையப்பா கொற்றவனார்வையகத்து மாண்பரெல்லாம், திருவானரோகமது கண்டபோது தீர்க்கமுடன்மரத் துக்குக் காப்புகட்டி, சருவானசருகுவகை யியாழமிட்டு சட்டமுடன் தானறுந்தி ரோகந்தீர்ந்து, பெருமையுடன்வையகத்தில் புனிதவானும் பேருண்டாய்வெகுநாளாய் வாழ்ந்த ர்தாமே. (௭௭௭)

வாழ்ந்தாரேயின்னமொரு மார்க்கங்கேளு வகுப்பானபுலிப்பாணி மைந்தருக்கு, ஆழ்ந்தவேகாலாங்கி கடாட்சத்தாலே வப்பனேவேங்கை தனி லேறிக்கொண்டு, தாழ்ந்திடவேஜலந்திரட்டிப் புனிதவானும் சாங்கமுடன்தாரணியில் சுற்றிவந்தோன், மூழ்ந்திடவேவெகுகோடி காலமப்பா, மூதுலகிலிருந்ததொரு சித்துபாரே. (௭௭௮)

பாரப்பாபுலிப்பாணி பாலனனை பட்சமுடனுந்தமக்கு வயதுசொல்வேன், ஆரப்பாவயததுவு மறுநாறுண்டு வப்பனேவையகத்தி லிருந்தசித்து, நேரப்பாசமாதிமுகஞ் சென்றதில்லை நேர்மையுடனெடுங்காலமிருந்தசித்து, சிரப்பாிவயோகந் தன்னிற்சென்று சிறப்புடனேசின்மயத்தி லிருந்தசித்தே. (௭௭௯)

இருந்தமேவெகுகால மானசித்து வெழிலாகவெந்தனிட வுபதேசங்கள், பொருந்தவேதானடைந்து புனிதவானும் பொங்கமுடன்வையகத்தி லிருந்தசித்து, திருந்தவேமலைகுகைகள் வனந்திரங்கள் தீரமுடன் கண்டறிந்த சித்துவாகும், கருந்தமிழுஞ்செந்தமிழுங் கலந்தசித்து காசினியிலுபவாச சித்துமாமே. (௭௮௰)

ஆமப்பாபுலிப்பாணி மைந்தாகேளு வப்பனேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன், போமப்பாநந்தியுட மார்க்கந்தன்னை புகலுகிறேனவயதுவு மேதென்றக்கால், நாமப்பாவயததுவு மெழுநாறுண்டு நலமானவெகுகால மிருந்தசித்து, வேமப்பாசமாதிமுகங்கண்டசித்து வேதாந்தநந்தியென்று சொல்லலாச்சே. (௭௮௧)

சொல்லவென்றால்நாவில்லைப் பாவுமில்லை சுந்தரனார்யுகங்கடந்த நந்திமூர்த்தி, வெல்லவேமலையடியாம் வாரந்தன்னில் வேண்டியேசமாதிமுக மிருந்தசித்து, புல்லவேரிஷிவர்க்க மில்லாமற்றான் பூதலத்தில் வெகுநாளா யிருந்தார்தாமும், நல்லதொருதேவதா ஸ்தலங்கள்தன்னில் நலமுடனேநந்தியென்ற பேருண்டாச்சே. (௭௮௨)

உண்டாச்சுசித்துமுனி பாலனுக்கு வுற்றதொருநந்திமுகந் தானு மாச்சு, கண்டதொருமாண்பரெல்லா மாலயத்தில் கருத்தினிலேமுன் னின்ற நந்தியென்று. அண்டர்முனிராட்சதரும் ரிஷிகள்தாமும் அந்த ரதுந்துபிமுதலுந் தேவராேனார், மண்டலத்தில்தேவதா ஸ்தலங்கள்த ன்னில் மகத்தானநந்தியென்று மதித்திட்டாரே. (௭௮௩)

மதிக்கவேயின்னமொரு மார்க்கங்கேளு மகத்தானபுலஸ்தியரின் வண்மைசொல்வேன், துதிக்கவேஅகஸ்தியனார் வாசம்பெற்ற துடியா னபுலஸ்தியனு ரென்னலாகும், விதிப்படியேகமலமுனி கோத்திரத்தில் வித்தகராய்வந்துதித்த முனிவர்தாமும், கதிபெறவேயகஸ்தியனார் பாக ம்பெற்று காசினியில்வந்துதித்த சித்துமாச்சே. (௭௮௪)

ஆச்சப்பாபுலஸ்தியரின் வயதேதென்றால் வப்பனேயாறுநூற்றுஅ றுபதாகும், மூச்சடங்கிப்பிராணவத்தை மாறிமாறி மூதுலகில்வெகு கால மிருந்தசித்து, பேச்சறியாமாயாவின் சித்துவப்பா பேரின்பநிலை தனையே துறந்தசித்து, நீச்சனெனும்பஞ்சமரோ டிருந்தசித்து நெடுங் காலவையகத்து சித்துமாச்சே. (௭௮௫)

சித்தானபுலஸ்தியருஞ் சமாதிகேக சிறப்பானதோணமா முனி வர்தம்மை, பக்தியுடன்சீஷவர்க்கங் கொண்டுமல்லோ பாருலகில்சமாதி க்கே யேகவென்று, முக்திபெறசின்மயத்தை மனதிலுன்னி மூதுலகில சமாதிக்கு செல்கவென்று, சத்தியமாயபுவககடலை யொழித்துமல்லோ சட்டமுடன்சமாதிமுக மேகினாரே, (௭௮௬)

ஏகவேவையகத்தில் சமாதிதன்னில் யெழிலாகமுப்பது வாண்டு மட்டும், போகமென்னுமக்கினி நிலையில்நின்று பொங்கமுடன்றானிரு ந்த மாயாசித்து, பாகமுடன்தோணமா முனிவர்தன்னால் பாருலகில் மறுபடியும வந்தசிதது, சாகமதுவாராம லறுநூற்றுசொசசம சாங்க முடன்வையகத்தி லிருந்தார்பாரே. (௭௮௭)

பாரேதான்யின்னமொரு வயணஞ்சொல்வேன் பண்பானயெந்த னது ரேசபாலா, சீரேதான்வேதமென்ற வியாசரப்பா சிறப்புடனே வெகுகாலங் கடந்தசித்து, கோரமென்றவயததுவும் ஆயிரத்துச்சொச் சம் குவலயத்தில்வேதமதை யறிந்தசித்து, தீரமுடன்நூலாதி நூல்க ளெல்லாந் திரைகடலபோலுண்டொரு சித்துகாணே. (௭௮௮)

காணவேவனுந்திரங்கள் குகைகள்நாடு கருவானமலையாறு குண்ணுதாமும், வேணதொருவண்டர்முனி கூட்டத்தார்கள் வெளிகாணு காடுமுத லுறைந்தசித்து, கீணவேசமயமென்ற மார்க்கந்தன்னை நேர்மையுடன்துகைபாடு செய்தசித்து, மாணமருங்கல்விதனி லுறைந்த சித்து மகத்தானமாண்பருக்கு வுகந்தசித்தே. (எஅகூ)

மாண்பானவையகத்து ஜனங்களுக்கு மார்க்கமுடன்வேதமதை யோதுஞ்சித்து, ஆண்மையுடன்சாத்திரங்கள் புராணமெல்லா மவரவர்க்குவுகந்தபடி செய்துவைத்தோன், தாண்மைபெறசைவாதி சமயமெல்லாம் தாரணியில்கொடிநாட்டி யிருந்தசித்து, நீண்மையுடன்காயாதி கற்பங்கொண்டு நெடுங்காலமிருந்ததொரு தவசியாச்சே. (எகூ௰)

தவசியென்றால்மாண்பருக்கு வுகந்தசித்து தாரணியில்சமுசார வாழ்க்கையோடும், பவக்கடலைத்தாணுறித்துப் பாரின்மீது பட்சமுடன்றானிருந்த நொடியசித்து, தவப்பெருமைகொண்டல்லோரிஷிகளோடும் தயங்காமலாசர்முதல் வணங்குஞ்சித்து, நவகண்டவையகமு மறிந்தசித்து நலமானவியாசமுனி யென்றசித்தே. (எகூக)

முனியானசித்துமுனி வியாசர்தாமும் மூதுலகில்பெருமைதனை யறிந்தசித்து, கனிவோடேபோலேபும ரிஷிகள்தம்மை கண்ணினால் கண்டறிந்த சித்துவாகும், பனிபோன்றமலைநாடு பார்த்தறிந்து பட்சமுடன்சென்றல்லோ வுபதேசங்கள், தனிபாகத்தானிருந்துபிரணவத்தை தண்மையுடன்றானறிந்த சித்துதானே. (எகூஉ)

தானசித்துக்கு சமாதியில்லை தாரணியில்வெகுகால மிருந்தசித்து, கோனனகுருக்கள்மா ரிஷிகள்தேவர் கொற்றவனுர்சிஷவர்க்கமாண்பர்தன்னை, மாணுனவையத்தி லறிந்தசித்து மகத்தானவியாசமுனிசித்துபோல, தேனனவேதமதை யறிந்தசித்து திறைகடலிற்கண்டதுண்டோ வுண்மைதானே. (எகூங)

உண்மையாமின்னமொரு மார்க்கமேகேளு வுத்தமனேபுலிப்பாணி மைந்தாபாரு, வண்மைபெறும்தேறைய ரென்னுஞ்சித்து வளமான ரோகமதைத் தீர்க்குஞ்சித்து, நண்மைபெறவயதுவு மேதென்றுக்கால் நாதாந்தசித்துமுனி கும்பயோனி, திண்மையுடனெழுதிவைத்தசாத்திரத்தில் தீர்க்கமுடன்வயதுமுன்னூ றென்னலாமே. (எகூச)

என்னவேவயததுவு முன்னூறாண்டு யெழிலானதேரையர் முனிவருக்கு, பன்னவேசாத்திரத்தின் வகுப்பைப்போலே பட்சமுடன்கண்டறிந்து சொல்லலாச்சு, துன்னவேயிவர்தமக்குச் சமாதியில்லை துப்புரவாய்ஜகத்தாசை விட்டோர்தாமும், முன்னமேயகஸ்தியனு ருபதேசங்கள் முறைப்படியேகண்டறிந்த சித்துமாச்சே. (௭௯௫)

பாரேதான்சத்தகாண்டந் தன்னிற்றானே பாருகானலோகவுதயங்களெல்லாம், நேரேதானுருவகருக்கடமடம் நெடுத்தாகாண்டமிது குருநூலாகும், சீரேதான்கைக்காண்ட மேழாங்காண்டம் திறமுடனின்னவதி சதுர்வக்கூறும், சீரேதான்காலாங்கி கடாட்சத்தாலே சிறப்புடனேபாடிவைத்தேன் பெருநூல்தானே. (௯௯௮)

நூலானநூலிதுதான் சத்தகாண்டம் நுணுக்கமுடனிலடக்கம் சொல்லொண்ணாது பாலானபதினெண்பேர் சொன்னநூலும் பயிலானவிந்நூலுக் கொவ்வாதப்பா, சேலானநவகோடி ரிஷிகள்தாமும் செம்மலுடன்கொடுவரை நூலுந்தெய்தார், மாலானநூலிதுவும் மகிமைமெத்த மகத்தானவிந்நூல்போ லில்லைதானே. (௯௯௯)

தானேயென்னையர் காலாங்கிநாதர் தன்னையுடனவர்பாதகடாட்சத்தாலும், தேனானமனோன்மணியாள் கிருபையாலும் தேற்றமுடன் காவியமே மூவாயிரத்தை, மானுனைவையகத்தோர் மெய்ப்புக்கவென்று மகத்தானசீனபதி மாண்பருக்கு பனுகாண்டமே மூவாயிரத்தில் பட்சமுடனிருமூன்று காண்டமுற்றே. (௲)

## போகர்சத்தகாண்டத்தில்

## ஆறாவதுகாண்டம்

முற்றுப்பெற்றது.

—(*)—

பாணஅங்காள வல்லியென்றும், மானுணகாத்தவ ராயனென்றும் மகத்தானஅனேகவித தெய்வம்பாரே, (௯௮௧)

பாரேதான்தெய்வமது வனேகங்கோடி பாரினிலேமாண்பர்மேல் சன்னதங்கள், நேரேதான்தெய்வமயல் கொண்டோர்போலும நேர்மையுடன்பலபலவாஞ் சன்னதங்கள், கூரேதான்குடிகள்படை சேனைதன்னில் கோஷ்டமிட்டுசன்னதங்கள மிகக்கொண்டாடும், வீரேதான்பிராணய வுச்சாடணந்தான் வீரமுடன்தானுரைப்பார் வெகுவாய்த்தானே. (௯௯௧)

தானேகேள்லாடகவி யனேகஞ்சொல்வார் தாக்கானபரிபாஷைமிகவுஞ்சொல்வார், மானேகேள்சன்னதங்கள் மிகவுண்டாகி மார்க்கமுடன் இரேகமது நடிக்கக்கொண்டு, தேனேசேனைதாபாச நிலையிலநின்று தீர்க்கமுடன்வசிதங்கள் மிகவுரைப்பார், தானேதான்தெய்வமது கொண்டாற்போலே தகமையுட [illegible] பேசுவாரே.

பேசுகின்றவார்த்தைதனை மெய்யென்றெண்ணி பேரானதட்சணத்து மாண்பரெல்லாம் காசுபணம்நிதியனைத்தும் மிகவுந்தந்து கருத்துடனேகுறிமுறைகள் கேட்பாரப்பா, ஆசுகவிசாத்திரங்கள் பார்த்துமென்ன அறிவுகெட்டமாண்பரந்த மயிலாகதான், தேசுலவும்தூடையாய் போகசிஷா புண்ணியனேமிகவுரைப்பேன் கேளுகேனே. ()

கேளேதான்தட்சணத்து மாண்பரெல்லாம் கேவலமுடன்குறிகேட்டு மதியுங்கெட்டு, பாரோதான்சாத்திரத்தை மிகப்பாராமல் பாருதனில்மதிகெட்ட குருடராகி, ஆளேகானறிவழிந்து மானங்கெட்டு வப்பனேவஞ்ஞான வலையிற்சிக்கி நாளேதான்போகாமல் மனுகாளாய் நாட்டினிலேயிருந்தவர்கள் கோடிகாணே. (௯௯௩)

காணவேயென்தனது சீஷபாலா கருவானபுலிப்பாணி மைந்தாகேளு, தோணவேதேசாதி தேசமெல்லாம் துப்புரவாய்க்குளிகைகொண்டு வடியேன்றானும், நீணவேகாலாங்கி கடாட்சத்தாலே நீதியுடன்சத்தசாகரமுந்தாண்டி, பாணமுடனெழுகடலுஞ் சுற்றிவந்து பாங்கான நிலைதனிலே நின்றிட்டேனே. (௯௯௪)

இட்டேனேஅட்டதிசை யானுங்கண்டேன் யெழிலானதட்சணத்து மாண்பர்போலே, கெட்டதொருமாண்பர்களைக் கண்டதில்லை கெடியானதட்சணமாம் பதியிலப்பா, திட்டமுடன்வெகுகோடி மாண்பர்தம்மை தீர்க்கமுடன்கண்டேனே தட்சணத்தில், சட்டமுடன்காலாங்கி நாதர்தாமும் தானுரைத்தவண்ணமது போல்கண்டேனே. (௯௯௫)

உ

கடவுள் துணை.

1433

மகாமகத்துவம் பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

பெருநூலையெழுநூறில்

# சத்தகாண்டம் - ஏழு.

மூன்றாங்காண்டம்.

காப்பு.

காருணிய கணபதியின் பாதம் போற்றி
    தன்னையுன்னமேனுள்ளனிபோய் பாதம்போற்றி
கோணவே மேல்முருகர் காப்பணிந்தேன்
    கொற்றவையாயிருபெறும்பதந்தான் போற்றி
மாணவனாகிய நோர் பாதம்போற்றி
    மந்திரமாகலைமுனிகாப்பணிந்தேன்
தேணவே சகாதேவர் திருப்பணிந்தேன்
    தேற்றமுடன் காலாங்கிபாதங்காப்பே. (க)

காப்பானபதினெண்பேர் முனிவர்தாமும் பலபலவாய்ப்பாடலை ச்செய்து நூல்கள்பேதம், அப்பான நூல்களுமே யிவைகள்சொன்னார் முறையானசித்துமகாரிஷிபார்தாமும், வாப்பான பெருநூலிலவைகள்சொன் னார் வளமையுடனிந்நூல்போ லாருஞ்சொல்லார். காப்பானநூலி துதான் சத்தகாண்டம் தன்மையுடன்பாடிவைத்தார் போகரிஷிதானே.

தானானசத்தகாண்ட மேழாயிரத்தில் தன்மையுள்ளகாண்டமிது
யேழாங்காண்டம், கோனானகாலாங்கிகடாட்சத்தாலே கூறினேன்வை
யகத்து வதிசயங்கள், தேனானமணிபோலே ழாயிரத்தில் தேற்றமுட
ன்சொல்லிவைத்தே னேழாங்காண்டம், மானானகைக்காண்டம் நீதி
மார்க்கம் மன்னவனேயுத்தமக்காய் ஓதினேனே. (௩)

ஓதினேன்சினபதி மாண்பருக்கு வுத்தமனேகாண்டமே ழாயிரந்
தான், நீதியுடன்சன்மார்க்கநிலையுஞ்சொன்னேன் நிஷ்களங்கமானதொ
ரு வழியுஞ்சொன்னேன், பாதிமதிசடையணிந்த தம்பிரான்கள் பாருல
கில்செய்ததொரு நூலையெல்லாம், ஆதியந்தம்முடியுடனே பொருளா
ராய்ந்து வப்பனேசின்மயத்தின் வழிசொன்னேனே. (௪)

சொன்னதொருபொருள்களெல்லா மிதிலடக்கம் சுந்தரனேபோக
ரேழாயிரந்தான், மன்னவர்கள்வையகத்து வாழ்க்கையெல்லாம் மார்க்க
முடனிதிலடக்கஞ் சொல்லொண்ணாது, தென்னவர்கள் தேவாதி முனி
வர்தாமும் தேற்றமுடன்செய்ததொரு நூலையாலும், பன்னவேதிரட்டி
யல்லோ பெருநூலாக பாரினிலேவிளைதவகை சொல்லிட்டேனே. ()

இட்டேனேயிதிகாசப் பொருள்களெல்லாம் யெழிலானபோகரே
ழாயிரத்தில், சட்டமுடன்பாடியல்லோ நுணுக்கமாக சாங்கமுடன்செ
ய்துவைத்த பெருநூலப்பா, கட்டமதுவாராது யிந்நூலப்பா நலமான
வேதையிது கோடிக்கோடிம். நிட்டமுடன்நாதாக்கள் சொன்னதில்லை
தீர்க்கமுடன்சத்தகாண்டம் பண்புதானே. (௬)

பண்பானவாறுவகை காண்டத்துள்ளே பலகோடிவேதைமுக மன
ந்தஞ்சொன்னேன், நண்பானநாதாக்கள் நீதிமார்க்கம் நலமுடனேயா
ரேனுஞ் சொன்னதில்லை, திண்பானநீதிவழிக் குளியசித்தை தீர்க்கமு
டன்பாடிவைத்தே னின்னூலுக்குள், வண்பானபெருநூல்தான் குருநூ
லாகும் வண்மையுடன்பாடிவைத்தேன் காண்டமாமே. (௭)

காண்டமாஞ்சத்தகாண்ட மேழாயிரந்தான் காவியங்கள்போல
வொரு நூலுமில்லை, பாண்டவாள்வையகத்து மாண்பரெல்லாம் பாங்
குடனேசித்துவகை முனிவர்வாழ்க்கை, தாண்டவம்போல்பெருநூலை
ழாயிரத்தில் சாற்றினேனாறுகாண்டந் தன்னிற்குள்ளே, பூண்டதொரு
வோக்கவதிசயங்களெல்லாம் புகட்டினேன்காலாங்கி கடாட்சந்தானே. ()

தாணாசத்தகாண்டந் தன்னைப்போலே சாற்றினாகஸ்தியனார்மு
னிவர்தானும், கோணாபன்னீரா யிரந்தானப்பா கொற்றவனேபுலஸ்
தியருக் குபதேசித்தார், பாணாபனிரெண்டு காண்டஞ்சொன்னார் பா
லகனே வாயிரத்துக் கொருகாண்டந்தான், தேனாமனோன்மணியாள்
கிருபையாலே தேற்றமுடன்பாடிவைத்த நூல்தான்பாரே. (௯)

பாரேதானேழுலட்சங் காப்புதன்னை பாலகனேபாடிவைத்தா ரனந்தமாக, நேரேதானின்னாலே ழாயிரந்தான் நேர்மையுள்ளகாண்டமது தன்னைப்போலும், சீரேதானகஸ்தியனா ருண்டுசெய்த சிறப்பான பன்னீரா யிரத்தைப்போலும், ஆரேதான்சொன்னதுண்டோ நூலையப்பா மெய்யலவொன்றுமல்லவே வுரைத்திட்டேனே. (௰)

உரைத்திட்டேனெழுநூல்க ளனந்தங்கோடி யுத்தமனேயின்னாலும் பெரும்பதாம்பா, கரைகண்டார்பொருள்களெல்லா மிதிலடக்கம் காசினியில்கண்டவர்கள் ளில்லையோசொல், கரைதிரையும்வருவதில்லை யிந்நூல்கண்டால தர்க்கத்தமுதமேபோல் காணுவார்கள், கரைபடாத்தகதைபோலே வெண்ணெய்வெண்டாம் கக்காதேகுருநூலாம் மெய் நூலாமே (௰௧)

நூலானநூலுக்குள் மார்க்கஞ்சொன்னேன் நுட்பமுடன்மார்க்கமது வென்னவென்றால், பாலானசித்தருக்கு நீதிசொன்னேன் பாங்குடனேயனிதவழி விதியுஞ்சொன்னேன், சேலானசன்மார்க்கந் துன்மார்க்கந்தான் செப்பினேன்கடைக்காண்ட மேழினுள்ளே மாலானமகத்துவங்கள் சொல்லொண்ணாது மகத்தானநீதிவழி பாரீரே. (௰௨

காணவேசத்தகாண்ட மேழினுள்ளே கருவானகடைக்காண்டந் தன்னுக்குள்ளே, பூணவேசித்தையென்ற நூலுக்கப்பா புகட்டினேன் புலிப்பாணி மைந்தாகேளாய், ஆணவங்கள்தானொழிந்து மைந்தாநீயும் வப்பனேசித்தாதி முனிவர்க்கெல்லாம், நாணமுடன்முடிவணங்கி கரங் குவித்து நற்பாதகமலமதை வணங்குவாயே. (௰௩)

வணங்கியேநூலதனைப் பதனமப்பனாவு வகையில்லாகசடருக்கு ஈயவேண்டாம், கணக்கமெனுங்குருவையப்பா மாண்பர்தாமுந் சுந்தரனேவெகுபேர்க ளிருப்பாருண்டு, கனமுடையராட்சதர்கள் தன்னைப்போலே க்ருமிகளுமெத்தவுண்டு ஈயவேண்டாம், மணங்கமழும்புண்ணியர்கள் தம்மைத்தேடி மகத்தானநூல்கொடுத்தால் புனிதமாமே. ()

புனிதமாங்கருமிகட்கு கொடுத்தாயானால் பூபாலகண்மணியே பாபமெய்தும், கனிவுடையபுண்ணியர்கள் வெகுபேருண்டு காசினியி லுன்னைவந்து நூல்கேட்டாலே இனிதானவார்த்தையது மிகவுஞ்சுறி

யெழிலான நூலுக்கு சாபந்தீர்த்து, தனியாகத்தானழைத்து வுபதேசி த்து தாரணியில்பிழைக்கும்வகை சொல்லுவீரே. (௰௫)

சொல்லவென்றால்நாவில்லைப் பாவுமில்லை துரைராஜகாலாங்கிநா தர்தம்மை, புல்லவேயவர்தமது பதாம்புயத்தை போற்றியேயென்று ரும் மனதுவந்து, அல்லலதுவிட்டகற்றி யன்புகூர்ந்து வப்பனேசதா நித்தம் மனதிலுன்னி, வெல்லவேயுபதேச மோதியல்லோ விருப்பமு டன்நூல்கொடுத்தால் புண்ணியமாமே. (௰௬)

புண்ணியமாமின்னமொரு மார்க்கங்கேளு புகழானபுலிப்பாணி மைந்தாபாரு, மண்ணினிலேவெகுகோடி சித்துதாமும் மகத்துவங் கள்கொண்டதொரு புனிதவான்கள், கண்ணியதோர்நூல்களெல்லா மி கவுங்கூறி கலமுடனேமறைத்துவைத்தா ரனேகங்கோடி, உண்மையா ய்நூலதனைப்பாடியல்லோ வுத்தமனேமறைத்ததிறலோன்றுங்காணே.

ஒன்றானசித்துமுனி ரிஷியைப்போலும் ஒகோகோநாதாக்கள்தன் னைப்போலும், குன்றான நூலதனை மிகவும்பாடி குகைதனிலேமறைத் துவைத்தார் கோடிமாண்பர், வென்றிடவேயகஸ்தியரு மிகவாய்ப்பாடி வெட்டவெளிகுகைதனிலே மறைத்துவைத்தார், தென்றிசையில்சித் தர்களுந் தாமுமல்லோ தெரியாமல்மலைமீது ளொளித்தார்தானே. ()

தானனசாத்திரத்தை பாடியல்லோ தன்மையுடன்குகைதனிலே வைத்தாரப்பா, கோனனரும்பமுனி ரிஷியர்தாமும் கூட்டமிட்டுசாத் திரத்தை மறைத்துவைத்தார், மானனகாலாங்கி நாதர்தாமும் மார்க்க முடன்நூலதனைப் பாடியல்லோ, தேனனசீஷவர்க்கமாண்பருக்குத் தே ற்றமுடன்நூல்கொடுத்தார் திண்ணமாமே. (௰௯)

போகர் இமயகிரிவடபாகத்தில் சிங்கம் குட்டிஈனுவதைக்கண்டது.

திண்ணமாமின்னமொரு மார்க்கம்பாரு திர்க்கமுடன்புலிப்பாணி மைந்தாகேளு, வண்ணமாமேருவுக்குவடபாகத்தில் மகத்தானகடலோ ரங்காட்டகத்தில், நண்ணவேசிங்கமதை யானுங்கண்டேன் நாதாக் கள்சித்துமுனி யங்குமுண்டு, திண்ணமுடன்குளிகையது கொண்டுமே ல்லோ தீர்க்கமுடனவ்வனத்தை யிறங்கினேனே. (௨௰)

இறங்கினேன்வடபாகங் கடலோரத்தில் யெழிலானயிருளடைந்த கானகந்தான், உறங்குமேகரடிபுலி சிங்கந்தானும் ஒகோகோநாதாக்கள் மெத்தவுண்டு, திறமுடையகரிக்கூட்டஞ் சொல்லொண்ணாது திரளா னவட்டகோடி கானகத்தில், குறைவன்றிவாழுமது மிருகமெல்லாம் கொ ற்றவனேயிமயகிரி வடபாகந்தானே. (௨௧)

தாணுமூற்பக்கம் அரிகள்கூட்டம் தாக்கானமேற்பக்கஞ் சரிகள்கூட்டம், கோணமேற்பக்கம் பரிகள்கூட்டம் கொற்றவனேகீழ்ப்பக்கம் நரிகள்கூட்டம், தேனுனநடுமையங் கானகந்தான் தேவிமனோன்மணி யாருமறியாநாடு, மானைபரிதிமதி காணுநாடு மாத்தானசில்லென்ற காடுதானே. (உஉ)

காடானநடுமையக் கானகத்தில் கரடிபுலிசிங்கமது வாழும்நாடு, தாடாண்மைகொண்டதொரு தழைந்தநாடு தகமையுள்ளகானகந்தான் சித்தர்நாடு, நாடாளும்ராஜர்பதி கண்டதில்லை நலமுடனே தேவரிஷியிருக்குநாடு பாடாண்மைகொண்டதொரு பக்கள்நாடு பாரினிலேயாரேனுங் காணாதாமே. (உங)

காணாயவ்வனத்தின் மகிமைதன்னை கதையுரைப்பேன்புலிப் பாணி மன்னுகேளு, தோணமல்சித்தர்முனி ரிஷிகளுக்கும் தொல்லுலகில்கண்டறியா வதிசயங்கள், நானுதாசிங்கமென்ற காட்டகத்தை நன்மையுடன்குளிகைகொண்டு சென்றயானும், வினைக்காலமது கழியா மற்றன் விருப்பமுடன்சிலகால மிருந்திட்டேனே. (உச)

இட்டேனேநெடுங்கால மடியேனானும் யெழிலானகாலாங்கிகிருபையானும், திட்டமுடன்குளிகைகொண்டு கானகத்தில் தீர்க்கமுடன் சுற்றிவருங் காலந்தன்னில், பட்டையம்போலாண்சிங்கம் பெண்ணைக் கண்டு பாச்சலுடன்மோகமது மிகுதமாகி சட்டமுடன்கலவிதனில் மிகக்கலந்து சாங்கமுடனிருக்குமது காலந்தானே. (உரு)

காலமாமானுடனே பெண்ணுங்கூடி கலவிதனிலிருக்கின்ற நானுங்கண்டேன், காலமாம்பன்னிரண்டு வருஷந்தானும் தாக்கானபெண்சிங்கங் கருவுமாகி கோலமுடன்பூரணமாக் கெற்பங்கொண்டு கொற்றவனையீனுகிற காலமாச்சு, சாலமதுயென்சொல்வேன் மன்னுகேளு சாங்கமுடனொருவருந்தான் கண்டிலாரே. (உசா)

பெண்சிங்கம் யானைக்கூட்டத்தில் குட்டியீனுவது.

கண்டேனேகானகத்திலதிசயங்கள் கண்கொள்ளாமகிமையது யென்னசொல்வேன், அண்டர்முனிராட்சதர்க ளறியாநாடு யவ்வனத்தில் சிங்கமது கற்பங்கொண்டு, பண்டுபலவஸ்துங்க ளருந்தியல்லோ பாங்குடனேகெற்பவேதனையுமாகி, அண்டமுடியாமலது சிங்கந்தானும் அவனிதனில்வேதனைகள் படுகலாச்சே. (உஎ)

ஆச்சப்பாவாண்சிங்கந் தானுமல்லோ அரிவையெனும்பெண்சிங்கந் தன்னைக்கண்டு, பாச்சலுடன்யானையது யிருக்குங்கூட்டம் பாண்மையுடன்தானறிந்து மனதுவந்து, மேச்சலுடன்பெண்சிங்கந் தன்னைக்கூட்டி மேன்மையுடன்கரிக்கூட்டந் தன்னிலங்கே, மாச்சலதுவாராமல் சிங்கந்தானும் மன்னவனேசென்றல்லோ நிற்கலாச்சே. (உஅ)

நிற்கவேகரிக்கூட்டம் முன்னதாக நேரானசிங்கமது பின்னதாக, விற்பனமாய்முதுகொடுத்து நின்றுகொண்டு வீரமுடன்குட்டியது யீன்றபின்பு, சொற்பெரியகுட்டியென்ற சிங்கந்தானும் சுந்தரனேமத்தகெஜந் தலையிற்பாய்ந்து, உற்பனமாமூளையது உரிந்துமல்லோ வுத்தமனேசிங்கமது யிறங்கும்பாரே. (உகூ)

பாரேதான்சிங்கமது யிறங்கும்போது பாங்கானகரிக்கூட்டம் நடுங்கியல்லோ, நேரேதான்தலைவாறு திசைமாறிதானும் நேர்மையுடன் கானகத்தைச் சென்றுபோகும், சீரேதான்சிங்கமென்ற குட்டிதானும் திறனானகரிக்கூட்டந் தன்னைவென்று, வீரேதான்நாட்குநாள் யிரையுங்கொண்டு விதிபடவுகாட்டகத்தே வருகுவகானே. (௩௰)

கானவேசிங்கமது பிறவியல்லோ கைலாயநாதருட கடாட்சத்தாலே, தோணவேவையகத்தில் குட்டியீன்று தொல்லுலகில்வாழ்குவது மகிமைமெத்த, ஆணவங்களகற்றுமுண்டு அரிதனக்கு அவனியிலேராஜனென்ற மிருகமாச்சு, பூணவேவையகத்தின் மிருகமெல்லாம் புகழானசிங்கத்தின் கீழுமாச்சே. (௩௧)

கீழானமிருகமது வனேகமுண்டு கீர்த்தியுள்ளசிங்கமது ராஜனப்பா, பாழானகாடுகளி லிருக்குஞ்சிங்கம் பார்த்தவர்களாரேனுங் கண்டதுண்டோ, சாழலுடன்கானுறு தன்னிலப்பா சட்டமுடன்விழுந்திறந்த கதைகேட்டார்கள், ஆழானமடுக்களிலே விழுந்திறந்த அதிசயங்கள்வையகத்தில் கண்டார்தாமே. (௩௨)

சிங்கத்தினால் சித்தர்கள்மடிந்தது.

தாமானயின்னமொரு மார்க்கம்பாரு தண்மையுள்ளபுலிப்பாணி மைந்தாகேளு, கோமான்களறிந்ததில்லை குவலயத்தில் கொற்றவனேயின்னமொரு மகிமைசொல்வேன், சாமானியமானதொரு சித்தரப்பா சட்டமுடனைம்பதுபேர்கூட்டமாக, ஆமானமாகவல்லோ கூட்டங்கூடி அடவானகாட்டகத்தில் வந்திட்டாரே. (௩௩)

வந்தொருவழிதனிலே மார்க்கங்கண்டு வண்மையுடன்சிங்கமது
கர்ச்சித்தல்லோ, சிந்தையாய்மாண்பருடை சைகைதன்னை சீறலுடன்
தானறிந்து கோபமிஞ்சி, தொந்தரவுசெய்வதற்கு மனதுவந்து தோற்
றமுடன்பாச்சலது வதிகமாகி, விந்தையுடன்சிங்கமது வேவுகொண்ட
வீரியத்தைக்கண்டார்கள் சித்துதாமே. (௧௪)

{சித்தர்கள் சிங்கத்தைக்கண்டு கல்லாலமரத்தின்மே லேறிக்கொண்டது.}

சித்தானசித்துமுனி ரிஷிகள்தாமும் சீருடன்வருகின்றசிங்கந்த
ன்னை, புத்தியுள்ளசித்துமுனி பார்த்துயேங்கி புகழானவன்பதுபேர்கூ
ட்டத்தோடும், பத்தியுடன்கல்லாலின் மரத்தின்மேலே பரிவுடனேயே
றியல்லோ பார்க்கும்போது, சுத்தியெங்கும்பார்த்துமல்லோ சிங்கந்தா
னும் சுந்தரனான்பதுபேர் காணலாச்சே. (௧௫)

காணவேசிங்கமது சித்தர்தம்மை கனமானவீரியத்தால் கோபமி
ஞ்சி, தோணவேசிங்கமது யேதுசெய்யும் தோற்றமுடன்காயமது வதி
கங்கொண்டு, பாணம்போல்சிறுநீரை பூமிதன்னில் பள்ளமதாய்ச்செ
ய்துமல்லோ மண்ணைத்தானும், பூணவேமூத்திரத்தில் வாலைவிட்டு
புகழுடனேமண்ணதனைப் பிரட்டலாச்சே. (௧௬)

பிரட்டியேவால்தனிலே மண்ணையேத்தி பின்பக்கமாகவல்லோ
திரும்பியேதான், வரட்டியேவாலதனைத் தூக்கியேதான் வளமையுடன்
மண்ணதனை நோக்கியல்லோ, நூரட்டியேவால்சுழற்றி யெறியும்போது
துப்புறவாய்மண்ணதனை மேலேநோக்கி, மிரட்டியேதானெறிய மண்
தானப்பா மீறியேசித்தரின்மேல் விழுகலாச்சே. (௧௭)

விழுகவேநாற்பத்து யெண்மர்பேரில் விஷமானமண்ணதுவும்மே
லேபட்டு, பழுதுபடாமேனியதில் விஷமுங்கண்டு பாங்குடனேநித்தி
ரைகள் வந்தாற்போலே, நழுகியேசிங்கமது சென்றபின்பு நடுக்கமுட
ன்திரேகமது ஒடுக்கமாகி, முழுதுமேநாற்பத்தி யெண்மர்பேரும் மூ
ழுலகமண்மீதில் விழுந்திட்டாரே. (௧௮)

மண்ணானபூமிதனில் விழுந்தபோது மயக்கமுடன்கண்ணுறங்கி
யிருந்தாற்போலும், திண்ணமுடன்மடிந்தார்கள் சித்தரெல்லாம் தீர்க்க
முடன்வையகத்தைக் கண்டதில்லை, எண்ணியேமரத்தின்மே லிருந்த
தபேர்கள் யெழிலானயிருவருமே யிறங்கியேபின், குண்ணியேமுகம்
வாடி மனமயர்ந்து குவலயத்தில்மடிந்தவரைக் கண்டார்தாமே. (௧௯)

தானானமண்படா திரண்டுபேருஞ் சட்டமுடன்மறம்விட்டுக் கீழி
றங்கி, கோனானசிங்கமது சென்றபின்பு சொற்றவனேயிருவருமே யதி

ந்துகொண்டு, தேனுமைதேனுன்மணியை மனதிலுன்ன தெளிவுடனே புத்தியது மிகவுமாகி, பாணுனசித்துமுனி யிருவர்தாமும் பரிட்சிக்க எண்ணமது கொண்டிட்டாரே. (௪௰)

கொண்டுமேமாரத்தடியை விட்டிறங்கி கொற்றவர்கள்சிங்கத்தின் பள்ளங்கண்டு, விண்டிட வுழுத்திரமாம் பள்ளங்கண்டு விருப்பமுடன் சோதனைகள் செய்யவெண்ணி, கண்டிடவேகரமதனி லிருந்தசெம்மை கட்டமுகர்தாவெடுத்து மண்ணிற்போட, கொண்டதொருசெம்பதுவுந் தங்கமாச்சு கொற்றவனையதின்விஷத்தை யறிந்தார்பாரே. (௪௧)

பாரேதான்விஷமேறி பழுக்கலாச்சு பாங்கான அரியினாலுழுத்திரந்தான், நேரேதான்மண்ணதனில் விஷமுமாகி நேர்மையுடன்சித்தரின்மேல் படிகலாச்சு, சீரேதான்தேகமது புண்ணுமாகி தீர்க்கமுடன் தானிறந்தார் சித்தரெல்லாம், ஆரேதான்கண்டவர்களுலகிலில்லை யப்பனேசித்தர்முனி கண்டார்தானே. (௪௨)

கண்டாரேசித்துமுனி சீஷியர்தாமும் கானகத்தில்நடந்ததொரு வதிசயத்தை, தண்டகமபோல்தான்கண்டு பிரமித்தேங்கி தாரணியில் குளிகைகொண்டு சினந்தன்னில், வண்ணமுடன்சீனபதி மாண்பருக்கு வளமானவதிசயத்தை யெடுத்துக்கூற, திண்ணமுடன்மனதுவந்து மலங்களித்து தீர்க்கமுடன்சீனபதிக் கேகினாரே (௪௩)

போகர் சீனபதிக்குவந்தது.

ஏகவேயின்னமொரு மார்க்கங்கேளு யெழிலானபுலிப்பாணிமணி யேபாரு, சாகமுடன்நெடுங்காலம் வடமேருதன்னில் சட்டமுடன் நானிருந்தேன் வெகுகாலம், பாகமுடன்சிங்கத்தி னதிசயத்தை பாரினிலேயாதாக்கள் கண்டதில்லை, வேகமுடன்யான்கண்டு சீனத்தார்க்கு விருப்பமுடனுபதேசஞ் செய்திட்டேனே. (௪௪)

செய்தேனேவடமேருதன்னிலப்பா சிறப்பானசிங்கத்தின் மகிமைதன்னை, வெய்யபுகழ்சீனபதி மாண்பருக்கு விருப்பமுடனுபதேசஞ்செய்தேன்யானும், மையவேயான்கொண்ட காயகற்பம் பட்சமுடனவர்களுக்குக் கொடுத்தேன்பாரு, துய்யவேசீனபதி மாண்பரெல்லாந் துப்புரவாய்க்காயாதிகொண்டார்பாரே. (௪௫)

பாரேதான்காயாதி கொண்டபின்பு பாங்கானசீனபதி மாண்பர்தம்மில், நேரேதான்சிலதுபேர் ஞானவானாய் நேர்மையுடன்குளிகையது பூண்டுகொண்டு, சீரேதான்வடமேரு கானகத்தில் தீர்க்கமுடன்தான் சென்று காணுதற்கு, வீரேதான்குளிகையது பூண்டுகொண்டு விருப்பமுடன்வடமேருக் கேகினாரே. (௪௬)

ஏகினார்சிங்கமென்ற காட்டகத்தில் எழிலானகாதாக்கள் தன்னைப் போலே, பாகமுடன்காயாதி கொண்டுமல்லோ பக்குவமாய்க்குளிகை விட்டுக்கானகத்தில், சாகமுடன்சிங்கமதைக் கண்டாரங்கே சட்டமுடன்சிங்கமது கெர்ச்சித்தேதான், வேகமுடன்சீனபதி மாண்பர்தம்மை விரூடனேகொல்லுதற்கு வருகலாச்சே. (௪௭)

வருகவேசித்துமுனிதம்மைப்போலே வாகானசீனபதிமாண்பரெல்லாம், பெருகவேகல்லாலின்மரத்தின்மேலே பேரானமுன்னிருந்த சித்துபோலே, சொருபமதைக்கண்டவுடன் மரத்தின்பேரில் சுந்தரனேபார்த்துமல்லோ திகைத்துநின்று, அருவமென்னசிங்கமதைக்கண்டுமல்லோ வப்பனேபிரமித்து நின்றிட்டாரே. (௪௮)

நின்றுமேசித்துமுனி சிஷியர்தாமும் நேரானசிங்கமது கண்டுமேதான், குன்றிடவேதம்மனது உறுதிகொண்டு கூரானசிங்கமதுவே துசெய்யும் மென்றிடவேமுன்போலே மண்ணுலவாரி விட்டெரியசீனபதி மாண்பரெல்லாம், தன்றிடவேகல்லாலின் மரத்தின்பேரில் சட்டமுடன்மேலிருந்து விழுந்தார்தாமே, (௪௯)

தாமானசீனபதி மாண்பரெல்லாம் தகமையுடன்மண்ணதனில் விழுந்துமேதான், பூமான்கள்விஷமதுவுஞ்சகியாமற்றான் புகழானதேகமது சிலிர்த்துமல்லோ, நாமானதந்தேசந்திரிய முள்ளடங்கி நமனுக்கு ஆளாகி பொறிகலங்கி, வேமானமாகவல்லோ மண்ணின்பேரில் விழுந்துமேயிரண்டிருக்கக் கண்டிட்டேனே. (௫௰)

போகர் சீனபதிமாண்பருக்கு சிங்கத்தின்விஷத்தை முறித்து வுயிர்குடுத்தல்.

கண்டேனேசீனபதி மாண்பர்தம்மை கடுகெனவேவிஷமேறி யிருந்தபேர்க்கு, தண்டகம்போல்காயாதி முறிப்புபானும் தகமையுடன்தான்கொடுத்து யெழுப்பியல்லோ, மண்டலங்களுள்ளளவும் சிங்ககற்பம் மடியாமலிருப்பதற்கு மனதுவந்து, விண்டிடவேயான்கொடுத்துவுயிர் கொடுத்தேன் விட்டகுறையிருந்ததினா லெழுந்தார்பாரே. (௫௧)

பாரேதான்சீனபதி மாண்பருக்கு பாங்கானகற்பமுறை யானுஞ் சொல்லி, நேரேதான்பிழைப்பதற்கு வழியுஞ்சொன்னேன் நேர்மையுடன்கருவாளி கண்டுகொள்வார், சீரேதான்சித்தர்முனி மார்க்கந்தன்னை சிறப்புடனேயானுரைத்தேன் மாண்பருக்கு, வேரோதான்மற்றோரால் சொல்லப்போமோ வேதாந்தகாலாங்கி கடாட்சந்தானே. (௫௨)

தானானசினபதி மாண்பரெல்லாந் தகமையுடன்தானெழுந்து முடிவணங்கி, கோனானகாலாங்கி கடாட்சத்தாலே கொற்றவனார்சினபதிமாண்பரெல்லாம், பானானவிட்டகுறை யிருந்துமல்லோ பாங்குடனேயென்றாலே யெழுப்பப்பட்டார், மானானமகதேவர்கடாட்சத்தாலே மறைபொருளையானுமல்லோ வுணர்ந்திட்டேனே. (௫௩)

போகர் உச்சிலிங்கத்தேளைக்கண்டது.

உணர்ந்தேனேயின்னமொரு மார்க்கம்பாரு வுத்தமனேபுலிப்பாணிமைந்தாகேளு, மணங்கமழும்வடகோடி கானகத்தில் மார்க்கமுடன் மகமேரு பக்கந்தன்னே, கணமுடனேயனேகவித தெய்வந்தானும் காட்டகத்தேவாசமது செய்துகொண்டு, பிணம்தனையாபூதிகொள்ளுங்காளி பேரானகாட்டகத்தைக் கண்டேன்தானே. (௫௪)

தானேகேளண்டமுனி யறியாக்காடு தகமையுள்ளவனந்தனிலே திரிந்துயானும், மானேகேள்மகமேரு சாரல்பக்கம் மகத்தானகுன்றானமலையுமுண்டு, தேனானமலைதனிலே வாசஞ்செய்யும் தேளது வுந்திரள்கூட்டஞ் சொல்லொண்ணாது, கோனானதேளதுவின் கூட்டந் தன்னை தேற்றமுடன்கோடிவரை யான்பார்த்தேனே. (௫௫)

பார்த்தேனேசெந்தேளாங் கோடிமார்க்கம் சாங்கமுடன்யுகம்பிரித்துநடக்கும்போது, தீர்த்தலிங்கந்தனிலுதித்த செந்தேளப்பா தீரமுடன்கோடானம் வருகும்போது, ஆர்த்தியுடன்மேலேறி வருகுந்தேளாம் வப்பனேவுச்சிலிங்கத் தேளேயாகும், மூர்த்தியுடன்மும்மூர்த்தி யானபேரும் மூதுலகில்லடங்குவது திண்ணமாமே. (௫௬)

திண்ணமாமுச்சிலிங்கந் தேள்தானப்பா தீர்க்கமுடன்காட்டகத்தே யிருக்கக்கண்டேன், வண்ணமுடன்மலைச்சாரல் காளிகோயில் வளமானதேவதா ஸ்தலமுங்கண்டேன், எண்ணரியகோயிலது மூலஸ்தானம் யெழிலாகவாள்நுழையயிடமுமுண்டு, தண்ணமுடன்காளிதனைக் காணவென்றால் சாங்கமுடன்சுரங்கம்வழி செல்வார்பாரே. (௫௭)

பாரேதான்தேவதா ஸ்தலத்துக்குள்ளே பாங்கானவழியதுவுமூலஸ்தானம், நேரோதான்காளிதனைக் காணவென்றால் நேர்மையுடன்மார்பாலே நகர்ந்துமல்லோ, தீரேதானெண்சாணு விடமுந்தாண்டி தீர்க்கமுடன்காளிதனைக் காணலாகும், கூரேதானதற்கப்பால் காளிவாசம் கொற்றவனேதானிருக்கக் காணலாமே. (௫௮)

சுரங்கத்தில் உச்சிலிங்கத் தேளிருப்பது.

காணலாம்வுச்சிலிங்கத் தேள்தானப்பா கடியதொருசுரங்கமதில் வாசஞ்செய்து, பூணவேநெடுங்காலம் வாசஞ்செய்து யொங்கமுடனி

ருக்குமந்த காலந்தன்னில், நினைவேயவ்விடத்தில் கரிக்கூட்டங்கள் நீதியுடன்சொல்வதற்கு லக்கோயில்லை, ஆணவங்கள்மிஞ்சியல்லோ யானைக்கூட்டம் வப்பனைகணக்குண்டோ சொல்லொண்ணுதே. (ருகூ)

யானை கோனுனைத் துறத்துவது.

ஒண்ணுதுகாட்டகத்தே கோனுன்றுனும் வுத்தமனைமாடுமேய்க்கும்ஸ்தானம், அண்ணுர்ந்துபார்ப்பதற்கு முடிகொள்ளாது வப்பனைபசுக்கூட்டம் மெத்தவுண்டு, கண்ணுலேயானையது கோனுன்றன்னை கடைநோக்கிப்பார்த்தல்லோ சீறலாகி, மண்ணோடே தும்பிக்கையாற்புரண்டி மகத்தானகோனுனைத் துரத்தலாச்சே. (சுய)

ஆச்சப்பாகரியல்லோ கோனுனைத்தான் வப்பனைதுரத்துகின்றவேளைதன்னில், பாச்சலுடன்கோனுனும்ஓட்டங்கொண்டு பதுங்கியேசெல்வதற்கு காளிகோயில், மூச்சடங்கியோடியல்லோ தேவஸ்தானம் முனையானகாளியது மூலஸ்தானம், மாச்சலதுவருவதற்கு முன்னதாக மகத்தானசுரங்கம்வழிச் சென்றுன்தானே. (சுக)

சென்றுரோகோனுனுங் காளிபக்கல் செம்மலுடன்பதுங்கியல்லோ முற்புரத்தில், நின்றுரோகோனுனும் வுடல்நடுங்கி நீதியுடன்காளிபுரம் தன்னில்நிற்க, குன்றேரிவாழுகின்ற யானையப்பா கொற்றவனைசுரங்கம்வழி வருகலாச்சு, வென்றிடவேயானையது தும்பிக்கையால் வீரமுடன்சுரங்கமது நுழையலாச்சே. (சுஉ)

நுழையவேசுரங்கத்தின் வழியிலப்பா நுண்மையுடன்தும்பிக்கை விட்டுமல்லோ, குழையவேதேகமது செல்லாமற்றுன் கொற்றவனோ யானையது நின்றுகொண்டு, தழைமேய்க்குங்கோனுனை தும்பிக்கையால் தட்டாமல்நாற்புறமுந் தடவும்போது, நுழையவேகதிதனக்குயிடமுமில்லை நுட்பமுடன்யிடையூறு நேரலாச்சே. (சுங)

ஆச்சுதேதும்பிக்கை யாலேதானும் வப்பனைகோனுனைத் தேடும்போது, மூச்சடங்கித்தானிருந்து கோனுன்றுனும் முனையானகாளியின்மேல் சிந்தையாகி, மாச்சலதுவாராம லிருந்துகொண்டான் மகத்தானயானையுந்தன் தும்பிதன்னை, வீச்சலுடன்வுச்சிலிங்கத் தேள்தானப்பா வீரமுடன்கொட்டிடவே சத்தமாமே. (சுச)

சத்தமதுகொண்டிடவே யானைதானும் சதுரானமலைதனிலேகேட்கும்போது, முத்திபெறுஞ்சித்தர்களின் கூட்டத்தார்கள் முனையானசத்தமதைக் கேட்டுமேதான், புத்தியுடன்யானையது தன்னையல்லோ புகழானவுச்சிலிங்கத் தேள்தானப்பா, வெத்தியுடன்கொட்டியதோர்தேள்தானென்று வீரமுடன்சித்தர்களு மறிந்திட்டாரே. (சுரு)

அறிந்தாரேஞ்சிலிங்கத் தேள்தானப்பா வப்பனேகரிதனையேகொட்டிற்றென்று, செறிந்துமேமலைதனையே விட்டிறங்கி செம்மலுடன்யானையது பக்கல்வந்தார், குளியானையானையது விஷமுமீறி கொப்பெனவேநெருப்பதுபோ லெறியுதக்கே, மூதியுடனேதந்தமெல்லாம் யற்றியல்லோ முனையானகொழுந்துவிட்டு யெரியலாச்சே. (சுசு)

எரிந்துமேபிரிதிவென்ற சாம்பலாச்சு யெறிலானையானையது மடிந்துபோச்சு, சொரிந்தவொருசாம்பல்தனைசித்தர்கண்டு சோராமலவரவர்கள்பங்குவீதம், புரிந்துமேபங்கதுவும்பகரும்போது புகழானகோணனுஞ் சுரங்கத்தண்டே, வரிந்துமேகோணனை சித்தர்கண்டு வகையுடனேவனுப்பமதைக் கேட்டிட்டாரே. (சுஎ)

கோணன்மீதில் இரக்கம்வைத்து சித்தர்கள்பங்குகொடுத்தது.

கேட்டவுடன்கோணனும் மனமேங்கி கெவனமுடன்சித்தர்கட்குகூறலுற்றான், வாட்டமுடன்மாடு மேய்க்கும்போது வளமானயானையது யென்னைக்கண்டு, தாட்டிகமாய்ச்சீறலது மிகவுண்டாகி சட்டமுடனெந்தனையுந்துரத்தலாச்சு, கோட்டமுடன்யானையது வருகும்போது கொப்பெனவேயான்பயந்து ஓடினேனே. (சுஅ)

ஓடினேன்தங்குதற்கு யிடமில்லாமல் ஓகோகோநாதாக்கள் முனிவரோகேள், தேடியேகாளியது தேவஸ்தானம் தேற்றமுடன்யான்கண்டு மனதுவந்து, வாடியேசுரங்கமது வழியிற்சென்று மகத்தானகாளியின்றன் பக்கல்நின்றேன், நீடியேயானையது யெந்தனைத்தான் நிஷ்களங்கமாகவல்லோ தேடலாச்சே. (சுகூ)

ஆச்சையாசித்துமுனி ரிஷியாரேகேள் ஆங்காரமுள்ளதொரு யானைதானும், மூச்சடங்கித்தும்பிக்கை தன்னினாலே முனையானசுரங்கத்தின் வழியினுள்ளே, பாச்சலுடன்தும்பிக்கை விட்டபோது பாழான சுரங்கமதில் மகிமையேதோ, கூச்சலுடன்வீறிட்டு யெறிந்துமேதான் கொப்பெனவேபிரிதிவென்ற சாம்பலாச்சே. (எய)

சாம்பலாய்ப்போனதொரு சேதிகண்டு சட்டமுடன்சுரங்கமதுவுள்ளிருந்து, தீம்புகளும்நேராது யென்றுசொல்லி நிர்க்கமுடன்வெளியரங்கம் வந்தேனென்றான், வீம்புடையகோணனின்வார்த்தைதன்னை விருப்பமுடன்சித்தர்முனி கேட்டுவந்து, நாமிவனுக்கோருதவி செய்யவென்று நலமுடனேசித்தரெல்லாம் நினைத்திட்டாரே. (எக)

நினைத்துமேவுச்சிலிங்கத் தேவினாலே நிஷ்களங்கமானவொருதிரவியங்கள், சுனைபோலேயேமமென்ற தங்கந்தானும் துப்புரவாய்நந்தமக்கு வாய்த்ததென்று, கனையானகோணனால் வந்தபாக்கியம் காசினியி

ல்சதகோடி சொல்லொண்ணாது. பனையளவுபாக்கியமு மிவனுலாச்ச
பட்சமுடன்சித்தர்முனி யெண்ணினாரே. (எ௨)

எண்ணியேசித்தர்முனி மனதுவந்து யெழிலானகோனனைத் தா
னழைத்து, பண்ணைவேயமென்ற வித்தைதன்னை பட்சமுடனிவனு
க்கோர் பாகமீய்ந்து, வண்ணமுடன்செய்பாகங் கைபாகங்கள் வளமை
யுடன்காண்பித்து விதியுஞ்சொல்லி, சுண்ணமென்றசாம்பல்தன்னையோ
ர்பாகந்தான் சுத்தமுடன்கைகொடுத்துப் போவென்றாரே. (எ௩)

போவென்றுசொல்லியல்லோ முனிவர்தானும் பொங்கமுடன்
கோனனுக் குறுதிகூறி, நாமென்றகாலாங்கி வாக்குபோலே நலமுட
னேஞானோபதேசஞ்செய்து, தாமென்றபிரிதிவிஷஞ் சாம்பல்தன்னைசட்
டமுடன்தான்கொடுத்து மறியுஞ்சொல்லி, வேமென்றகாட்டகத்தேசித்
தர்தாமும் வேகமுடன்குகைதனிலே சென்றிட்டாரே. (எ௪)

சென்றவுடன்கோனனுஞ் சாம்பல்தன்னை செம்மலுடனவர்பதிக்
குக் கொண்டுசென்று, பொன்னானமாற்றதுவுஞ் செம்பிலேற புகழான
செம்பதுவுந் தங்கமாச்சு, மன்னவனைபோலாகக் கோனன்தானும்
மகதேவர்சித்தர்முனி தம்மைப்போலும், தென்னகிராமருடசெல்வம்
போலும் திறளானகோடிவரை பார்த்திட்டானே. (எ௫)

பார்த்தானேசித்தருட மகிமைதன்னால் பாங்கானவேயமென்ற வே
தைதன்னை, சீர்த்தியுடன்முறைசெய்த தபோபலத்தால் சீர்பெற்றான்
கோனனுஞ் சிததுதம்மால், பேர்பெற்றான்கோனனுங் காட்டகத்தில்
பேருலகில்விட்டகுறை யிருந்ததன்னால், தார்வேந்தர்மெச்சிடவே தர
ணிதன்னில் தாமுமொருசிவயோகி போலானானே. (எ௬)

போகர் சதுரகிரிவதிசயத்தை புலிப்பாணிக்குகூறல்.

ஆனேனேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வப்பனேபுலிப்பா
ணி புத்திவானே, கோனனின்கதையுரைத்தேன் மகிமையல்ல கொற்
றவனேயின்னமொரு மகிமைசொல்வேன், தேனானதேவிமனோன்மணி
யாள்பாதம் தேற்றமுடன்யான்வணங்கி கானதசொல்வேன், பானனை
காலாங்கி நாதர்பாதம் பட்சமுடன்யான்வணங்கிப் பகருவேனே. (எஎ)

பகருவேன்புலிப்பாணி மன்னனேகேளீர் பாருலகில்குளிகைகொண்டு
சுத்தியேதான் நிகரமுடன்வையகத்து வதிசயத்தை நீதியுடன்யான்
கண்டு மலையிற்றேடி, சிகரமதுசதுரகிரி மலையிலப்பா சிறப்புடனேயா
னிறங்கி யிருக்குங்காலம், நிகரமுடன்கிரிதனையே சுத்தியல்லோ நீடேழி
காலம்வரை திரிந்திட்டேனே. (எ௮)

பனையளவுசித்தரை போகர் கண்டது.

திரிந்துமேமலையோரந் தன்னிற்சென்று தீர்க்கமுடன்யான்காணு
ம் வேளைதன்னில், புரிந்துமேசிகரமது கிரியில்நின்று புகழானபனைய
ளவு சித்துதாமும், தெரிந்துமேமலையைவிட்டுக்கீழிறங்கி சிறப்புடனே
மாண்பர்களைக் காணும்வண்ணம், செரிந்துமேமகிமையது கோடியுண்
டு தேசமதில்விதியுள்ளான்காண்பார்பாரே. (௭௯)

சதுரகிரிசித்தர் பொதிமாட்டுக்காரரை புகையிலைகேட்டது.

பாரேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் பாலகனேபுலிப்பா
ணி மன்னகேளு, ஆரோதான்பொதிமாட்டுக் காரரப்பா ஆயிரம்பேர்
ஒருகூட்ட மாகக்கூடி, தேரோடும்பாவனைபோல் மாண்பரெல்லாம் தே
ற்றமுடன்மலையோரஞ் செல்லும்போது, சீரோடும்புகயிலையின் வொ
திகைதன்னை சிறப்பானசித்துமுனி கண்டிட்டாரே. (௮௰)

கண்டாரேபுகையிலையின் வாசந்தன்னை பாங்கானபனையளவு சித்
துதானும், கொண்டதொருபுகையிலையி னெண்ணமப்பா கொற்றவனே
மயக்கமது மிகவுண்டாகி, எண்ணமுடன்புகையிலையின் கற்பந்தன்னை
ஏற்றமுடன்குகைபிடிக்க மனதயர்ந்து, வண்ணமுடன்மலையைவிட்டுக்
கீழிறங்கி வளமுடனேவருவதற்கு எண்ணினாரே. (௮௧)

எண்ணியேசித்துமுனி ரிஷியார்தாமும் யெழிலானகிரியைவிட்
டு யிறங்கும்போது, திண்ணதொருபனமரம்போல் தோற்றமாச்சு நிஷ்
களங்கமாகவல்லோ யிறங்கும்போது, தண்ணமுடன்மேற்பரியைவிட்
டுமெல்லோ தாழவேபடிபடியாய் இறங்கும்போது, புண்ணியனார்சித்து
முனி ரிஷியார்தாமும் புகழுடனேயிறங்கிவரக் குறைவானாரே. (௮௨)

குறைவானரோமமென்ற காடிபோலும் கொற்றவனேசித்துமுனி
ரூபங்கண்டார், நிறையானபொதிமாட்டுக் காரரெல்லாம் தீர்க்கமுடன்
சித்துமுனி யிறங்கும்நேர்மை, மறைவாகவாள்ரூபங் குறைந்துகாணும்
மகத்தானரோமமது தெரியவில்லை, முறையானமகுத்துவத்தை யெண்
ணமற்றான் மூர்க்கமுடன்சித்துதமை வசனிப்பாரே. (௮௩)

வசனிக்கபொதிமாட்டுக் காரரெல்லாம் வளமையுடன்ஒருவருக்
கோருவமைகூறி, கிசமுடையபனையளவு சித்துபோலும் நீதியுடன்சி
த்துதமை மதியாமற்றான், புசமுடையதேவாதி சித்துதம்மை புக
ழானமகுத்துவங்களெண்ணமற்றான், கசம்போன்றஆயிரம்பேர் மாண்
பரெல்லாங் கட்டாகவொருவருக்கோர் பேசுவாரே. (௮௪)

பேசுவார்மலையைவிட்டு யிறங்குஞ்சித்தை போனமகத்துவங்க
ளறியர்மற்றான், காசுபணமில்லாத சித்தரென்றும் கருவானசதுரகிரியி

ருக்குமாண்பன், வீசுபுகழ்மகுத்துலங்க ளில்லாரென்றும் வீரமுடனொ
ருவருக்கோ ருகந்துபேசி, ஆசுகவிபோலாக வார்த்தைகூறி வப்பனே
சம்வாதம் செய்வார்தானே. (௮௫)

தானனைபொதிமாட்டுக்காரரெல்லாம் தகமையுடனொருவருக்கோர்
வாதுகூறி, கோனனைகுருவென்று மறியாமற்றான் கொற்றவனைகும்ப
லது மிகவுங்கூடி, தேனனைபுகையிலையின் பொதிகைதன்னை தேற்றமு
டன்தானிறக்கி யழுதுசொல்ல, மானனைசாவடியாங் கிரியோரந்தான்
மகத்தான அமுதுகொள்ள நண்ணுவாரே. (௮௬)

நண்ணியேயேகாந்த கூட்டந்தன்னில் நலமுடனேதானிருக்கும்
வேளையப்பா, திண்ணமுடன்கிரிதனிலே யிருந்தசித்து தீர்க்கமுடன்
மாண்பருட கூட்டந்தன்னில், தண்மையாய்பொதிமாட்டுக் காரர்தம்
மை தகமையுடன்சித்துமுனி யருகிற்சென்று, உண்ணவேபுகையிலை
யின்கற்பமப்பா வுத்தமனேயெனக்கருளு மென்றிட்டாரே. (௮௭)

என்றுமேயேதுரைத்தார் முனிவர்தாமும் யெழிலானமாண்பர்
களின் முகத்தைநோக்கி, குன்றுமேல்சித்துமுனி யொருவருண்டு குவ
லயத்திலொருநாளும் வருவதில்லை, இன்றுமுதல்காற்றினது வாடை
யாலே யெழிலானபுகையிலையின் வாசமப்பா, வென்றிடவேயவர்தமக்கு
காணலாச்சு விட்டகுறையிருந்ததனால் கிடைக்கலாச்சே. (௮௮)

ஆச்சப்பாபொதிமாட்டுக் காரர்பாலா வப்பனேயெந்தனுக்கு மன
துவந்து, மூச்சடங்கித்தானிருக்குஞ் சித்துதானும் முனையானவனைத்து
ரிஷி முனிவருக்கு, பாச்சலென்றபுகையிலையின் கற்பமப்பா பட்சமுட
ன்நீரவர்க்குத் தருவீரானால், மாச்சலென்றவினையகலு முந்தமக்கு மக
யோகபுண்ணியமது கிட்டும்பாரே. (௮௯)

### பொதிமாட்டுக்காரர்கள் சித்தர்பெருமையறியாமல் பகடிசெய்யல்.

பாரேதானென்றலுமே யோகிதானும் பாங்குடனேசித்துமுனிநா
தருக்கு, சீரேதான்புகையிலையின் கற்பந்தானும் சிறப்புடனேயாங்கள
து கொடுப்போமானால், நேரேதானும்மாலே மகிமையென்ன நேர்மை
யுடனெந்தமக்குக் கூறுமென்றார், தீரேதான்சித்துமுனி ரிஷியார்தா
மும் சிறப்புடனேமனதுவந்து கூறுவாரே. (௯௰)

கூறுவார்வாய்திறந்து முனியார்தாமும் கொப்பெனவேபொதிமா
ட்டுக் காரருக்கு, சேறுதலாய்வார்த்தையது கூறும்போது தேற்றமுட
னதிலொருவன் தானெழுந்து, மாறுதலாய்சித்துமுனி தம்மைப்பார்த்

து மகத்தானரிஷியாரே பண்பாய்க்கேளும், ஆறுபுடைசூழ்ந்திருக்கும் நதியோரத்தில் அசோகமென்றவிருக்ஷமது விழுகலாச்சே. (௬௧)

சித்துமுனிசாய்ந்த அசோகமரத்தை நேராய்நிறுத்தல்.

விழுந்ததொருஅசோகமென்ற விருக்ஷந்தன்னை வீறுடனேநிமிர வது செய்வீரானால், பழுதுபடாத்திருமேனி தன்றனக்கு பட்சமுடன் கற்பமது தருவோம்நாதா, வழுதுணையாங்கற்பமது கொண்டபோது மகத்தானசித்துமுனி யெங்களுக்கு முழுதுமேபுகையிலையின் கற்பந் தன்னை முனையாகயாக்கொடுப்போங் காணீர்தானே. (௬௨)

காணவேமாண்பரெல்லாங் கூறும்போது கருவானசித்துமுனி ரிஷியார்தாமும், தோணவேபவர்களுக்கு பிரம்மைதோன்ற துப்புரவாய்சித்துமுனி நாதரல்லோ, வேணதொருசாயாதி கொண்டசித்து வேகமுடனசோகமென்ற விருக்ஷந்தன்னை, பூணவேதானுக்கிபார்த்து மல்லோ புகழானவிருக்ஷமதை நிமிர்த்தினாரே. (௬௩)

நிமிர்த்தவேவிருக்ஷமது தானெழுந்து நீதியுடனிலையூன்றிநிற்கும் போது, சமர்த்துள்ளசித்துமுனி தம்மைக்கண்டு தாரணியிலிம்மகிமை பெரிதுமல்ல, கமர்மேவன்றகானகத்தி லிருக்குங்கல்லாம் கடிதானமலைக்கல்லைத் தன்னைத்தானும், சுமந்துமேயெங்களிடங் கொண்டுவந்து சுத்தரேகொடுத்தாலே நம்புவோமே. (௬௪)

நம்புவோமென்றல்லோ மாண்பரெல்லாம் நயமுடனேவார்த்தை யது மனதுவந்து, வம்புடனேசித்துமுனி தம்மைக்கண்டு வளமுடனே வார்த்தையது கூறும்போது, தெம்புடனேகுண்ணுமலை தன்னைத்தூக்கி தீரமுடன்பொதிமாட்டுக் காரர்முன்னே, கும்பல்தனில்குண்ணதனையிடித்துமல்லோ கொப்பனவேகொண்டல்லோ போட்டிட்டாரே. ()

போட்டாரேசித்துமுனி ரிஷியார்தாமும் பொங்கமுடன்கொண்டு வந்து மாண்பர்முன்னே, நீட்டமுடன்குண்ணதனைக்கொண்டுவந்தநிலை யானவித்தையது மகிமையல்ல, வாட்டமுடன்யின்னமொரு மார்க்கஞ் செய்தால் மகத்தானமகிமையென்று நம்பியல்லோ, கூட்டமுடனுந்த மக்குப் பணிகள்செய்து கொப்பனவேசீஷர்களா யிருப்போம்தானே

தானானவார்த்தையது கேட்டபோது தண்மையுடன்சிவஞான சித்துதாமும், கோனானபொதிமாட்டுக் காரர்தம்மை கொப்பனவேமகிமையது யென்னவேண்டும், தேனானமகிமையதுவேண்டுமானால் தேற்றமுடன்சித்தொளிவுஞ் செய்யக்கூடும், மானானமகாதேவர் கடாட்சத்தாலே மார்க்கமுடன்மகிமையது விதமுண்டே. (௬௭)

பொதிமாட்டுக்காரர் சித்துவை மழைவருவிக்கச்சொன்னது.

தருவேனென்றுசித்துமுனி கூறும்போது தகமையுள்ளபொதி மாட்டுக் காரர்தாமும், குருவானசித்துமுனி சிஷியரோகேள் கொற்ற வீரயெங்களுக்கு யின்றுதானும், பருமழையுமினனேடி காந்தல்தாமு ம் பட்சமுடன்வரவழைப்பீரானாலல்லோ, திருவானகுருவென்று வும் மைத்தானும் திரமுடனென்றென்றும் வந்திப்போமே. (௯௯)

வந்திப்போமும்மையொரு குருவாயெண்ணி மகத்தானதாக்க ஸீர்தானென்னும், சிந்திப்போயசதாகால மர்ச்சித்தேதான் சிருட்டினை சின்மயத்தைமனதிலுன்னி, எந்நாளுந்திரிவாழும் பதாம்புயத்தை யெ ழிலானசற்குருவை மெய்க்குருவென்றெண்ணி, பத்தியெகிரிதனிலே மாண்பரெல்லாம் பாதபடினை சதாசித்த மர்ச்சிப்போமே. (௱)

போமேதான்வார்த்தையது கூறும்போது பொங்கமுடன்வனத்து மகா [illegible]தாமும், [illegible] வனத்திலதானும் தக [illegible], [illegible] ஜோதிபோ லும் அவனியெலாம் [illegible] செய்தார், வேமேதான்பொதிமா ட்டுக் காரரெல்லாம் [illegible] கண்டல்லோ [illegible]தாரே. (௱௧)

[illegible] மாண்பரெல்லாம் போரானசித்துமுனிசிஷியர் [illegible] மனதுவந்துமுடிசாய் த்து [illegible], [illegible] தாரணியிலென் றுரு [illegible] மார்க்கமுட னென்று [illegible] வசனிப்போமே (௱௨)

வசனிப்போந்சற்குரு [illegible] யுடனென்றுரு [illegible] [illegible] சித்தர்களும் [illegible]ங்கமான [illegible] சித்தர்களும் துவாபர [illegible], [illegible] யசின்மயத்தி லிருந்தசித் [illegible]. (௱௩)

கண்டோமே [illegible] காணேயுமைப்போ லொருவரானும், [illegible] மாண்பரெல்லாம் தொ ல்லுலகில் [illegible], வின்னரைசொல்கேளாதவீணர் கோடி [illegible], தண்டரிகமானதொரு சித்துபோலே [illegible] காணேந்தானே. (௱௪)

பொதிமாட்டுக்காரர் புகயிலேகற்பம் குடுத்தது.

தானென்கற்பமது கொடுக்கவேதான் தகமையுள்ளபொதிமாட்டுக் காரரெல்லாம், கோனனகிரிதனிலே யிருக்குஞ்சித்து கொற்றவனூர்மா

யாவின் சித்துவுக்கு, மானுனபுகையிலையின்கற்பந்தன்னை மார்க்கமுடன்
சித்தரவர் கொள்வதற்கு, பானுனமாண்பரெல்லா மொன்றாய்க்கூடி
பட்சமுடனுள்பாரங் கட்டினாரே. (௱௬)

கட்டினார்மாண்பரெல்லா மொன்றாய்க்கூடி கனமானசுமையதுவு
மென்னசொல்வேன், இட்டமுடன்சுமையதனையெடுக்கும்போது வெ
ழிலானசித்துமுனி நயக்கங்கொள்ள, வட்டமுடன்பாலரெல்லா மொன்
றாய்க்கூடி வளமானசித்தருக்கே கொண்டுசென்று, பட்டமரம்போலே
யல்லோ மாண்பரெல்லாம் பாதவித்துநின்றல்லோ பார்த்திட்டாரே. ()

பார்த்தவுடன்மலையில்வந்த சித்தாமும் பாலரெல்லாந்தானடுங்க
கரத்திலேந்தி, தீர்த்தகிரிசிவலிங்கப் பொதியைப்போலும் நிறமுடனே
சுமைதாங்கியேந்திகொண்டு, வார்த்தையதுகூறாமல் மவுனித்து வள
முடனேகிரிதனிலே கொண்டுசென்று, பூர்த்தியுடன்குருபாதந் தன்னை வ
ணங்கி புகழுடனேயஞ்சலிகள் மிகச்செய்தாரே. (௱௭)

செய்யவேசித்துமுனி சீஷர்தாமும் சிறப்புடனேகுருநாதர் மனது
வந்து, துய்யபுகழ்புகையிலையின் கற்பந்தன்னை துப்புரவாய்மனதுவந்
து நாதர்தாமும், வெய்யவேகாயாதி கற்பந்தன்னை வேண்டியேவிருப்ப
முடன் கொடுத்தமாண்பர், பையவேயெவ்விடத்தி லிருப்போரப்பா பா
ன்மையுடனவர்களுக்கு விதிசொல்வீரே. (௱௮)

குருவுத்திரவின்படி சீஷராகியசித்து பொதிமாட்டுக்
காரருக்கு வுபதேசித்தல்.

விதியானகுருமதியி னுபதேசத்தை வித்தகனார்சீஷவர்க்கந் தானு
ங்கேட்டு, மதியானவுபதேசம் மாண்பருக்கு மார்க்கமுடன்செய்வதற்
கு மனதிலெண்ணி, துதியுடனேபொதிமாட்டுக் காரர்தம்மை துப்புர
வாயவர்மனதி லெண்ணங்கொண்டு, நிதியதுவுந்தான்கொடுத்து மாண்
பருக்கு நீதியுடனுபதேச மெண்ணினாரே. (௱௯)

எண்ணியேபொதிமாட்டு மாண்பர்தம்மை யெழிலாகவரவழைக்க
மனதுபூண்டு, வண்ணமுடன்சமாதி பொழியவல்லோ மார்க்கமுடன்
மகதேவர் தனைநினைந்து, திண்ணமுடன்சீஷியாரும் நினைக்கும்போது
தீர்க்கமுடன்பிரளயங்க ளதிகமாகி, எண்ணமுடன்பொதிமாட்டுக்கா
ரரெல்லாம் யெழிலானமலைதனிலே வந்திட்டாரே. (௱௰)

வந்ததொருமாண்பரெல்லாஞ் சித்துதம்மை மகதேவர்முன்னிரு
ந்த சித்தென்றெண்ணி, சொந்தமுடனவர்பாதம் முடிவணங்கி சுந்த
ரரெனவேத்தாரஞ் சென்றோமையா, அந்தமுடன்சமாதி பொழிந்தமல்

லோலையினைப்ரளயங்க ளதிகமாகி, விந்தையுடன்வந்ததொரு யிடையூர்தன்னால் விசனமுடன்மலையேறி வந்தோம்தாமே. (௱௰௧)

வந்தோமேயென்றுசொல்லி மாணபரெல்லாம் வளமுடனேசித்துவுக்கு கூறும்போது, பந்தமுடன்மாணபருக்கு சித்துதாமும் பட்சமுடன்கூறலுற்றார் நாதர்தன்னை, விந்தையதுவுபதேசஞ் செய்வதற்கு வித்தகனார்குருமொழியின் வாக்கதாச்சு, சிந்தனையாயெல்லோரும் வந்திருந்து சிறப்புடனேசித்துமுனி கூறினாரே. (௱௰௨)

கூறினார்சித்துமுனி மாணபருக்கு "குவலயத்தில்நீங்கள்செய்த அறத்தினாலே, மீறியதோர்வுங்களுக்கு வுபதேசங்கள் மிக்கமனுநீதியுடன் குருவின்வாக்கு, தேறியேபலநூலும் ஞானந்தேர்ந்து தேற்றமுடனுங்களுக்கு வுபதேசங்கள், சீறியேகோபமது வாராமற்றான் சிறப்புடனேவுபதேசஞ் செய்தார்பாரே. (௱௰௩)

பாரேதானுபதேசஞ் செய்தவண்ணம் பாருலகில்யாருக்குங் கிட்டாதன்று, நேரேதான்கிரியிலுள்ள வனைப்பும்வாய்ந்து நேர்மையுடன்மநுநீதி கலைக்கியானம், கூறேதான்வேதமுந்த லாறுசாத்திரம் குறிப்பானகலைக்கியான மறுபத்துநான்கு, நீரேதான்மாணபருக்கு வுபதேசித்தார் தீர்க்கமுடன்சித்துமுனி ரிஷியார்தாமே. (௱௰௪)

பொதிமாட்டுக்காரருக்கு ஏமவித்தை காண்பித்தது.

தானானரிஷியாரு மன்புகூர்ந்து தகமையுடன்பொதிமாட்டுக் காரருக்கு, கோனானகுருசொன்ன வாக்குபாதம் குவலயத்தில்யாதொன்றுங் குறைவில்லாமல், மானானமனோன்மணியாள் கடாட்சத்தாலும் மகத்தானகாலாங்கி கிருபையாலும், தேனானதேவர்முனி ரிஷியார்பாதம் தெளிவுடனேவாதமது போதிப்பாரே. (௱௰௫)

போதிக்கவாதமது யேதென்றக்கால் போக்கானமலைதோறுங் குவந்தோறும், ஆதித்தன்சந்திரனார் காணும்வண்ணம் அகஸ்தியனார்மலைமூலி யனைத்துங்காட்டி, வாதிகளுமறியாத மூலிவர்க்கம் வளமையுடன் கிரிமூலி பசுமூலியாவும், வேதிக்குமூலிகளு மனைத்துங்காட்டி வேகமுடனுபதேசஞ் செய்திட்டாரே. (௱௰௬)

செய்துமேயேமமென்ற வித்தைதன்னை செப்பினார்பொதிமாட்டுக் காரருக்கு, கைதவமாய்மூலிகைக்குச் சாபஞ்சொல்லி கபடகற்றிவுளவுமுதல் யாவுங்காட்டி, மையகங்கள்தான்புகழ மாணபருக்கு வண்மையுடன்யேமமென்ற வித்தைதன்னை, துய்யமாய்மாணபருக்கு வுளவுமூலி செப்பினார்நாதரிஷி செப்பினாரே. (௱௰௭)

### பொதிமாட்டிக்காரருக்குக் காண்பித்தமூலியெல்லாம் போகர்-புலிப்பாணிக்குகூறல்.

செப்பவேயின்னமொரு மார்க்கங்கேளு செயலானபுலிப்பாணிமைந்தாபாரு, ஒப்பமுடன்பொதிமாட்டிக் காரர்தாமும் ஓகோகோநாதாக்கள் முனிவருக்கு, தப்பிதங்கள்நேராமல் புகைலேகற்பஞ் சட்டமுடன் தான்கொடுத்த வுபகாரத்தால், செப்பவேபோமென்றமூலிதன்னை செயலாகக்காண்பித்தார் கண்டிட்டேனே. (௱௰௮)

கண்டேனேவனத்திலுட மூலியெல்லாம் கருவாகக்குளிகைகொண்டு கிரியைசுற்றி, விண்டதொருமூலிகையின் பகுப்பையெல்லாம் விருப்பமுடனுந்தமக்கு வுபதேசங்கள், பண்டதுபோல்பாண்பகுத்துச் சொல்வேனப்பா பட்சமுடன்மூலியது பேர்க்குசொல்வேன், சண்டமாருதம்போல செய்வாய்நீயும் சாங்கமுடன்கருமிகட்குச் சொல்லொண்ணாதே. (௱௰௯)

### வசனாமூலி-நேத்ரமாற்று.

சொல்லவென்றுமின்னமொரு மார்க்கங்கேளு ஆய்தானவசனாவென்றமூலிமார்க்கம், புல்லவேலைகுழைச்சோ கொண்டிகைந்து புசமூனமுப்பூவுங் கூடச்சேர்த்து, சொல்லவேதாம்பரமாம் தட்டுக்குமேலே கொப்பெனவேமுப்பூவை குத்தித்தேதான், பெட்டியில்வைத்திட்டுமேல் பூசியேதான் மேன்மையுடன்கோரியன்று படக்கானிட்டே. (௱௨௰)

போட்டதான்புடமதுவுமாந்தப்பாரு பொன்சமுடன்மாற்றதுவுமின்னசொல்வேன், கூட்டதானவெல்லாகநு செந்தூரமுன் கருமூலிகைக்கு மிதிமுதன்மேடா, காட்டதான்மூலவகை யறியமாண்பர் காட்டிலேகட்டலைந்து கெட்டார்கோடி, மாட்டதான்குருமுடிக்கும் வகையுந்தோணார் மட்டிகளாங்கூர்மையில்லா மாண்பர்தாமே. (௱௨௰௧)

### பொன்முட்டை-நிற-மாற்று.

மாண்பானயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் மகத்தானபுலிப்பாணி மன்னுகேளு, காண்பானபொன்முட்டை மூலிதானுங் காடெல்லாந்திரிந்தாலுங் கிடையாதப்பா, மாண்பானகாருநறுநகைகள்கண்டு மடிந்தவர்கள்லக்ஷமில்லை கோடாகோடி, சாண்பாம்புகிளையப்பா மூலிதானும் சட்டமுடனுணிவே சமுகத்திலே. (௱௨௰௨)

ஆணியாம்மூலிகைக்கு மூலமப்பா வப்பவேசாணிதான் சொல்லலாகும், காணிமுதல்காடெல்லாந் திரிந்திட்டாலும் கசடருக்குகிட்டாது கருமிகட்கும், வாணியாஞ்சரஸ்வதியாள் வீற்றிருக்கும் வளமானமூலியது பொன்முட்டை, பாணியதுபூமிவளந் தன்னிலப்பா பாங்கானமூலமது காணுதன்றே. (௱௨௰௩)

அன்றானமூலிகைதான் கொண்டுவந்து வப்பனேமுப்பூவுங்கூட்ச் சேர்த்து, குன்றானசமூலமுடன்கூட்டியல்லோ கொற்றவனேகுழித்த யில மாகக்கொண்டு, வென்றிடவேநவலோக தகட்டின்மேலே வீரமு டன்தைலமதைப் பூசியல்லோ, சென்றிடவேயாண்டமென்ற வோட்டி லப்பா செம்மலுடன்சிலையது வலுவாய்ச்செய்யே. (௱௨௪)

வலுவானசிலையது செய்தபின்பு மகத்தானபுலிப்பாணி மன்னுகே ளு, சுலுவானபுடமதுவுங் கோழியாக துப்புரவாய்ப்போட்டெடுக்கவே மந்தானும், மலுவானதகடதுவும் பழுப்புமேறி மகத்தானமாற்றதுவு மைமதாலும், [illegible] தங்கமப்பா நீதிசொல்லயித ற்கிடு சொல்லொண்ணாதே. (௱௨௫)

பொன்னுவகார-னொ அ-மாற்று,

சொல்லவேயின்[illegible] சுந்தரனேபுலிப்பாணி மன்னுபாரு, [illegible] சொல்லவில்லை வேகார் [illegible]ரு ந் சொல்லவில்லை [illegible] தார்தாமும் புகழ [illegible]திய ருங் கூறவில்லை, [illegible] பூண்டதாலே [illegible] லகா னுமல்லோ [illegible] (௱௨௬)

அறி[illegible]அப்பா வழுவானமலைதோறுஞ் சுனைகள்தோறும், [illegible] னவுபார்த்து செம்மலுட ன்[illegible]போகாமல் தைலமாக்கி மூர் க்க[illegible], [illegible]தொருதயிலமதை யெடுத்துக் கொண்டு [illegible] பூடாயே. (௱௨௭)

பூ[illegible] புகழானநாதாக்கள் கூ றவில்லை, [illegible]போது கனமானமாற்றதுவு மிருநூத்தெட்டு, [illegible] யென்னசொல்வேன் மகத்தானபி ரிதிவென்ற [illegible] நாக்கினுக்காஸ் த்தமனேசு[illegible] (௱௨௮)

பொ[illegible]அ-மாற்று.

தங்க[illegible]சொல்வேன் தகமையுள்ளபுலிப் பாணி மகனேபாரு, [illegible] மத்தையப்பா அழகான மூலியதுங் கொண்[illegible], [illegible]மூலியது வாசகனென்று துப் புரவாய்மூலியது சாற்றினாலே, பொங்கமுடன்மதியென்ற தகட்டிலப்ப புகழாகப்பூசிடவே [illegible] (௱௨௯)

ஏமமாங்காயரதி கொண்ட மூலி யெழிலானக[illegible]கற்ப மூலியாகும் சாமமென்றமூலியதுவர்ணமூலி காக்கானசித்தருண்ணும் மூலியாச்சு

வாம்முடன்மாற்றதுவுமெழு நூற்றெட்டு வளமானசயத்தங்கம்பிறவித்தங்கம், நேமமென்றபூசைக்குக் கருவித்தங்கம் நெடிதானசித்துமுனி மூலியாச்சே. (௭௲)

கறுப்புக்கையாந்தகரை-தாது-மாற்று.

ஆச்சப்பாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வப்பனைபுலிப்பாணி மன்னுகேளு, மூச்சடங்கிநெடுங்காலங் கொண்டசித்து மூதுலகில் யாரேனுங் கண்டதில்லை, பாச்சலென்றமூலியது கறுங்கையானுகும்கதிரோனைக்கண்மறைக்கும் மூலிதானும், மாச்சலென்றமூலியது வதிதஞ் சொல்வேன் மகத்தானமாற்றதுவும் நூற்றெட்டுமாமே. (௭௲௧)

எட்டானமூலியது தலைமையாகும் யெழிலானபூனீறு களஞ்சியாகும், சட்டமுடன்மத்தித்து வெண்ணையாக்கி சதிரானசெம்பென்ற தகட்டிற்பூசி, திட்டமுடன்சில்லிட்டுச் சீலைசெய்து சிறப்பானபுடமதுவுங் கோழியாக, வட்டமுடனறியபின் னெடுத்துப்பாரு மகத்தானதங்கமென்ற செம்புமாமே. (௭௲௨)

செம்பானசெம்பதுவு மென்னசொல்வேன் செழிப்பானதங்கமென்ற செம்புமாச்சு, அம்பொன்னுந்தங்கமென்ற செம்புதன்னை வப்பனை மதிதனிலே நூற்றுக்கொன்று, கும்பிடவேதானுருக்கி குருவொன்றிய குற்றமற்றமதியதுவுந் தங்கமாச்சு, வெம்பியதோர்விஷமதுவுந் தீண்டினாற்போல் வேதாந்தசித்தினுட தங்கங்காணே. (௭௲௩)

காணவேதங்கமதை யென்னசொல்வேன் கைலாசநாதருந்தான் காணமாட்டார், பூணவேசயத்தங்கம் பிறவித்தங்கம் புகழானநாதாக்கள் செய்யுந்தங்கம், ஆணவங்கள்காமியங்க ளொடுக்குந்தங்கம் அரகராயித்தங்க மென்னசொல்வேன், வேணதொருநாதாக்கள் பாடுபட்டு வேதைமுகங்காணமல் மறைத்திட்டாரே. (௭௲௪)

மறைத்தாரேயித்தங்க மாருக்கென்றால் மகத்தானசிவயோகி ஞானிகட்கும், குறைந்ததங்கமானாலே வையகத்தில் கொற்றவர்கள்மாண்பருக்கு விதியாகும், நிறைந்ததொருபரிபூரண தங்கமப்பா நீதியுள்ள ஞானிகட்குஞ் சிவயோகிக்கும், சிறைகொண்டுகானத்தில் வாழுஞ்சித்தர் சீரானதேவரிஷி வாய்க்குந்தானே. (௭௲௫)

வாய்க்குமேமற்றவர்க்கு சித்தியில்லை மகத்தானகொற்றவருங் கண்டதில்லை, காய்க்குமேயிம்மூலி வேதைதன்னை காசினியிலாருக்குங் கிட்டாதப்பா, தோய்க்கமலம்வீற்றிருக்குமம்பாள்பாதம் தொழுதுமேபணிந்துநித்தஞ் சதாகாலந்தான், சேய்போலேயம்பாட்குப் பணிகள்செய்து சித்தம்வரமனதுவந்து நடந்துகொள்ளே. (௭௲௬)

சிறியாநங்கை-௩௪-மாற்று

கொள்ளவேயின்னமொரு வதிதஞ்சொல்வேன் கூரானபுலிப்பாணி மகனேகேளு, எள்ளளவுங்கோளாறுநேராமற்றான் மெழிலானகானகத்தின் மூலிகண்டேன், மெள்ளவேசிறியானின் நங்கைதன்னை மேன்மையுடன்கொண்டுவந்து கூறக்கேளும், விள்ளவேமூலியது சாற்றிலப்பா வீரமுடன்சூதமதைத் தாக்கிடாயே. (௱௩௭)

நாகவேதை.

தாக்கவேசூதமென்ற சரத்தைத்தானுந் தண்மையுள்ளநாதமதில் தன்னிலூட்ட, நோக்கமுடன்நாகமது கண்ணடைந்து நொருங்கியே சவளையது போலேயாகும், ஊக்கமுடன்சவளைதனை யெடுத்துமைந்தா ஓகோகோநாதாக்கள் சொன்னநீதி, தூங்கமதுகொள்ளாமல் செம்பிலப்பா துப்புரவாய்நூற்றுக்கு ஒன்றுதாக்கே. (௱௩௮)

ஒன்றானசவளையது கொடுத்தபோது வுத்தமனேமாற்றதுவு மென்னசொல்வேன், வென்றிடவேமாற்றதுவு மீறுபத்துநான்கு வேதாந்தத்தாயாரு முரைத்தநீதி குன்றினில்வாழ்சித்தர்முனி கூறுரப்பா குவலயத்திலுந்தனுக்கா யுரைப்பேன்யானும், சென்றிடவேநெடுங்காலம மலையில்கார்த்து செம்மலுடன்வாங்கியதோர் வேதைபாரே. (௱௩௯)

பாரேதான்சிறியானின நங்கைவேதை பாருலகில்யார்செய்வார் மாண்பரப்பா, நேரேதான்நாதாக்கள் செய்யும்வேதை நேர்மையுடன் கண்டறிந்து மனதுவந்து, நீரேதானுந்தமக்கு மனங்களித்து தீர்க்கமுடன்யான்கொடுத்த வேதைதன்னை, சீரேதான்மற்றவருங் காணாமற்றான் சீருலகில்புத்திவானாய் வாழ்வீர்தாமே. (௱௪௰)

பெரியாநங்கை-௱௨௮-மாற்று.

வாழவேயின்னமொரு வதிதஞ்சொல்வேன் மகத்தானபுலிப்பாணி யதிதவாளே, தாழவேபெரியானின்மூலியப்பா தாரணியில்சித்தர்களுங் காணமாட்டார், மூழவேகண்டாலுங் கூறமாட்டார் முனையானமூலிதனை மறைத்தாப்போவார், சூழவேகானகத்திலிருக்குமூலி சுடர்மூலி விடமூலிசுருதியாமே. (௱௪௧)

கருதியாம்மூலியுட வேகந்தன்னை சந்தானேயென்னசொல்வேன் மச்சேந்திரா, கிருதியாங்காடெல்லாந் திரிந்தாலுந்தன் நிஷ்களங்கமானதொரு மூலிதன்னை, ஞருதியாம்மூலி நிறமேயாகும் குவலயத்தில் கண்டவர்கள்விளாமரப்பா, பருதிமதிகாணாத விருட்சத்தின்கீழ் படர்ந்துமேதானிருக்கு மூலியாமே. (௱௪௨)

மூலியாந்தழையதனைக் கொண்டுவந்து முனையானரசமதுவுந் துலமேயாகும், நாலிலோர்பங்கதுவுஞ் சூதந்தன்னை நலமுடனேதான்கூட்டி மத்தித்தேதான், வேலியெனும்வீரமதைக் கால்தான்கூட்டி வேகமுடன்குழைத்துமன்றுகேளு, பாலியெனும்பரித்தகட்டிற்பூசியேதான் பாங்காகஒட்டிவிட்டுச் சீலைசெய்யே. (௬௪௩)

சீலையதுசெய்தபின்பு ரவியில்வைத்து சிறப்பானகோழியென்ற புடத்தைப்போடு, வேலையெனும்புடமதுவு மாறிப்பின்பு வேதாந்தத்தாயதனை மனதிலுன்னி, நாலையதுவரான்முறையாய்த் தொகுப்புங்கண்டு நுட்பமுடன்கைபாகஞ் செய்பாகந்தான், மாலையுடன்புடமாறி யெடுத்துப்பாரு மகத்தானயேமமது களங்கமாச்சே. (௬௪௪)

ஏமமென்றகளங்கதனை யெடுத்துமைந்தா பெரிதான வெள்ளிதனில் நூற்றுக்கொன்று, வாமமுடன்தானுருக்கி யுருக்கொடுத்திய மகத்தான தெள்ளியது யேமமாச்சு, நாலெட்டுமாற்றுவெள்ளியது சிறவித்தங்கம் நாதாக்கள்கண்டதொரு நாகத்தங்கம், ஆமமென்றதங்கமது வர்ணத்தங்கம் வப்பனைமூலிகையின் பெருமையாமே. (௬௪௫)

பெருமையாயினைகவித [illegible] முனிவேண்டும், கருமமதுதானகற் [illegible] காமினியில்நிற்கது போல் பெயருங்கொண்டு, [illegible] வல்லபுடனேயேவலது பிசுப்புரிந்து, [illegible] வுலகமதில்பெயருண்டாய் வாழ்ந்திருப்பீரே. (௬௪௬)

தானானமாற்றதுவும் [illegible] தன்மையுள்ளநாதாக்கள் செய்யுந்தங்கம், கோனான [illegible] முனி [illegible] கூறினார்வெகு கோடி நூலிலப்பா, தேனான [illegible] கூட்டத்தாலே தேற்றமுடன்கண்டறிந்த வேதைதன்னை, மானான [illegible] புண்ணியத்தால் மகிழ்ச்சியுடனன்றாக மனங்கொள்வீரே. (௬௪௭)

மனமுடனேசிதாபாசம் மனதிலுன்னி மார்க்கமுடன்மதியமூர்த்தங் கொண்டுமேலே, தனலதுவும் [illegible] யோகந்தன்னில் தழைத்தியுடன்சிவயோக நிலையில்நின்று, குணமுடனேதிரிகரண சொரூபமாக குவலயத்திலஷ்டாங்க யோகங்கண்டு, வணங்கியேயஷ்டசீலை பரியைக் கண்டு வாமமுடனர்ச்சித்து வலுகொள்வீரே. (௬௪௮)

உண்டானவித்தையது வனேகமுண்டு வுத்தமனேபார்க்கவென்
றால் கண்கொள்ளாது, இண்டானவித்தையது சொல்வீரானால் நிரமு
டன்செய்வதற்கு வையமில்லை, பண்டானகுலைகளவுயில்லாவித்தை பட்
சமுடனெந்தமக்குச் சொல்வீரானால், வண்மையுடன்செய்துமல்லோ
வுந்தமக்கு வளமையுடன்காட்டியது தருவேன்பாரே. (கூஅ)

கறுப்புக்கோடாசுழி-ருய-மாற்று.

கொள்ளைவயின்னமொரு குணமும்சொல்வேன் கூரானபுலிப்பா
ணிபுளிதவானே, விள்ளவேகாடெல்லாம் ..ரிந்தாலுந்தான் விட்டகு
றையிருந்தாலே லபிக்கும்பாரு, வெள்ளாம.. ..டாலே யழியுமுலி வே
தாந்தத்தாயிருந்து ஏறியப்பா, என்னளவுங்குற்றமது நோமுலி யெ
ழிலானகறுப்புக்கோடாவாமே. (௱சகூ)

கோடானசுழியென்ற முலியப்பா கொற்றவனேகொண்டுவந்துசொ
ல்லக்கேளும், தாடானமூலரசம் சூலியையாரும் தாக்கானவீரமது வி
ராகனென்று, கூடானகுதமது விராகனென்று கொற்றவனேமுன்னை
யுந்தானென்றாய்க்கூட்டி, வாடாமல்வெண்ணையது போலரைத்து வ
ளமானசெப்பதனில் பூசிடாயே. (௱ருய)

பூசவேயமைவைச் செம்புதனிலே பிறகுகலைத்துக் காய்ந்தபி
ன்பு, வாசமுடன்கிரியாட்டு ..மைத்த ..மையுடன்..விட்டுச்
சீலைசெய்து பாசமதாகவே ரவிதனிலைத்து பட்சமுடன்கோழியெ
ன்றபுடத்தைப்போடு, நேசமென்றதமது சேர்ந்ததாலே கொற்றவ
னேசெய்யதாலும் வரணமாச்சே. (௱ருக)

ஆச்சப்பா செம்பதுவும் வரணமீறி யப்பனேமாற்றதுவு மைம்ப
தாகும், மாச்சமென்றதனிற்பதுவும் விட்டகன்று மகத்தானசெம்பது
வும் பழுப்புமீறி, காச்சலுடன்நிறைசவி கனிபோலேதான் சடகற்றி
சவனையுடனுருகல்லாதி, ஆச்சரியமானதொரு ..டங்காய்ப்பு வப்ப
னேகரகரப்புடனேயப்பு காணே. (௱ருஉ)

தானென்றவிலியென்ற தங்கம்போலே தன்மையுள்ளகுற்றமதுநீங்
கியேதான், கோனனகுருத்தங்கம் பிறவித்தங்கம் குலையத்தில்நாதாக்
கள் செய்யுந்தங்கம், மானனமகமேரு வானதங்கம் மகத்தானமுலியுட
காரசாரம், தேனனபரிசமது பட்டபோது தெளிவான வுறுதியென்ற
தங்கந்தானே. (௱ருங)

தங்கமாமதிதனிலே நாற்றுக்கொன்று தாக்கடாசோடசமுங் கா
ணுங்காணும், வங்கமாய்ப்பரிபோவி யானவங்கம் வளமானவரணமதைக்

கொல்லாதப்பா, புங்கமாமஷ்டசித்தி யிதற்குள்ளாகும் புகழானதங்கமது பிறவித்தங்கம், பங்கமதுவாராது நாததங்கம் பாருலகில்மாண்பருக்குக் கிட்டாதன்றே. (௱௫௪)

அன்றானவிதியாளி வருவானானால் அவனுக்கேகிட்டுமது மற்றோர்க்கில்லை, குன்றானமலைகாடு தேசந்தன்னில் கொற்றவருஞ்சிவயோகி மாண்பருண்டு, தென்றிசையிலகஸ்தியனார் மலையிலப்பா திரளுடன்சென்றுவந்தோர் கோடியுண்டு, வென்றிடவேயவர்களிலுங் கருமியுண்டு வேதாந்தசிவயோகி தானுமுண்டே. (௱௫௫)

உண்டானமனோலயத்தை யறிந்துகொண்டு வுத்தமனேநால்பார்த்த வாதிகண்டு, கண்டாலும்வில்லாத காலியாளர் கசடகற்றிமனம் பொருந்தி கருத்திலுள்ளி, அண்டர்முனி தேவாதி ரிஷிகட்கொப்பாய் வப்பனேமுற்பவத்தை யகற்றிவாழும், சண்டமெனும்மாருதம்போல் பாசம்விட்டு சட்டமுடன்வாழுகின்ற யோகியாமே. (௱௫௬)

யோகிபார்த்ததுவத்தில் யிருந்தவானாய் யோகமெனும்பதிதனக்கு வுகந்தசீஷன், போகமதுதானகற்றி பொறுத்துவாழும் பொங்கமுடன் ஞானமென்ற மாண்பர்கண்டு, ரோகமதுயில்லாத புண்ணியவானாய் நொடிக்குள்ளேபகுத்தறிவு கொண்டதீரன், சாகமதுநேராத சீஷன் கண்டு சட்டமுடனுபதேசஞ் செய்குவீரே. (௱௫௭)

சிகப்புசித்திரமூலம்-உரு-மாற்று.

செய்யவேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் செயலானபுலிப்பாணி வதிகவானே, துய்யதமிழ்ப்பாண்டியனுக் கொப்பதான துரைராஜசுந்தரனே புகலக்கேளீர், வையகந்தான்புகழும் வனாந்திரத்தில் வண்மையுள்ளசிவர்த்தகொடி வேலியப்பா, மெய்யானமலைதனிலே மெத்தவுண்டு மேதினியோர்காண்பதுவு மரிதுபாரே. (௱௫௮)

பாரேதான்மலைதனிலே சுற்றம்போது பாங்கானபாறையின்றனை வெடிப்பில்தன்னில், நேரேதான்விளைந்திருக்குஞ் சிவந்தமூலி நெடிதானகொடிவேலி யென்னலாகும், சீரேதான்கொடிவேலி கனையெடுத்து சிறப்புடனேசூதமதை யெடுத்துமைந்தா, நேரேதான்வீரமது களஞ்சிகூட்டி நீதியுடன்மத்தித்து ரவியிற்போடே. (௱௫௯)

போடவேசிலையது வலுவாய்ச்செய்து பொங்கமுடன்கனயெருவிற்புடத்தைப்போடு, நீடவேபுடமாறி யெடுத்துப்பாரு நிலையானசெம்பதுவு மென்னசொல்வேன், கூடவேசெம்புதனை பதனம்பண்ணு கொற்றவனேகலசகுண்டலத்துக்காகும், ஆடவேமாற்றதுவு மிருபத்தைந்து வப்பனேகுங்குமப்பூ நிறமுமாச்சே. (௱௬௰)

ஆச்சுதென்றுவிடுகாதே பின்னங்கேளு ஆகாகாநாதாக்கள் மறைத்தஜோதி, வாச்சுதேசிவயோகக் குகந்ததங்கம் வர்ணதங்கமிதற்கல்லோ யிடாமோதான், போச்சுதென்றுவிடுகாதே புண்ணியவானே புகழ்நாதாக்களாடுங்கூத்து, காச்சுதேசிவந்தசித்திரமாமூலி கனகமென்றுவேதையது கைக்குள்ளாச்சே. (௱௯௧)

உள்ளானபொருளெல்லாம் பிடித்தேயும் உத்தமனேநாதாக்கள் கூறுரைப்பார், கள்ளமின்றிநோக்காத யெமகித்தைக் காசினியில்சித்துமுனி செய்யுமார்க்கம், எள்ளளவும்பிசகாதும் வாராதப்பா யெழிலானவித்தையது யென்னசொல்வேன், கொள்ளைகொண்டகுருவின்னது வாக்குதானும் குவலயத்தில்பொய்யாது மெய்யதாமே. (௱௯௨)

மெய்யானசிவந்தசித்திர மாமூலி மேதினியில்வெகுமாண்பர் கண்ணுமற்றான், பொய்யதாமூலிதன்னை மெய்யென்றெண்ணி போக்குமுடன் கெட்டலைந்தார் கோடிகோடி, துய்யநற்சிமிழ்சாத்திரங்கள் கூறும்வண்ணம் துப்புரவாய்த்தலைமாறி கல்மடாக, செய்யதொருகாப்பேடு பாரமற்றான் சென்றிரண்மாண்பர்களும் கெட்டார்தாமே. (௱௯௩)

மேற்படி மூலிகற்பம்.

கெட்டாரேசிவந்தசித்திரமாமூலி கெடியானவையகத்தில்காணுமற்றான், பட்டலைந்துமலைவனங்கள் குன்றுசாடி பாருலகில்தேடியல்லோ காணுமற்றான், அட்டதிக்கெங்குமேதினியில் வன்பானமூலிதனைக் கண்டுபிடித்து, விட்டகுறையிருந்ததொரு தன்மையாலே மேதினியில்சிலபேர்கள் கண்டார்தாமே. (௱௯௪)

கண்டாரேகாலாங்கி திருவையாலே காசினியில்நாதாக்களிருக்கும்ஸ்தானம், தொண்டுபிசெய்கல்லோ மூலிதன்னை தோற்றமல்மனதுவந்து கற்பங்கொள்ள, அண்டமாருதம்போலே மூலிகற்பம் சாங்கமுடனின்றுவேளை யுண்டுமல்லோ, வண்டுமூசிக்கோட்டம்போல் வரணங்கொண்டு வையகத்தில்வெகுமாண்ப ரிருந்தார்தானே. (௱௯௫)

தாணுமூலியது கொண்டபோது தாக்கானவாசியது திமுநோக்காகும், கோணுகுருநாதர் சொன்னவாக்கு குவலயத்தில்பொய்யாமல் மெய்யென்றெண்ணி, தேனுசிலப்பு சித்திரமாங்கற்பம் தேசமதில் கோடானகோடிபேர்கள், மாணுமலைவனத்தி லிருந்துகொண்டு மார்க்கமுடன்கற்பமது கொண்டிட்டாரே. (௱௯௬)

கற்பமாஞ்சித்திரமாமூலிகற்பம் கனமுடனேயுண்டவர்க்கு வயதே சொல்வேன், சொற்பமென்றுயெண்ணாதே தூய்யபாலா செர்ணம்

பேர்ல்தேகமது மின்னும்பாரு, விற்பனமுமிகவுண்டா மறிவுமுண்டா விருத்தமதுவாராது பாலன்போலாம், அற்பமென்றுநினையாதே யறிய பாலா வாயிரமாம்வருடமது யிருக்கலாமே. (எசுஎ)

இருக்கவென்றுலுலகுபதி சித்தாமும் யெழிலுடனேநெடுங்கால மிருந்தசித்தும், பொருக்கவேகாயாதி கற்பங்கொண்டு பொன்னுலகுபதிதனிலே சேர்ந்தாரப்பா, வருக்கமுடன்வெகுகோடி சித்தாமும் வளமானமூலிகற்பங் கொண்டுமேதான். திருக்கமலம்வீற்றிருக்கு மம்பாள்பாதம் தீர்க்கமுடனெடுங்கால மிருந்தார்பாரே. (எசுஅ)

போகர் புலிப்பாணிக்கு பொய் இன்னதென்றுகூறல்;

பாரேதானின்னமொரு பண்புசொல்வேன் பாங்கானபுலிப்பாணி பாக்கியவானே, நேரேதானுலகுபதி மாண்பரெல்லாம் நேர்தானபொய்யதனை நகரும்நேர்மை, நேரேதான்யான்தெய்வ மென்பார்தானும் நிறைவானசார்வாகம் பொய்யேயாகும், கூறேதான்தான்கடவு ளெனுமதும் பொய் குவலயத்தில் தெய்வமில்லை யென்பார்தாமே. (எசுகூ)

தாமான யோகமது பொய்யேயாகும் சகலகலையறிவதுவும் பொய்யேயாகும், நலமானமோகனங்கள் பொய்யேயாகும் நலமானவசியமுதல் மாற்றம்பொய்யே, வேமானமுள்ளதொரு வுச்சாடணங்கள் வெகுவிதட்டுகலைதிரட்டு மேதினிக்குள், சாமானியமானதொரு தேவரங்கம்சட்டமுடன்வரவழைத்தல் பொய்யதாமே. (எஎ௦)

பொய்யானசெப்பிடிகள் வித்தைபொய்யே பொங்கமுடன்தூலங்கள் செல்லல்பொய்யே, துய்யதெஜகரணமது சுத்தம்பொய்யே துப்புரவாய்க்குளிசங்க ளெல்லாம்பொய்யே, வெய்யபுசழ்தேகமது தானும் பொய்யே மேதினியிலிருப்பவரும் பொய்யேயாகும், வையவருமுலகமதி லெல்லாம்பொய்யே காதாக்கள்சொல்லுமுறை சிலபொய்தானே. ()

போகர் புலிப்பாணிக்கு மெய்கூறல்.

தானனபுலிப்பாணி தார்வேந்தனே தன்மையுடன்சொல்லுகிறேன் தருமவானே, கோனேதானுலகுபதி மாண்பரெல்லாம் கோர்வையுடன்பலநூலுங் கற்றுமென்ன, வீணேதான்பொய்மெய்யு மறியாமலன்பர் விருதாவாய்சிவயோகஞ் செய்துகொண்டு, காணுமல்வையகத்திலுண்மைதன்னை கசடகற்றிமெய்யறிய மறந்தார்பாரே. (எஎஉ)

பாரேதான்வையகத்தில் தெய்வமுண்டு பாங்கானமோக்ஷமென்ற வீடுமுண்டு, நேரேதான்பாவிகட்கு நரகமுண்டு நீடாழியுலகமதுவழிவதுண்டு, சீரேதான்வாதமது மெய்யேயாகும் சிறப்பானகுளிகையதுமெ

ய்யேயாகும், வீரதான்கற்பமது மெய்யேயாகும் விருப்பமுடன்யிறப் பதுவும் மெய்யதாச்சே. (௱௭௩)

நன்னாரி கற்பம்.

ஆச்சப்பாபுலிப்பாணி புனிதவானே அவனிதனிலின்னமுண்டு கற்பங்கேளீர், மாச்சலென்றநன்னாரி கற்பமப்பா மகத்தானகற்பமதை ஆண்டுகொண்டால், பாச்சலென்றவுதிரமது விஷங்களுது பாங்கான தேகமது கனலேராது, வீச்சுடனேநேத்திரங்கள் குளிர்ந்துகாணும் வீரானசுவாசமது கீழ்நோக்காமே. (௱௭௪)

நோக்கானமுலிகையாங் கற்பங்களில் நுணுக்கமுள்ளமாண்பர் களுங் கொண்டுவந்து தாக்கானமதியமுர்தம்பூண்டுகொண்டு வண்மை யுடன்தவநிலைக்கு வுறுதிகொண்டு, வாக்குமனம்சித்தமா காயம்பொங்கி வளமையுடன்வாயிது கீழ்நோக்கி, தேக்கமுடன்சிவயோக பதியிற் சென்று தேற்றமுடன்நெடுங்கால மிருக்கலாமே. (௱௭௫)

கற்பமுண்பவர்க்கு யோமித்தி லிங்கப்போக்கு.

இருக்கவேயின்னமொரு மருந்துவந்தான் யெழிலானபுலிப்பாணி இலர்தவனே. பொருக்கவேகாயாதி கொண்டோர்க்கு பொங்கமுடன் ஜீவனத்துக் கிடமேதென்றால், நிருக்கையிலேகானிருக்குஞ் சிவஞரா ணை நிர்க்கமுடன்வாகமது புகலக்கேளும், பெருக்கமுடன்காலாங்கிநா தர்பாதம் பெருமையுடன்யானனந்தி கூறுவேனே. (௱௭௬)

கூறுவேன்ஜாதிலிங்கம் பலந்தானொன்று கொற்றவனேமுலைப்பா லி னூரப்போடு, தேறுதலாய்நாப்பேமுது மானமின்பு தெளிவிருத்து லிங்கமதை யெடுத்துமைந்தா, மாறுபடாயெறிாலன் பாலையப்பா மார் க்கமுடனென்சாருஞ் சுருக்குதாக்கு, வீறுடையகுமரியின்றன் பாலால் தானும் விருப்பமுடநாற்சாமஞ் சுருக்குதாக்கே. (௱௭௭)

தாக்கானலிங்கமதை யெடுத்துபால தன்மையுடனாதா ரச்சா க்காம், போக்கானசரக்குதுவு மேதென்றக்கால் பொங்கமுடன்துருசு வெடி யுப்புக்காரம், நோக்கானசாரமுடன்சினந்தானும் நுண்மையுள் ளகரியுப்பு கூடச்சேர்த்து, வாக்கதுவும்பிசகாது வண்ணமப்பா வள மையுடன்திரீராஞ்செயநீர்தானே. (௱௭௮)

தானெவாராதா ரச்சரக்கால் தாரணிபிலண்டபிண்டந் தானுமா ச்சு, கோனுனகுருவருளுங் காணலாகும் கொப்பெனவேசத்திசிவ மா நிற்காண்பீர், பானுனெங்குரக் கட்டிப்போக்கும் பாங்கானகளங்குமு த லிதனலாகும், தேனுனதேவிமனோன் மணியாள்பாதந் தேர்ந்தெடுத் தவாராதா ரந்தான்பாரே. (௱௭௯)

